28°c
கூடிய வெப்பநிலை 32°c
குறைந்த வெப்பநிலை 26°c
மேக மூட்டம், மழையுடன் கூடிய காலநிலை

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

வலி. தெற்கு பிரதேச சபை
08 MAY 2014

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 163 வள்ளுவர் ஆண்டு: 2045 சித்திரை 25, வியாழன் 08.05.2014

# பொது இடங்களில் மே 18 நினைவேந்தக் கடும் தடை

## இராணுவம் திட்டவட்டம்; யாழ். பல்கலையிலும் எந்த நிகழ்வும் நடத்த முடியாது என அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 8
இறுதிப் போரில் உயிரிழந்த மக்களுக்காக நினைவேந்தல் நிகழ்வுகளை - முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் போன்ற பொது இடங்களில் நடத்த ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று இராணுவம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்



உதய பெரேரா

ளது. தான் பதவியில் இருக்கும் வரையில் அத்தகைய நிகழ்வுகள் எதனையும் கிஞ்சித்தும் அனுமதிக்கமாட்டார் என்று இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா நேற்று உறுதிபடத் தெரிவித்தார்.
யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், மாணவர் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை காங்கேசன்துறைக்கு அழைத்துப் பேசினார் கட்டளைத் தளபதி. அதன்போதே, உயிரிழந்த மக்களுக்கு பொது இடங்களில் அஞ்சலி செலுத்த அனுமதிக்கமாட்டார் என்று அவர் ஆணித்தரமாகக் கூறினார்.
காங்கேசன்துறை கரையோரத்தில் இராணுவத்தினரால்

21ஆம் பக்கம் பார்க்க

## வெருகலில் அமைதி திரும்பவில்லை

யாழ்ப்பாணம், மே 8
திருகோணமலையின் வெருகல் பிரதேச செயலர் பிரிவில், நேற்று இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு, பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது என்று கூறப்படுகின்றது.
திருகோணமலை கடற்படை முகாம் அமைந்துள்ள ஈச்சிலம்பத்தைப் பிரதேசத்தில் இனந்தெரியாதோரின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டதை அடுத்து, அங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து முப்படையினரும் இணைந்து நேற்றுமுன்தினம் அந்தப் பகுதி எங்கும் பெருமெடுப்பிலான


21ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் தமிழர் இங்கு முதலிட முன்வர வேண்டும்

### இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புக்கு அதுவே சிறந்த வழி என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், மே 8
யாழ்.மாவட்டத்தின் பல்வேறு துறைகளிலும் முதலீடுகளை மேற்கொள்வதற்குப் புலம்பெயர் தமிழர்கள் முன்வர வேண்டும்.
அதற்குத்தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு நாம் தயராக இருக்கின்றோம். அவ்வாறான முதலீடுகள் மூலம் இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கக் கூடிய ஏதுநிலை உருவாகும்- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.
நேற்று வெளிநாடுகளுக்கான

21ஆம் பக்கம் பார்க்க



வெளிநாடுகளுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 12 இலங்கைத் தூதுவர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்கள் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை அவதானித்ததுடன், இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிட்டனர். அதில் ஒரு அங்கமாக யாழ். பொதுநூலகத்தைச் சுற்றிப் பார்த்ததுடன், யாழ்.மாவட்ட செயலத்தில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டனர். (ந-21)

விரிவான தகவல் 2 ஆம் பக்கத்தில்

## மீளவும் எழுகின்றது வடக்கின் பொருளாதாரம்

யாழ்ப்பாணம், மே 8
கடந்த ஆண்டு சரிவைச் சந்தித்திருந்த வடக்கின் பொருளாதாரத்தில், இந்த ஆண்டின் முதலாவது காலாண்டில் மீளெழும்புவதற்கான அறிகுறிகள் காணப்

21ஆம் பக்கம் பார்க்க

## இரு சிறுவரை ஏற்க மறுத்தது புழல் சிறை

இராமேஸ்வரம், மே 8
முல்லைத்தீவில் இருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றவர்களில், புழல் சிறையில் அடைக்கப்பட்ட இருவர் நேற்று மீளவும் இராமேஸ்வரம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

21ஆம் பக்கம் பார்க்க

## ‘திடீர்’ வேலைவாய்ப்பு குறித்து அரச அதிபருக்குத் தெரியாது

### முறையிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், மே 8
ஓட்டோவில் அறிவிக்கப்பட்டும், அநாமதேய துண்டுபிரசுங்கள் மூலமும் அறிவிக்கப்பட்டு வழங்கப்படும் அரச வேலை வாய்ப்புகள் குறித்து எதுவுமே தெரியாது. அது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.
யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக ஓட்டோ மூலமும், அநாமதேய துண்டுபிரசுங்கள் மூலமும் அறிவிக்கப்பட்டு திடுதிடுப்பென அரச வேலை வாய்ப்புகள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள், மேசன்,

21ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி வேட்பாளராக விக்னேஸ்வரன் தடை என்ன என்பதை பகிரங்கமாக்குங்கள்

### பிரதான எதிர்க்கட்சிகளிடம் கேட்கிறார் சுமந்திரன்

கொழும்பு, மே 8
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை ஏன் நிறுத்தக் கூடாது என்று கேள்வி எழுப்பியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அதற்கான காரணங்களை முன்வைக்க வேண்டும் என்றும் பிரதான எதிர்க்கட்சிகளிடம் கேட்டுள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடும்போது,
"வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது எதிரணியின் பொது வேட்பாளராக நிய

21ஆம் பக்கம் பார்க்க

## காற்றோடு கரைந்துபோன சம்பூர் மக்களின் வாதங்கள்

### நட்டஈடு பெறவிரும்புவோரின் விவரத்தை சமர்ப்பிக்குமாறு பிரதம நீதியரசர் உத்தரவு

கொழும்பு, மே 8
சம்பூர் மக்களுக்குச் சொந்தமான நிலங்களைச் சுவீகரிக்கும் செயன்முறை முறையாக இடம்பெறவில்லை என்று மனுதாரர்கள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டபோதும், அரசதரப்பு சட்டத்தரணியின் வாதத்தை ஏற்றுக்கொண்ட பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், காணிகள் மற்றும் நட்டஈடுகள் பெற்றுக்கொள்ள விரும்பும் இடம்பெயர்ந்தோர் தொடர்பாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.
சம்பூரில் 9 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உயர் பாதுகாப்பு வலயம் என்று இலங்கை அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதில் பொருளாதார வலயத்துக்கு 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தமானி மூலம் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தநிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து

21ஆம் பக்கம் பார்க்க

## நட்டஈடுகள் வேண்டாம் எமது நிலமே வேண்டும்

### சம்பூர் மக்கள் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், மே 8
மாற்றுக் காணி குறித்தோ அல்லது நட்டஈடு குறித்தோ எமது மக்கள் சிந்திக்கவில்லை. அதை ஏற்கப்போவதுமில்லை. எங்களுக்கு எங்களுடைய சொந்த நிலமே வேண்டும். இதுவே எமது உறுதியான நிலைப்பாடு - இவ்வாறு தெரிவித்துள்ளார் சம்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன்.
சம்பூர் பிரதேசத்தில் உயர்

21ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு அரசுடைய வருமானம் கொழும்பு அரசின் திறைசேரிக்கு

வலி.வடக்கு, மே 8
வடக்கு மாகாண சபைக்குச் சொந்தமான பெருமளவு முத்திரை வரி, தேவையற்ற முறையில் மத்திய அரசின் திறைசேரிக்குச் சென்றுகொண்டிருக்கின்றது. அதனால் வடக்கு மாகாண சபைக்குக் கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானம் கிடைக்காது போகின்றது என்று கூறுகின்றனர் பொருளாதார வல்லுநர்கள்.
வடக்கு மாகாண சபை பதவியேற்று சுமார் ஒன்பது மாதங்களுக்கு மேலாகின்றது. ஆயினும் சபை வருமானம் பெறும்

21ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வலி.வடக்குக்காகக் குரல்கொடுப்போர் முள்ளிக்குளத்தை கண்டுகொள்வதில்லை

## அந்தப் பகுதி மக்கள் வேதனை



யாழ்ப்பாணம், மே 8

வலி. வடக்கு மக்களின் மீள் குடியேற்றத்துக்காகக் குரல் கொடுக்கும் அரசியல்வாதிகள் எங்களை மட்டும் கண்டுகொள்கிறார்கள் இல்லை - என்று வேதனையுடன் தெரிவித்துள்ளனர் மன்னார் முள்ளிக்குளப் பிரதேச மக்கள்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மீன்பிடி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன், மன்னார் நகரசபை உறுப்பினர் இ.குமரேஷ் ஆகியோர் நேற்றுமுன்தினம் மன்னார் முள்ளிக்குளத்தைச் சேர்ந்த, தற்போது இடம்பெயர்ந்து மலைக்காட்டில் உள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அந்தச் சந்திப்பின்போதே அந்த மக்கள் இவ்வாறு வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

**அடிப்படை வசதி இல்லை**

மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளப் பிரதேசம் 2007 ஆம் ஆண்டு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. அப்போது அங்கிருந்த மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அதன் பின்னர் கடற்படையின் வடமேற்குக் கட்டளைப் பணியகத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதை அடுத்து, இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் தங்கள் சொந்த வாழ்விடங்களில் குடியமர அனுமதிக்கப்படவில்லை. முசலியில் மலைக்காடு என்னும் இடத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் ஓலைக் குடில்களில் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

"முள்ளிக்குளத்தில் உள்ள எங்கள் காணிகளையும் வீடுகளையும் திருப்பிக் கேட்க மாட்டோம் என்று கையெழுத்து வைத்துத் தந்தால் நாங்கள் குடியேறுவதற்கு மாற்று இடங்களை ஒழுங்கு செய்து தருவதாக அரசு கூறுகிறது. ஆனால், உயிரே போனாலும் வேறு இடங்களில் குடியமர மாட்டோம். எமது சொந்த இடங்களுக்கு நாங்கள் திரும்ப வழி செய்து தாருங்கள். அங்கே 700 ஏக்கர்கள் அளவில் எங்களால் கைவிடப்பட்ட வயல்களும் உள்ளன. கடற்படை கையகப்படுத்தி வைத்திருக்கும் அந்த வயல் நிலங்களையாவது விடுவித்துப் பயிர் செய்வதற்காகவாவது அங்கு போய்வர அனுமதி வாங்கித் தாருங்கள்" என்று கண்ணீருடன் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

**யாரும் குரல் கொடுக்கவில்லை**

"வலி. வடக்கு மக்களின் மீள் குடியேற்றத்துக்குக் குரல் கொடுக்கும் அரசியல்வாதிகள் எங்களை மட்டும் கண்டுகொள்கிறார்கள் இல்லை. நாங்கள் வளர்த்த மாடுகள் கூட எங்களைத் திரும்பிப் பார்ப்பதில்லை. இடப்பெயர்வின்போது நாங்கள் கைவிட்டு வந்த மாடுகள் படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து வெளியேறி வந்தாலும் மீளவும் அங்கேயே திரும்பிவிடுகின்றன. இதில் ஒரு மாடு தன்னும் திரும்பிப் போகாவிட்டால் கடற்படையினரும் எங்களை வந்து மிரட்டுகிறார்கள். கால்நடை வளர்ப்புக்கும் உதவி செய்யுங்கள்" என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சொந்த இடங்களில் மீளக் குடியமர்வது தொடர்பாகவும், படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்வது தொடர்பாகவும் முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகத் தெரிவித்த விவசாய அமைச்சர், தற்போது அவர்கள் தங்கியிருக்கும் பகுதியில் இருக்கும் பகுதியிலுள்ள, புளியங்குளத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாகவும், கால்நடை வளர்ப்புக்கு உதவுவதாகவும் உறுதியளித்தார்.

(ந-5)

## விபத்தில் நால்வர் காயம்

மன்னார், மே 8

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மன்னார் நகரசபைக்குச் சொந்தமான வாகனம் முழுங்காவில் பகுதியில் நேற்று விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபையின் செயலாளர்கள் உட்பட நால்வர் காயங்களுக்குள்ளாகினர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட், மன்னார் பிரதேச சபையின் செயலாளர் சி.எம்.ஜெசுனேசன், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதம பொறியியலாளர் எஸ்.முரளிதன் ஆகியோர் மன்னார் திரும்பிக் கொண்டிருந்தனர்.

முழங்காவில் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது மழை காரணமாகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் விபத்தில் சிக்கியது என்று கூறப்படுகின்றது. விபத்தின்போது காயமடைந்த வாகனச் சாரதி உட்பட நால்வர் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த வாகனம் கடுமையான சேதங்களுக்குள்ளாகியுள்ளது என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ந-56-50)

## இலங்கை விடயம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கவலை

கொழும்பு, மே 8

இலங்கை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமான கவலை கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டேவிட் டலி.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

"ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச்மாத அமர்வில் இலங்கை தொடர்பான தீவிரமான கவலைகள் ஏற்பட்டிருந்தன. அதனால் ஐ.நா. மனித உரிமைகள்சபையில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தீர்மானத்துக்கு ஆதரவளிப்பது அவசியம் என்று ஐரோப்பிய ஒன்றியம் உணர்ந்தது.

இலங்கையை ஐரோப்பிய ஒன்றியம் நல்ல நண்பனாகவே கணித்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் எழுப்பியிருந்த கவலை, அந்த நட்புறவின் ஒரு பகுதியே"- என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, டக்ளஸ் தேவானந்தா, திஸ்ஸ விதாரண, நியோல் பெரேரா ஆகியோரும், பல்வேறு நாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

(ந)



பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. கொழும்பு, வோட் பிளேஸில் அமைந்துள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக ஆரம்பித்த மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி அலரி மாளிகை வரை சென்றது. இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் இணைந்த சுகாதார கற்கை நெறி 3 வருடகாலமாக குறைக்கப்பட்டதைக் கண்டித்தும் நாட்டின் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் நிலவும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியை தீர்வு காணக் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ந-10)

## போதைப் பொருள் குறித்த விவாதம் 20 ஆம் திகதி

கொழும்பு, மே 8

ஹெரோயின் மற்றும் எதனோல் பிரச்சினையைக் கட்டுப்படுத்தத் தவறியுள்ள அரசு தொடர்பில் எதிர்க்கட்சிகள் கோரிய விவாதம் எதிர்வரும் 20-21ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இத்திகதி தீர்மானிக்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். போதைப் பொருள் வர்த்தகத்தின் மத்திய நிலையமாக இலங்கை மாறியுள்ளதென ஐ.தே.க.குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ந)

## கைதான இலங்கையரிடம் பெரும் தாக்குதல் திட்டமாம்

### இந்தியப் பொலிஸார் கூறுகின்றனர்

சென்னை, மே 8

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட இலங்கையரான சாகீர் ஹுசைன், இந்தியாவின் இரு முக்கிய கடற்படைத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளார் என்று இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றினார் என்று கூறப்படும் சாகீர் ஹுசைன் என்பவரை தமிழகப் பொலிஸார் அண்மையில் கைது செய்திருந்ததுடன், அவரிடம் இருந்து பெருந்தொகையான இந்தியப் போலி நாணயத்தாள்களையும் கைப்பற்றினர். ஹுசைன் பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர் என்று கூறும் இந்தியப் பொலிஸார், கொச்சி மற்றும் விசாக பட்டினத்தில் அமைந்துள்ள கடற்படைத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் ஒன்றை அவர் முன்னெடுத்து வந்தார் என்றும் தெரிவித்தனர்.

இதுகுறித்து பொலிஸார் மேலும் கூறியிருப்பதாவது.

"இரு கடற்படை முகாம்கள் குறித்தும் ஹுசைன் தகவல்களைத் திரட்டியுள்ளார். துணி வர்த்தகர் என்ற போர்வையில் இவர் அடிக்கடி இந்தியா வந்துள்ளார். கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 20 தடவைகள் அவர் இவ்வாறு வந்துள்ளார். அவரிடம் தற்போது மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன"- என்று தெரிவித்தார்.

(ந)

## வியட்நாம் சென்றார் பிரதமர்

கொழும்பு, மே 8

ஐக்கிய நாடுகளின் வெசாக் பௌர்ணமி நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக பிரதமர் டி.எம். ஜயரட்ன நேற்று மாலை வியட்நாம் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத் தகவல்கள் இதனை உறுதி செய்துள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெசாக் பௌர்ணமி கொண்டாட்டங்கள் இம்முறை வியட்நாமில் நடைபெறவுள்ளது.

வியட்நாம் சென்றடைந்த பிரதமரை அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஜவன் அமரசிங்க மற்றும் அந்நாட்டு முக்கிய பிரமுகர்கள் வரவேற்றுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (ந)

## ஏமாற்றி விட்டார் ஐஸ்வர்யாராய் இலங்கை நீதிமன்றில் வழக்கு?



கொழும்பு, மே 8

முன்னாள் உலக அழகியும் பிரபல பொலிவூட் நடிகையுமான ஐஸ்வர்யா ராயை தொடர்புபடுத்தி கொழும்பு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

இதுகுறித்துத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் "பிரபல நடிகை ஐஸ்வர்யா ராயுடன் காதல் உறவு கொண்டிருந்தேன், அவர் இந்திய நடிகர் அபிஷேக் பச்சனை திருமணம் செய்து கொண்டதால் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

தாய்லாந்தை வசிப்பிடமாகக் கொண்ட நிரோசன தேவப்பிரிய என்பவரே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ஐஸ்வர்யா ராய் தம்மை ஏமாற்றி விட்டார் என்றும், அது தொடர்பில் சட்ட ரீதியான உதவி வழங்குவதாகக் கூறித் தமது மருமகன் 17 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்து விட்டார் என்றும் தெரிவித்துள்ள அவர், சட்ட ரீதியாக தனது மருமகன் எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தவறி விட்டார் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மருமகனான சந்தேக நபர் அஜித் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். பணத்தை தவணை அடிப்படையில் தனது மாமாவுக்குச் செலுத்துவதாக நீதிமன்றில் ஒப்புக் கொண்டதனைத் தொடர்ந்து அஜித்தை, நீதிவான் பிணையில் விடுதலை செய்துள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ந)

## பரு. - சங்குப்பிட்டி ஊடான மன்னாருக்கான பஸ் சேவை நேரம்

யாழ்ப்பாணம், மே 8
பருத்தித்துறையிலிருந்து சங்குப்பிட்டி ஊடாக தலை மன்னாருக்கான இ.போ.ச. பஸ் சேவை நேரம் நாளை முதல் நடைமுறைக்கு வருகின்றது.
பருத்தித்துறையிலிருந்து காலை 5 மணிக்குப் புறப்படும் பஸ் கொடிகாமம், சாவகச்சேரி, பூநகரி, முழங்காவில் ஊடாகப் பயணித்து காலை 8.30 மணிக்கு மன்னாரைச் சென்றடையும். அங்கிருந்து புறப் பட்டு முற்பகல் 10.15 மணிக்கு தலைமன்னாரைச் சென்றடையும். பின்னர் பிற்பகல் ஒரு மணிக்கு தலைமன்னாரிலிருந்து புறப்படும் பஸ் பிற்பகல் 2.15 மணிக்கு மன்னாரை வந்தடையும். அங்கிருந்து பி.ப. 2.30 மணிக்கு புறப்பட்டு குறித்த வழித் தடத்தின் ஊடாக பருத்தித் துறையை வந்தடையும். மன்னார் பிரதேசத்தில் கட மைபுரியும் அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் பயணிகளின் வேண்டுகோளுக்கு அமைய குறித்த பஸ்சேவை பருத்தித்துறை சாலையால் நடத்தப்படுவதாக இலங்கை போக்குவரத்துச் சேவையின் கோண்டாவில் சாலை பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (வ)

## சந்தேக நபர்கள் சாட்சிகளால் அடையாளம் காட்டப்படவில்லை

தாயின் சாவு வீட்டில் குடும்பஸ்தர் ஒருவர் தங்கியிருந்த வேளையில் வீடு உடைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட திருட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 4 சந்தேக நபர்களும் நேற்று இடம்பெற்ற அடையாள அணி வகுப்பில் சாட்சிகளால் அடையாளம் காட்டப்படவில்லை.
மீசாலை வடக்கில் உள்ள வீடொன்றில் ஆள்கள் இல்லாத வேளையில் நள்ளிரவு புகுந்த திருடர்கள் அங்கிருந்து 40 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்ற சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நால்வரைக்கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தி நீதிமன்றின் உத்தரவுப்படி அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
இது தொடர்பான அடையாள அணி வகுப்பு நேற்று சாவகச்சேரி நீதிமன்றின் அறையொன்றில் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் இடம்பெற்றது. (வ-9)

# யாழ். பல்கலை நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு

## கண்டனக் குறிப்பில் மாவை எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 8
யாழ் பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்படுகின்றமை மற்றும் பேராசிரியர் மாணவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து சுவரொட்டி ஒட்டப்பட்ட சம்பவம் ஆகியவற்றுக்குப் பின்னால் இராணுவத்தினருக்கு சம்பந்தம் இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுச் செயலருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

> “16ஆம் திகதி முதல் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கும். விடுதிகளிலிருந்து மாணவர் வெளியேற வேண்டும் எனவும் பதிவாளர் அறிவித்தல் கொடுத்துள்ளார். ஆனால் பதிவாளர் விடுமுறையில் இருப் பதாகவும் அவர் அந்த அறிவித்தலைத் தான் விடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மற்றும் மாணவர்களை அச்சுறுத்தியும், கொலைமிரட்டல் விடுத்தும் மர்மமான முறையில் பல்கலைக்கழக வளாகத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகவும், துண்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் செய்திகள் நாளேடுகளில் வெளிவந்துள்ளன. நேரடியாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.
அதற்கு மேலாக 16ஆம் திகதி முதல் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கும், விடுதிகளிலிருந்து மாணவர் வெளியேற வேண்டும் எனவும் பதிவாளர் அறிவித்தல் கொடுத்துள்ளார். ஆனால் பதிவாளர் விடுமுறையில் இருப்பதாகவும் அவர் அந்த அறிவித்தலைத் தான் விடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார் என்றும் எமக்கு தகவல் கிடைத்துள்ளது.
இத்துடன் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், மாணவர் தலைவர்களை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி இன்று (நேற்று) சந்தித்து கலந்துரையாடியும் உள்ளார். இவ்வாறான செயற்பாடுகளை நோக்கும் போது யாழ். பல்கலைக்கழகத்துக்குள் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகரித்திருப்பது தெரிய வருகிறது.
பல்கலைக்கழகம் மூடப்படுவதையும் பேராசிரியர் மற்றும் மாணவர்களுக்கு விடுக்கபட்டுள்ள கொலை மிரட்டல் சம்பவத்தையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் துணைவேந்தர் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளார்.
இத்தகைய இராணுவத் தலையீடுகள், மீண்டும் பயங்கரவாதத்தை தூண்டுவதாகவும், மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினரை அச்சுறுத்துவதாகவும் அமையும் எனவே இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து கல்வி நிறுவனங்கள் சுதந்திரமாக இயங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.- என்றுள்ளது. (ஐ)



சர்வதேச தாதியர் தினம் எதிர்வரும் 12 ஆம் திகதி அனுட்டிக்கப்படுகிறது. அதனையொட்டி யாழ்.தாதியர் கல்லூரியைச் சேர்ந்த தாதிய மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் யாழ்.போதனா மருத்துவமனை தாதியர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் யாழ்.தாதியர் மண்டபத்தில் நேற்று இரத்ததானம் செய்தனர். அவர்களில் ஒரு பகுதியினரைக் காணலாம். (வ-4)

## ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே. 08
போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆள் கொணர்வு மனு மீதான விசாரணை அடுத்த மாதம் 5 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அரசதரப்புச் சட்டத்தரணி மன்றுக்கு சமூகம் கொடுக்காமையினாலேயே இந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்து அதன் பின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பில் அவர்களது உறவினர்களால் வவுனியா மேல் நீதிமன்றில் கடந்த வருடம் ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கு மீதான விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில், காணாமற்போதல் சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்திலேயே விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதால் வழக்கு கடந்த வருட இறுதியில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்கு மாற்றப்பட்டிருந்தது.
கடந்த அமர்வில் சாட்சியங்கள் மீதான குறுக்கு விசாரணை ஆரம்பமாகியிருந்தது. இந்த நிலையில் நேற்றும் இன்றும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், பிரதிவாதிகள் தரப்பில் மன்றில் முன்னிலையாக வேண்டிய சட்டமா அதிபர் திணைக்கள அரச சட்டத்தரணிகள் மன்றுக்கு சமூகம் கொடுக்காத காரணத்தினால் வழக்கு அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்களுக்கு இடமாற்றம்

### ஆளுநர் நேற்று வழங்கி வைத்தார்

யாழ்ப்பாணம், மே. 08
யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் நேற்று உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.
இவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளராக வலிகிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் திருமதி ஜெ.சோமராஜும், நல்லூர் பிரதேச சபைச் செயலாளராக, கரவெட்டிப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி ரி.அன்னலிங்கமும், காரைநகர் பிரதேச சபைச் செயலாளராக மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் செல்வி கே.கேதீஸ்வரியும், கரவெட்டிப் பிரதேச சபைச் செயலாளராக காரைநகர் பிரதேச சபையின் செயலாளர் கே.கனகதுரையும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இந்த நிகழ்வில், வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எஸ்.துரைராசா, மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் கே.தெய்வேந்திரன், பிரதேச சபைகளின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-5)

# சிறிய, நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் செயலமர்வு நாளை

## இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்தியக் கிளையால்

யாழ்ப்பாணம், மே. 8
வட மாகாணத்தின் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையால் செயலமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தச் செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை ஹற்றன் நஷனல் வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேலோங்கச் செய்வதற்காக, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவித்தல் என்ற தொனிப் பொருளிலேயே இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.
மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பல்வேறு துறை சார் விரிவுரையாளர்களும் கருத்துரை வழங்கவுள்ளனர்.
இந்தக் கருத்தரங்கில் வடக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கான புதுமை புனைதல்களும், பெறுமதி சேர்க்கைகளுக்குமான சாத்தியங்கள், வங்கியுடனான உறவை முகாமை செய்தல், இலங்கை மத்திய வங்கியின் கடன் திட்டங்கள் போன்றவை தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது.
மின்சார நிலைய வீதியிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் 0212221856 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (வ-5)

# தடை செய்யப்பட்டோரில் 32 பேர் இந்தியாவிலாம்

## விசாரணைகளை முடுக்கிவிட்டது அந்த நாட்டு புலனாய்வுத்துறை

கொழும்பு, மே 8

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவித்து தடை செய்யப்பட்ட 424 பேரில், 32 பேர் இந்தியாவில் வசித்து வருகின்றனர் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. அதையடுத்து அவர்களின் பின்புலம் பற்றிய விசாரணைகளை இந்திய மத்திய புலனாய்வுத்துறை முடுக்கி விட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசு, இந்திய வெளியுறவு அமைச்சு மூலம் இந்திய மத்திய உள்துறை அமைச்சுக்கு குறித்த 32 பேரின் விவரங்கள் அடக்கிய பட்டியலை அனுப்பியுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இலங்கைஅரசுக்கும் இடையே நடைபெற்ற போரின்போது வெவ்வேறு காலகட்டங்களில் அவர்கள் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்தவர்களாவர். அவர்களை "இந்தியாவில் வசிப்பவர்கள்" என்று இலங்கை அரசு வர்த்தகமானி மூலம் அறிவித்துள்ளது.

அந்தப் பட்டியலில், அப்பாதுரை அமலன், ராசதுரை சசீகரன், சிவஞானசுந்தரம் சிவகரன், யோகநாதன் திலீபன், சந்தியா பிள்ளை, சிவசேகரன் விஜய நீதன், குணசீலன் ரமணன், குணேந்திர ராஜா ஜெயராஜ், அம்பிகேதேசன் ஜனார்த னன், சந்திரபோஸ் ஜெயரூபன், போலிகாப் அலெக்சாண்டர், நவரத்னம் சதீஸ்வரன், சுப்பிரமணியம் சதீஸ்குமார், கமலதாஸ் கௌஷில்யா, ரூபசிங்கம் ஜனகாந்த், ரத்னசிங்கம் நித்தியானந்தம், பரமானந்தன் சிவராமகிருஷ்ணன், தம்பிதுரை சிவசிதம்பரநாதன், அமுதன், அந்திரஹென்னடிகே சமிந்தா தர்ஷனா, நவாஸ் (எ) சுரேஷ், ராஜேந்திரன் மூர்த்தி, சுதர்சன் கயிலநாதன், விக்னேஸ்வரன் பரமேஸ்வரி, விக்னேஸ்வரன் கந்தப்பமுத்தையாபிள்ளை ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தநிலையில், மேலும் ஆறு பேரின் பெயர்கள் மற்றும் அவர்களின் தற்போதைய வசிப்பிட முகவரியையும் இலங்கை அரசு வெளியிட்டுள்ளது.

இளங்குமரன் ரஞ்சிதகுமாரி (வாலாஜாபேட்டை), செபஸ்தியன் பிள்ளை ரவிகுமார் (திண்டுக்கல் அகதிகள் முகாம்), கதிர்வேலு சிவஞானசெல்வம் (திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை), அமல் ஆரோக்கியசாமி சந்திரவதனா (ஆதம்பாக்கம், சென்னை), அகநிலா(சேலையூர், சென்னை), தங்கய்யா தங்கம் (முதலியார்குப்பம், காஞ்சிபுரம்) ஆகியோரின் பெயர்களே தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர, இந்தியாவில் வசித்து வருகின்றார் என்று குறிப்பிடப்பட்டு வேலுப்பிள்ளை ரேவாதன் என்பவரின் பெயரும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதுடன், அவர் பயங்கரவாதவழக்குகளில் இலங்கை அரசால் தேடப்படும் குற்றவாளி என்று இன்ரபோலிடம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டு ஜூன் மாதம், இந்தியா - இலங்கை ஆகிய நாடுகளிடையே கைதிகளைப் பரஸ்பரம் ஒப்படைக்கும் உடன்பாடு எட்டப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி குறித்த நபர்கள் இந்தியாவில் தங்கியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அவர்களைக் கைது செய்து முறைப்படி இலங்கை அரசிடம் இந்தியா ஒப்படைக்கவேண்டும்.

ஆனால், ஒரு நாட்டில் இருந்து தப்பித்து இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள இவர்களை எந்த அடிப்படையில் இலங்கையில் திரும்ப ஒப்படைப்பது என்பதில் சட்டச் சிக்கல் எழுந்துள்ளது என்று கூறப்படுகின்றது. அது தொடர்பாக இந்திய மத்திய சட்டத்துறையுடன் மத்திய உள்துறை அமைச்சு தீவிரமாக ஆலோசித்து வருகின்றது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## அங்கங்கள் கட்டப்பட்ட நிலையில் வயோதிபப் பெண் மீட்கப்பட்டார்

வடமராட்சி, மே 08

கண்கள், கைகள், கால்கள், வாய் என்பன கட்டப்பட்ட நிலையில், உயிருடன் காணப்பட்ட வயோதிபப் பெண் ஒருவரைப் பருத்தித்துறைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியிலுள்ள துன்னாலை புளியங்கியான் - கியான்காடு மயானத்திற்கு அண்மையாக இந்த வயோதிபப் பெண் நேற்று காலை காணப்பட்டுள்ளார். இவ்வாறு மீட்கப்பட்டவர் பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த பேரின்பநாயகம் தேவகியம்மா (வயது 61) என்பவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 3 ஆம் திகதி குறித்த பெண் தனது வீட்டில் இருந்த போது அங்கு சென்ற சிலர் தாம் காங்கேசன்துறை பொலிஸைச் சேர்ந்தவர்கள் என்றும் விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வருமாறும் கூறிச் சென்றிருந்தனர்.

இதனையடுத்து அந்தப் பெண் ஆவணங்களுடன் காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் செல்வதாக உறவினர்களிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளார். இவ்வாறு சென்றவர் வீடு திரும்பவில்லை.

**இதனையடுத்து அந்தப் பெண் ஆவணங்களுடன் காங் கேசன்துறை பொலிஸ் நிலை யம் செல்வதாக உறவினர் களிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளார். இவ்வாறு சென்றவர் வீடு திரும்பவில்லை.**

இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அத்துடன் தாம் எவரையும் விசாரணைக்கு அழைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் அந்தப் பெண் அங்கங்கள் கட்டப்பட்டு மயங்கிய நிலையில் இன்று மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பருத்தித் துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட வயோதிபப் பெண் முன்னர் வெளிநாடுகளுக்கு ஆள்களை அனுப்பும் முகவராக செயற்பட்டு வந்தார் எனவும் இதன் விளைவாக ஏற்பட்ட பணக்கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

## வவுனியா வர்த்தகர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மே 8

வவுனியா சந்தைப் பகுதியில் கடை வைத்திருக்கும் ஒருவர் அவரது கடையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த சின்னராமன் கணேசன் (வயது- 60) என்பவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது;

குறித்த நபர் கடைக்குச் செல்வதாக கூறிவிட்டு வீட்டில் இருந்து புறப்பட்ட அவர் தனது அயல் கடைக்காரர்களுக்கு இன்று கடையை தாதமாகத் திறக்கலாம் எனக் கூறிவிட்டு கடைக்குள் சென்று உயிரை மாய்த்துக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபரின் கடை கடந்த மூன்று நாள்களாக வவுனியா நகரசபையின் பணிப்பின் பேரில் மூடப்பட்டிருந்ததாகவும் இதனால் மன முடைந்தே உயிரை மாய்த்துக் கொண்டார் எனவும் உயிரிழந்தவரின் மனைவி தெரிவித்தார். (ஐ-421)

**தவறிவிட்டது**

யசோதா-இராசையா என்பவரது (887901015V) இலக்கமுடைய தே.அ. அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வாகனப் பதிவுப் புத்தகம் (RB-5346) என்பன ஆவரங் காலுக்கும் குடத்தனைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P: 077262 7581, 071 494 0021

## விசேட பொலிஸ் பிரிவு கலைக்கப்பட வேண்டும்

### ராவணா பலய அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு,மே 8

மத விவகாரங்கள் குறித்து ஆராய அமைக்கப்பட்டுள்ள விசேடபொலிஸ்பிரிவு எதிர்வரும் வெசாக் தினத்துக்கு முன்னர் கலைக்கப்பட வேண்டும் என்று ராவணா பலய அமைப்பு கோரிக்கை விடுத் துள்ளது.

இந்தப் பிரிவு கலைக்கப்படாது விட்டால் வெசாக் தினத்துக்குப் பின்னர் பௌத்தசாசன அமைச்சுக்குள் சென்று 7 ஆவது மாடியில் தங்கிப் போராட்டம் நடத்துவோம் என்று ராவணா பலய அமைப்பின் பொதுச் செயலர் இத்தேபான சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை பௌத்த சாசன அமைச்சுக்கு சென்று தமது கோரிக்கைகளை முன் வைத்ததாகவும், அதற்கு உரிய தீர்வு எடுக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் இவ்விடயத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் மதப் பிரச்சினை இல்லை. ஆனால் விசேட பொலிஸ் பிரிவு அமைத்ததன் மூலம் இலங்கையில் மத சுதந்திரம் இல்லை என்று ஐ.நாவுக்கு முறைப்பாடு செய்ய வழிசமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பொலிஸ் பிரிவுக்கு முஸ்லிம்கள் தற்போது பல முறைப்பாடுகளைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முறைப்பாடுகள் அடங்கிய கோவைகளை ஜெனிவாவுக்கு எடுத்துச் செல்வதே அவர்களின் அடுத்த திட்டம் என்று அவர் மேலும் தெரி வித்தார். (ச)



*விசேட பொலிஸ் பிரிவு வேண்டாம் என்று இராவண பலய அமைப்பு பௌத்த விவகாரங்களுக்கான அமைச்சில் நேற்று முறையிட்ட போது....*

## ரயில் விபத்து விசாரணைக்கு நீதிவான் தலைமையில் குழு

### நியமிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு,மே 8

குருநாகலில் அண்மையில் இடம்பெற்ற ரயில் விபத்து தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நீதிவான் ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது செயலகத்துக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

விசாரணைக்குழுவின் தலைவராக ஒரு நீதிவானே நியமிக்கப்படவுள்ளார். அதனால் இந்தக்குழுவின் இறுதி அறிக்கை நம்பகத்தன்மை வாய்ந்ததாகவிருக்கும் என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வழமையான சூழ்நிலையில் ஒரு ரயில் விபத்து இடம்பெற்றால் அது தொடர்பான விசாரணையை ரயில்வேத் திணைக்களமே மேற்கொள்ளும். இதை விட பிரத்தியேகமாக மற்றுமொரு சுயாதீன விசாரணையும் நடைபெறும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீனமான விசாரணைக்கு ஓய்வுபெற்ற நீதிவான் ஒருவரும் தலைவராக நியமிக்கப்படுவார். இதுவே வழக்கம். எனினும், குருநாகல் ரயில் விபத்து சம்பந்தமான விசாரணைக்குழுவுக்குத் தலைவ ராக ஒரு நீதிவானை நியமிக்குமாறு ஜனாதிபதி தமது செய லகத்துக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார் என்று அவர் குறிப் பிட்டுள்ளார்.

கடந்த வாரம் இரு பயணிகள் ரயில்கள் பொத்துஹெரவில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாயின. விபத் தில் எழுபதுக்கும் மேற்பட் டோர் காயமடைந்தனர். இந்த விபத்தையடுத்து இந்த ரயில் மார்க்கங்களிலான ரயில் சேவை கள் தற்காலிகமாக இடைநிறுத் தம் செய்யப்பட்டிருந்தன.

ஒரு ரயில் நிறுத்தப்பட்டிருந்த அதே பாதையில் பிறிதொரு ரயில் சிவப்பு சமிக்ஞை யையும் பொருட்படுத்தாது சென்றுள்ளது என்று ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இரு ரயில்களின் என்ஜின்களும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் ரயில் பெட்டிகளிலிருந்த சில பய ணிகள் தூக்கி வீசப்பட்டிருந்தனர். (ச)

**மரண அறிவித்தல்**

**திருமதி கமலாதேவி பெரியதம்பி**

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, கென்ஸ்மன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி பெரியதம்பி நேற்று (07.05.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பெரியதம்பியின் அன்பு மனைவியும், தர்மினி, பத்மினி (உதவித் தபாலதிபர் சாவகச்சேரி), புஷ்பமாலதி (லண்டன்) ஆகியோரின் தாயாரும் கந்தராசா, அசோகன் (பிரதேச செயலகம், தென்மராட்சி) யோகராசன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2014) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கென்ஸ்மன் ஒழுங்கை,
சாவகச்சேரி.

தகவல்:
பெரியதம்பி (கணவர்)

## ஹெரோயின் மீட்பு

கொழும்பு,மே 8

சீதுவ சுங்கப் பொருள் களஞ்சியசாலையில் இருந்து ஒரு தொகை ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது என்று சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

விநியோகிக்கத் தயார் நிலை யில் வைக்கப்பட்டிருந்த பொதி யொன்றில் இவ்வாறு ஹெரோ யின் மீட்கப்பட்டுள்ளது என்று சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித் தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ச)

உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

## விநாயகபுரம் கிராமத்துக்கு மின்சார வசதி கிட்டுமா?

பளை, மே 8



பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள இயக்கச்சி, விநாயகபுரம் கிராமத்துக்கு வடக்கின் வசந் தம் திட்டத்தின்கீழ் மின்சாரம் வழங்கப்படாதமை குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் மீளக்குடியேறிய 36 குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டங்கள் மூலம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பெரும்பாலான கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், விநாயகபுரம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான எந்த வொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

கிராமத்துக்கு மின்சாரம் வழங்கக் கோரி மாவட்டத்தின் உயர் அதிகாரிகளுக்கு பல தடவைகள் முறையிட்டும் இதுவரை பயனேதும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (வ-9)

# வடமாகாண தொழில் நிறுவனங்கள் ஊழியர் நலனில் கவனம் செலுத்துக

### வடமாகாண பிரதித் தொழில் திணைக்கள ஆணையாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மே 8

வடமாகாணத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் தமது நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை மற்றும் விடுமுறை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துமாறு வட மாகாண பிரதித் தொழில்திணைக்கள ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

> தொழிலாளர் உரிமைச்சட்டங்களில் அவர்களுக்கான நம்பிக்கை நிதியம் மற்றும் பணிக்கொடை தொழில் தருநர்களால் அக்கறையுடன் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகவுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்;

"ஊழியர்களது பணிக் கொடை மற்றும் விடுமுறை தொடர்பில் தொழில் நிறுவன உரிமையாளர்கள் அக்கறை கொள்ளாது இருப்பதால் எதிர் காலத்தில் ஊழியர்கள் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிட்டுள்ளது.

தொழிலாளர் உரிமைச்சட்டங்களில் அவர்களுக்கான நம்பிக்கை நிதியம் மற்றும் பணிக்கொடை தொழில் தருநர்களால் அக்கறையுடன் கவனிக்கப்படவேண்டிய விடயமாகவுள்ளது.

தொழில் தருநர்கள் ஒவ்வொரு ஊழியர்களதும் ஆவணங்களை சரியாகப் பேண வேண்டும். தனியாக தமது வருமானத்துக்காக மட்டும் ஊழியர்களைப் பயன்படுத்தாமல் தொழிலாளர் சட்டங்களுக்கு ஏற்ப அவர்களுடைய பணிக் கொடை, விடுமுறைகளை உரிய முறையில் அவர்கள் அனுபவிக்க வழிவகை செய்தல் வேண் டும்.

இது தொடர்பாக யாழ்.மாவட்டத்தில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது" - என்றார். (வ-14)

## பொலிகண்டிச் சந்தியில் பாதசாரிக்கடவை அமைக்குக

வடமராட்சி, மே 8

பொலிகண்டிச் சந்தியில் பாதசாரிக் கடவை ஒன்றை அமைத்து மக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு உதவுமாறு யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - வல்வெட்டித்துறை பிரதான வீதியில் நவிண்டிலுக்குச் செல்லும் வீதியும் இணைந்த பொலிகண்டிச் சந்தியில் மீன் சந்தை, சமுர்த்தி வங்கி, பாலர் பாடசாலை, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்பன அமைந்துள்ளன.

அத்துடன் மாணவர்களும் பாடசாலைகளுக்குச் செல்வதற்காக குறித்த சந்தியைப் பயன்படுத்துகின்றனர்.

இதனால் இந்தச் சந்தியில் குறிப்பாக காலை வேளைகளில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது.

எனவே விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்கவும், போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்கும் வசதியாக பொலிகண்டிச் சந்தியில் மஞ்சள் கோடுகளை வரைந்து பாதசாரிக் கடவையை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகின்றோம் என்று அந்த வேண்டு கோளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-173)



பண்ணைச் சந்தியில் இருந்து கடற்கரை வீதியோரமாகச் சுற்றுலாப் பயணிகள் வசதி கருதி பொழுதுபோக்கு இடமாக மாற்றியமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கு இடமாக மாறியுள்ள இந்தப்பிர தேசத்தில் இருக்கைகள் மற்றும் நிழல் குடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பண்ணைக் கடற்கரை பகுதியை அழகுபடுத்தி சுற்றுலா மையமாக்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (வ-17)

## ஜே/89 பிரிவுக்கு இந்திய வீடுகள்

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணம், அரியாலை தென்கிழக்கு ஜே/89 கிராம அலுவலர் பிரிவுக்கு இந்திய வீடமைப்புத்திட்டம் வழங்கப்படவுள்ளது. புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு அவை வழங்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்தார். (வ-7)

## வயோதிபப் பெண்ணின் தங்கச் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம, மே 8

கோப்பாய் வடக்கில் வீதியால் சென்ற வயோதிபப் பெண்ணின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மிகவும் தந்திரமாக அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் வேளையில் இடம்பெற்றது.

கோப்பாய் ஆலடி வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது மூன்று பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற திருடர்களை மக்கள் துரத்திச் சென்றும் அவர்களைப் பிடிக்க முயலவில்லை.

ஆள்கள் நடமாட்டம் குறைந்த அந்த வீதியில் முன்னரும் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலி இவ்விதம் அறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-17)

## ஆங்கில பேச்சுத் திறனை வளர்க்க வலிகாம வலயத்தில் செயற்பாடுகள்

### அடுத்த வாரம் நடைமுறைக்கு

வலி.வடக்கு, மே 8

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகள் மட்டத்தில் ஆங்கில மொழிப் பேச்சுத் திறனை வளர்த்தெடுக்கும் வகையிலான செயற்பாடுகள் அடுத்த வாரம் முதல் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

அடுத்தாண்டு முதல் ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆங்கில பாடப் பரீட்சையில் ஆங்கில பேச்சுத்திறனுக்கு 25 புள்ளிகள் வழங்கும் திட்டம் பரீட்சைத் திணைக்களத்தால் அறிமுகம் செய்யப்படுவதைத் தொடர்ந்து பேச்சுத் திறனை வளர்த்தெடுக்கும் செயற்றிட்டத்தைவலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் விசேட திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வலி காமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்துள்ளார்.

விசேடமாக தயாரிக்கப்பட்ட இறுவட்டுக்கள் மூலம் தரம் பத்து மாணவர்களுக்கு இந்த விசேட ஆங்கில பேச்சுத் திறன் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கான தயார்ப் படுத்தலின் கீழ் ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர்கள் இதனை நேரடியாக கண்காணிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ-86)

## வடமராட்சியில் 7 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க நிதி ஒதுக்கீடு

வடமராட்சி, மே 8

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத 7 கிராமங் களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாகர் கோவில் கிழக்கு, மேற்கு கிராமங்களுக்கு ஒரு கோடி 44 லட்சத்து 32 ஆயிரத்து 103 ரூபாவும், மருதங்கேணி ஊரெல்லைப் பகுதிக்கு 6 ல்ட்சத்து 24 ஆயிரத்து 637 ரூபாவும், போக்கறுப்பு கேவில் பகுதிகளுக்கு 2 கோடி 4 லட்சத்து 73 ஆயிரத்து 377 ரூபாவும், வத்திராயன் வடலிப் பிள்ளையார் கோயில் பகுதிக்கு 8 லட்சத்து 40 ஆயிரத்து 453 ரூபாவும், அம்பன் கொட்டோடை கிராமத்துக்கு 27 லட்சத்து 7 ஆயிரத்து 200 ரூபாவும், செம்பியன்பற்று வடக்கு தனிப்பனை கிராமத்துக்கு 23 லட்சத்து 31 ஆயிரத்து 200 ரூபாவும், செம்பியன்பற்று தெற்கு மானியவளை பகுதிக்கு 81 லட்சத்து 91 ஆயிரத்து 520 ரூபாவும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டையடுத்து மின் இணைப்பு விநியோகப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-173)

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டோரும் விற்பனை செய்தோரும் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 8

டைனமற் பாவித்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குருநகரைச் சேர்ந்த இருவரையும், அவ்விதம் பிடிக்கப்பட்ட மீன்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த நாவாந்துறையைச் சேர்ந்த இருவரையும் கடற்படையினரின் உதவியுடன் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 2 லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் என். கணேச மூர்த்தி தெரிவித்தார்.

"கொட்டடிப் பகுதியில் டைனமற் பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட மீன்களை விற்பனைக்காக வைத்திருந்த நாவாந்துறையைச் சேர்ந்த இருவரை, கடற்படையின் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவல்களின் பிரகாரம் கடற்றொழில்நீரியல் வளத்திணைக் களத்தினர் கைது செய்தனர்.

அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. இதன்போது அவர்களுக்கு கைத் தொலை பேசி அழைப்பொன்று வந்துள்ளது. அந்த அழைப்புக்குப் பதிலளிக்குமாறு பொலிஸார் தெரிவிக்க, விற்பனைக்காக மீன்களை வைத்திருந்த இருவரும் அந்த அழைப்புக்கு பதிலளித்துள்ளனர். குறித்த அழைப்பை ஏற்படுத்தியவர்கள், அவர்களுக்கு கடலிருந்து மீனைப் பிடித்துக் கொண்டு வந்து கொடுத்தவர் கள் என்றும், அதற்குரிய பணத்தைப் பெறுவதற்காகவே அழைப்பை மேற்கொள்கின்றார்கள் என்றும்பொலிஸார் கண்டறிந்தனர்.

அதனையடுத்து நாவாந்துறையைச் சேர்ந்த இரு விற்பனையாளர்களிடமும், பணம் தருகின்றோம் என்று சொல்லச் சொல்லி மீனைப் பிடித்துக் கொடுத்தவர்களை வர வைத்த பொலிஸார் அவர்களையும் கைது செய்துள்ளனர். குருநகரைச் சேர்ந்த இரு மீனவர்களே டைனமற் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டமை விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டது.

விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 400 கிலோ பாரை மீன்கள் கைப்பற்றப்பட்டதுடன், கைது செய்யப்பட்டோர் யாழ்.மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட் டனர். இதன்போது டைனமற் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் இருவரையும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும், அவர்களால் பிடிக்கப்பட்ட மீன்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நாவாந்துறைவாசி கள் இருவரையும் தலா 2 லட்சம் ரூபா பெறு மதியான ஒவ்வொரு ஆள் பிணையிலும் விடுவித்த நீதிவான் மீன்களை அழிக்கு மாறு உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

டைனமற்பாவித்து மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் மீதும், அதனை விற்பனை செய்பவர்கள் மீதும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் கடுமையான நடவடிக்கை மேற் கொள்ளும்" என்று பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (வ-5)


## சோனியா, ராகுல் காந்தியால் இனி எதுவும் பேச முடியாது

### நரேந்திர மோடி கூறுகிறார்



நரேந்திர மோடி

புதுடில்லி,மே 08
காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும், துணைத் தலைவர் ராகுல் காந்தியும் இனி எந்த வகையிலும் குற்றம்சாட்ட முடியாது என்று பா.ஜ.க பிரதமர் பதவி வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
குஜராத்தில் தொழில் நிறுவனம் ஒன்றுக்கு குறைந்த விலையில் நிலம் வழங்கியதை மத்திய அரசு பாராட்டியதை அடுத்து மோடி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது குறித்து 3டி தொழில்நுட்பம் மூலம் பா.ஜ.க தொண்டர்களிடையே அவர் பேசுகையில், மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், குஜராத் அரசின் நிலக்கொள்கை எளிமையானது என்றும், நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக குஜராத் அரசு பின்பற்றி வரும் கொள்கைகளை பிற மாநிலங்களும் தொழில்துறை முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்காக பின்பற்றலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இப்போது சோனியா, ராகுல் என்ன செய்வார்கள்? பலூன் மாதிரி, மிட்டாய் மாதிரி என்று நீங்கள் விமர்சித்தீர்கள். ஆனால் தற்போது அதே மாதிரியைத் தான் உங்களது அரசு பாராட்டியுள்ளது' என்றார். (கு)



இந்தியாவின் நாடாளுமன்றத்துக்கு நடக்கும் பொதுத்தேர்தலின் 8ஆவது கட்ட வாக்குப்பதிவு நேற்று அங்கு 64 தொகுதிகளில் நடந்தது. காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியில் நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது. (கு)

## மறுவாக்குப் பதிவுக்கு முதல்வர் 'ஜெ' எதிர்ப்பு



ஜெயலலிதா

சென்னை,மே 08
சேலம், நாமக்கல் தொகுதிகளில் மறு வாக்குப்பதிவு நடத்த எதிர்ப்பு தெரிவித்து தேர்தல் ஆணையத்துக்கு அ.தி.மு.க பொதுச்செயலாளரும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா கடிதம் அனுப்பியுள்ளார்.
சேலம், நாமக்கல் தொகுதிகளில் தலா ஒரு வாக்குச்சாவடியில் மட்டும் இன்று மறு வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதற்கான உத்தரவை தேர்தல் ஆணையம் செவ்வாய் கிழமை மாலை அறிவித்தது. இந்நிலையில் [illegible] வாக்குச்சாவடிகளில் [illegible]வாக்குப்பதிவு நடத்த அ.[illegible].க. எதிர்ப்பு தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.
அதில், சேலம், நாமக்கல் தொகுதிகளில் மறு வாக்குப்பதிவு நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ள இரண்டு [illegible]க்குச்சாவடிகளில் அசம்பாவிதம் நடந்ததாக எந்த ஒரு அ[illegible] கட்சியும் புகார் தெரிவிக்கவில்லை. ஆனால் மறுவாக்குப்பதிவு நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது அதிர்ச்சி அளிக்கிறது. நேர்மையான தேர்தல் பணியை தற்போதைய நடவடிக்கை சந்தேகத்துக்குள்ளாக்கும் என்று தெரிவித்துள்ளார். (கு)

## சேலம், நாமக்கல்லில் மீண்டும் தேர்தல்

சென்னை,மே 08
தமிழகத்தில் உள்ள சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் இரண்டு தொகுதிகளில் மீண்டும் தேர்தல் நடத்தப்படவுள்ளது.
தமிழகத்தில் கடந்த மாதம் 24ஆம் திகதி வாக்குப் பதிவுகள் இடம்பெற்றிருந்தன.
இதன் போது குறிப்பிட்ட இரண்டு தேர்தல் தொகுதிகளில் வாக்குப் பதிவு செய்யும் இயந்திரங்கள் பழுதடைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையிலேயே அந்தத் தொகுதிகளில் மீண்டும் வாக்குப் பதிவுகள் நடைபெறவுள்ளன.
இதன்படி மீள் வாக்குப்பதிவுகள் இன்று நடைபெறும் [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## மோடியின் செயல்களே தரம் தாழ்ந்து உள்ளன

### ராகுல் காந்தி பதில்



ராகுல் காந்தி

புதுடில்லி,மே 08
நரேந்திர மோடி தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவர் எனப் பிரியங்கா கூறவில்லை. அவரது செயல்களே தரம் தாழ்ந்து இருப்பதாகப் பிரியங்கா விமர்சித்தார் என காங்கிரஸ் துணை தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார்.
நரேந்திர மோடி தரம் தாழ்ந்த அரசியல் செய்வதாகப் பிரியங்கா காந்தி விமர்சித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் உத்தரபிரதேசத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பேசிய மோடி: நான் 'பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்பதாலேயே எனது அரசியல் தரம் தாழ்ந்தது என பிரியங்கா விமர்சிக்கிறார். பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறப்பது குற்றமா? என கேள்வி எழுப்பினார்.
இந்நிலையில் அமேதியில் தேர்தல் நடைபெறுவதை ஒட்டி வாக்குச்சாவடிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டார் ராகுல் காந்தி.
அப்போது அவரிடம் மோடியின் கருத்து தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த ராகுல்: நரேந்திர மோடியின் எண்ணமும், செயலும் தான் தரம் தாழ்ந்ததாக இருக்கின்றன. மோடியின் கொள்கைகளில் குரோதம் நிறைந்திருக்கிறது என்றார். (கு)

## காஷ்மீர் வாக்குச்சாவடியில் வெடிகுண்டு வீசித் தாக்குதல்

காஷ்மீர்,மே 08
காஷ்மீரில் பாரமுல்லா தொகுதிக்கு உட்பட்ட வாகுச்சாவடி ஒன்றின் மீது வெடிகுண்டு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மேலும் அதே வாக்குச்சாவடியில் மண்ணில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டது.
இந்திய நாடாளுமன்ற தேர்தலில் 8ஆவது கட்டமாக காஷ்மீர் மாநிலத்தில் 2 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நேற்றுக் காலை தொடங்கியது.
இதற்காக அங்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில், பாரமுல்லா வாக்குச்சாவடி மீது சில நபர்கள் வெடிகுண்டு வீசித் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் இருவர் காயமடைந்தனர்.
மேலும், அதே வாக்குச்சாவடியில் மண்ணில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டு, செயலிழக்கப்பட்டது. இந்த சம்பவத்தால் பாரமுல்லா வாக்குச்சாவடியில் பதற்றம் நிலவியது. (கு)

## தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு உயர்நீதிமன்று தடை விதிப்பு



சென்னை,மே 08
தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுக்கு உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
காளைகள் துன்புறுத்தப்படுவதால் ஜல்லிக்கட்டு நடத்தக் கூடாது என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.
தமிழ்நாட்டில் பல நூறு ஆண்டுகளாக ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு வருகிறது. ஜல்லிகட்டுக்கு தடை விதிக்கவேண்டும் எனப் பிராணிகள் நல அமைப்பினர் கோரிக்கை விடுத்து மனு அளித்தனர். பிராணிகள் நல அமைப்பின் கோரிக்கையை ஏற்று உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.
மேலும் ஜல்லிக்கட்டு தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு என்பதால் அதை நடத்தலாம் என்ற தமிழக அரசின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. ஜல்லிக்கட்டுக் காளைகள் துன்புறுத்தல் இல்லை என்ற வாதமும் நிராகரிக்கப்பட்டது. தமிழக அரசு மட்டுமின்றி பல்வேறு கட்சிகளும் ஜல்லிகட்டுக்கு ஆதரவு அளித்து வருகிறது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை இனி நடத்த வாய்ப்பில்லை எனத் தெரிகிறது. (கு)

## தேர்தல்வேளை கடும் மோதல் ஆந்திராவில் 20 பேர் காயம்

ஆந்திரா,மே 08
ஆந்திராவில் வாக்குச்சாவடி மையத்தின் முன் தெலுங்கு தேசம்மற்றும்வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் மோதலில் ஈடுபட்டனர். இதில் 20 பேர் காயமடைந்த[illegible] தெரிவிக்கப்பட்டது.
[illegible]ாவில் 25 நாடாளுமன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள 175 சட்டசபை தொகுதிகளுக்கும் நேற்றுப் புதன் கிழமை வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த நிலையில் கடப்பா மாவட்டத்தின் தேவகுடி வாக்குச்சாவடி ஒன்றின்முன் தெலுங்கு தேசம் மற்றும் வை.எஸ். ஆர் காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் திடீரென்று மோதலில் ஈடுபட்டனர்.
மோதலில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கட்டுப் படுத்த முயன்றனர். இந்த மோதலில் பொலிஸாரின் வாகனங்கள் நொருக்கப்பட்டன. மேலும் 20 பேர் காயமடைந்துள்ளனர்.
ஆந்திர தலைமை தேர்தல் அதிகாரி பிரசாத் ராவ், 'சீமாந்திராவில் தேர் தலை சீர்குலைக்கும் அளவில் சில சம்பவங்கள் நடந்தாலும், தேர்தல் அமைதியான முறையில் நடந்துவருவதாக தெரிவித்தார். (கு)

## பூமியை மிக அண்மையாக கடந்து சென்றது விண்கல்

### ஹிரோஷிமா அணுகுண்டின் அரைப்பங்கு பாதிப்பை ஏற்படுத்தவல்லது




நாஸா.மே 08
விண்வெளி ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டு சில நாள்களேயான பஸ் அளவிலான விண்கல் ஒன்று கடந்த சனிக்கிழமை புவியை மிக அண்மையாக கடந்து சென்றுள்ளது.
அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த விண்கல்லுக்கு எச்.எல். 129 எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது சந்திரனைவிட மிக அண்மையாக 186.000 மைல்கள் தொலைவில் புவியை மிக அண்மையாக நெருங்கிக் கடந்து சென்றுள்ளது. பிரபஞ்சம் தொடர்பான அளவீடுகளில் இது மிகவும் கிட்டிய தூரமாகும்.
இவ்விண்கல் 7.6 மீற்றர்கள் அகலமானது என விண்கற்களை அவதானிக்கும் நாஸாவின் ஜெட் பிரொபல்ஸன் ஆய்வகம் தெரிவித்துள்ளது. இந்த அளவிலான விண்கல் மோதுண்டால் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியது. அதாவது 1945ஆம் ஆண்டு ஹிரோஷிமாவில் வெடித்த அணுகுண்டின் அரைப்பங்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
மௌண்ட் லெமன் ஆய்வுக் குழுவின் விண்வெளி ஆய்வாளர்களால் கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி இந்த விண்கல் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# தாய்லாந்து பிரதமரின் பதவி பறிபோகின்றது

### அவர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பு




பாங்கொக்.மே 08
பதவியை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் தாய்லாந்து பிரதமர் யிங்லக் சினவத்ராவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் அவர் குற்றவாளியாக காணப்பட்டுள்ளதாக அந்நாட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.
எனவே, அவர் பதவியில் இருந்து விலக வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.
சினவத்ராவின் பதவி தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இதன் பின்னர் அவர் பிரதமராகச் செயற்பட முடியாதெனவும் அந்நாட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. தாய்லாந்தின் தேசிய பாதுகாப்புப் பிரதானியை முறையற்ற விதத்தில் பதவியில் இருந்து நீக்கியதாக யிங்லக் சினவத்ரா மீது அரசமைப்பு நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
இந்தக் குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரித்த போதிலும், சினவத்ரா வழக்கு விசாரணைகளில் கலந்துகொண்டிருந்தார். குற்றச் சாட்டு நிரூபிக்கப்பட்டமையை அடுத்து, எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கு யிங்லக் சினவத்ரா அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதென தாய்லாந்து தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)



தென்னாபிரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் நேற்று நடைபெற்றது. இதில் தென்னாபிரிக்கப் பேராயரும் மனித உரிமைவாதியுமான டெஸ்மன் டுட்டு வாக்களிப்பு நிலையமொன்றில் தனது வாக்கை பதிவு செய்கிறார். (த)

## சூழ்நிலைகளைச் சாதகமாக பயன்படுத்தினார் கிளின்ரன்

### மனம் திறக்கிறார் மோனிகா




வாஷிங்ரன்.மே 08
அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன் சூழ்நிலைகளைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதாக வெள்ளை மாளிகை முன்னாள் பணிப்பெண் மோனிகா லுவின்ஸ்கி தெரிவித்துள்ளார்.
இருப்பினும் இருவரும் மனம் ஒத்தே உறவில் ஈடுபட்டதாகவும் மோனிகா தெரிவித்துள்ளார்.
பிரபல பத்திரிகையில் மோனிகா பிரத்தியேகமாக எழுதியுள்ள கட்டுரையில்: எனக்கும் முன்னாள் அதிபர் கிளின்ரனுக்கும் இடையே நடந்த சம்பவம் குறித்து மிகுந்த வேதனை அடைகிறேன். எனது கடந்த காலம் குறித்த சர்ச்சைகளை கிளறுவதை விடுத்து எனது எதிர்காலத்தில் கவனம் செலுத்த விரும்புகிறேன்.
கடந்த காலத்தில் நடந்த அந்த சம்பவத்துக்கு ஓர் அர்த்தம் கற்பிக்க விரும்புகிறேன். அதனால் ஏற்படும் விளைவுகளையும் சந்திக்க தயார். எங்களிடையே நடந்த சம்பவம் மனம் ஒத்தே நடந்தது. ஆனால் அந்தச் சம்பவம் அம்பலமான பிறகு நான் அடைந்த அவமானங்கள் ஏராளம்.
என் உயர்அதிகாரி சூழ்நிலைகளை அவருக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார் என்பதை மறுப்பதற்கு இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (த)

## இந்திய வைத்தியர்களுக்கு இனி இங்கிலாந்தில் வேலையில்லை?

லண்டன்.மே 08
இங்கிலாந்தில் பணிபுரியும் இந்திய வைத்தியர்கள் பலரும் வேலை இழக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.
இங்கிலாந்தில் பணிபுரியும் வெளிநாட்டு வைத்தியர்கள் பலரைக் கடந்த ஆண்டுகளில் இங்கிலாந்து மருத்துவப் பேரவை பணி நீக்கம் செய்துள்ளது.
கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் சராசரியாக 250 பேரில் ஒருவர் என்ற விகிதத்தில் இந்திய வைத்தியர்கள் வேலை இழந்துள்ளனர்.
இவற்றில் பெரும்பாலானோர் இந்தியாவில் மருத்துவம் படித்துவிட்டு இங்கிலாந்துக்குப் பணிபுரியச் சென்றவர்கள்.
கடந்த 2009ஆம் ஆண்டில் இருந்து இந்தியா மற்றும் பர்கிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வைத்தியர்கள் 117 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கும், இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற மருத்துவப் பட்டதாரிகளுக்கும் திறமையில் மிகப் பெரிய இடைவெளி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தற்போது இங்கிலாந்தில் 95 ஆயிரத்திற்கும் அதிகமான வெளிநாட்டு வைத்தியர்கள் மருத்துவ சேவை செய்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## அகதிகளை ஏற்றிச் சென்ற 2 படகுகள் கடலில் மூழ்கின

### 22 க்கும் மேற்பட்டோர் சாவு

பாரிஸ்.மே 08
ஐரோப்பிய நாடுகளில் குடியேற விரும்பும் அகதிகளை ஏற்றிச்சென்ற இரு படகுகள் சாமோஸ் என்ற தீவுக்கு அப்பால் கடலில் மூழ்கியிருக்கின்றன.
இந்த விபத்தில் 22 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்ததுடன், மேலும் 10 பேர் காணாமல் போயிருப்பதாகக் கிரேக்க கரையோரக் காவற்படை அறிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் 18 பெரியவர்களும், 4 குழந்தைகளும் அடங்கும்.
கடலில் தத்தளித்த சமயம் காப்பாற்றப்பட்ட 36 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது இதுவரை தெரியவில்லையென சீ.என்.என் செய்தி வெளியிட்டுள்ளது.

## கடற்படை நீர் மூழ்கிக் கப்பலுக்கு முதல்முறை 3 பெண் அதிகாரிகள்

### இங்கிலாந்து அரசு அறிவிப்பு

இங்கிலாந்தில் 110 ஆண்டுகளில் முதல் முறையாக நீர்மூழ்கிக் கப்பலுக்கு 3 பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இங்கிலாந்து கடற்படைக்குச் சொந்தமான நீர் மூழ்கிக் கப்பலில் பணியாற்ற மேக்ஸைன்ஸ்டைலஸ், அலைக்ஸ ஒல்சன், பென்னி தாக்ரே ஆகிய 3 பெண் தளபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த 110 ஆண்டுகளில் நீர்மூழ்கிக் கப்பலில் பெண்களை அதிகாரிகளாக நியமிப்பது இதுவே முதல் முறை. இது குறித்து இங்கிலாந்து ராணுவச் செயலாளர் பிலிப் கூறுகையில், கடற்படைநீர்மூழ்கிக்கப்பலுக்கு நியமிக்கப்பட்டுள்ள 3 பெண் அதிகாரிகளுக்கும் பாராட்டுகள். ராணுவத்தில் பெண்கள் பணியாற்றுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. எனவே ஆண், பெண் என்ற பேதம் எதுவும் கிடையாது. தற்போது இந்த நியமனத்தின் மூலமாக நாட்டு மக்களுக்குச் சேவை செய்வதில் இங்கிலாந்து மேலும் ஒருபடி முன்னேறியுள்ளது என்றார். இதுகுறித்து மேக்ஸைன் ஸ்டைலஸ் கூறுகையில், முதன் முதலாக அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பலில் பணியாற்ற எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பு வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத ஒன்று. இந்தப் பணி மிகவும் சவாலான ஒன்று. எனினும் இதை திறமையுடன் செய்வேன்-என்றார். (த)

### பெயர் மாற்றம்

வவுனியா, பூவரசன்குளம், தாலிக்குளத்தைச் சேர்ந்த **கனகரெத்தினம் கேதுராசன்** ஆகிய நான் (08.05.2014) இன்றிலிருந்து எனது பெயரை **கனகரெத்தினம் நந்தகுமார்** என்று பெயர்மாற்றம் செய்வதோடு, சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். கனகரெத்தினம் நந்தகுமார்.
(43291)(5.6.3)

### பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்பவர்களையும் நான் மன்னிக்க அருள்புரிவரே. என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறித் துதிக்கிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் என்றென்றும் உம்மிலிருந்து விலகாமல் உம்மீது நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

- ஆமென்

அடியாள்

(47586)(7.6)

# கடலில் கசினோ நிலையம் ஆரம்பிப்பது மிகச் சிறந்தது

## ஆலோசனை வழங்குகிறார் அமைச்சர் பீலிக்ஸ்

கொழும்பு,மே 8

இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக கசினோ சூதாட்ட நிலையங்களை ஆரம்பிக்க வேண்டுமாயின், கடலில் நிறுத்தப்பட்ட கப்பல் ஒன்றில் அதனை ஆரம்பிப்பது மிகவும் சிறந்தது என்று சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

இலங்கையில் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமாயின், நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

நாட்டுக்குள் கசினோ சூதாட்ட நிலையங்கள் ஆரம்பிக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அப்படி ஆரம்பிக்க வேண்டும் என்றால், கப்பல் ஒன்றில் அதனை ஆரம்பித்து சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரம் கசினோ விளையாட அனுமதி வழங்குவது பொருத்தமானதாக இருக்கும் என்று அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார். இலங்கைக்கு வருடாந்தம் சுமார் 20 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். உலகில் உள்ள பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு வருகை தர விரும்புகின்றனர்என்று அவர் குறிப்பிட்டார். (ச)

### காணவில்லை

"பொக்கன் பேனியன்" (இத்தாலியன்)
கறுப்பு நிற, நீளமான காது, நீளமான முடி கொண்ட 10 வயது நிரம்பிய நாயை உரும்பிராய் கிழக்கில் காணவில்லை. தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும்.
(47710) (45.6) தொடர்பு: 077 922 9588

### நாம் எதனைத் தியாகம் பண்ண வேண்டும்?

நாம் பணத்தை மட்டுமல்ல தீய பழக்கங்களையும் தியாகம் செய்து விட வேண்டும். தீய பழக்கங்களைத் தியாகம் செய்து விட்டால்தான் உண்மையான தியாகம், அல்லது துறவு ஆகும். தீய மனோபாவத்தை விட்டு விடுதல் மட்டுமே எமது மனித தோற்றத்தை முற்றாக மலரச் செய்வதற்கு வழி வகுக்கும்.

இதேவேளை உண்மையான மனித ஜீவியாக வாழ்தலே மனிதனின் மிகப் பெரிய கைங்கரியமாகும்.



*நன்றி:தெய்வீகம் மலரும் பொழுது*

**சாயி சிந்தனை**


### லொறி விற்பனைக்கு

1. இசுசு அலுமினிய பொடி 3.8 14½ அடி LJ-xxxx
2. அசோக் லேலண்ட் E.Comet அலுமினிய பொடி 16½ அடி LJ-xxxx

தொடர்பு: 0777 422 604

(45527)(5.6)



# புதிய மாணவர்களுக்கான அனுமதி 2014



**JUNE INTAKE**

SLIIT
COMPUTING | BUSINESS | ENGINEERING

**UNDERGRADUATE DEGREE PROGRAMMES**

### BSc Special (Hons) Degree in Information Technology (SLIIT)

*Specializations*
- Information Technology
- Computer Systems & Networking
- Information Systems
- Software Engineering
- Interactive Media
- Cyber Security

### BBA Special (Hons) Degree (SLIIT)

*Specializations*
- Human Capital Management
- Accounting & Finance
- Marketing Management
- Quality Management
- Management Information Systems

*These Degrees are offered by SLIIT as approved by the University Grants Commission under the Universities Act.*

### தகைமைகள்:

- க.பொ.த (உயர்தர) (இலங்கை அல்லது லண்டன்) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்கள் சித்தி மேலும் SLIIT நிறுவனத்தினால் நடத்தப்படும் புலமைப் பரீட்சையில் சித்தி.
- **கணினி முறைமைகள் மற்றும் வலையமைப்பு பட்டத்திற்கான அனுமதி** விண்ணப்பதாரிகள் மேற் குறித்ததிற்கு சமமான ஆனால் கணிதம் அல்லது பௌதீகவியலில் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### நுண்ணறிவு சோதனை:

- திகதியும் நேரமும் : 2014 மே 24 - (மு.ப.10.00 - மு.ப.11.00)
- அமைவிடம் : அனைத்து இததொநி வளாகங்கள் மற்றும் நிலையங்கள் (கொழும்பு, மாலபே, கண்டி, குருநாகல், மாத்தறை, யாழ்ப்பாணம்)
- மொழி மூலம் : ஆங்கிலம், சிங்களம், தமிழ்

| UNITED KINGDOM UNIVERSITIES | AUSTRALIAN UNIVERSITIES | | CANADIAN UNIVERSITIES | AMERICAN UNIVERSITIES |
|---|---|---|---|---|
| - Sheffield Hallam University | - Curtin University | - University of South Australia | - Memorial University | - University of Cincinnati |
| - Robert Gordon University | - RMIT University | - Queensland University of Technology | - Algoma University | - Southeast Missouri State University |
| - University of Nottingham | - Swinburne University | - The University of New Castle | | - Illinois State University |
| - Teesside University | - Deakin University | - University of Tasmania | | |
| - Loughborough University | | | | |
| - Aston University | | | | |

*After completing 2 years at SLIIT, student may transfer to any partner university given above.*

### எவ்வாறு ஒரு விண்ணப்ப படிவத்தினைப் பெறுவது

- www.sliit.lk எனும் முகவரியிலிருந்து தரவிறக்கம் செய்தல்.
- அல்லது எமது வளாகங்கள் அல்லது கல்வி நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுதல்.

### விண்ணப்பிக்கும் முறை

- ஆர்வமுடைய பரீட்சார்த்திகள் பின்வரும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

Senior Manager / Academic Affairs
SLIIT, BoC Merchant Tower, #28, St Michael's Road, Colombo 03

**விண்ணப்ப முடிவு திகதி: 2014 மே 19**

SLIIT
COMPUTING | BUSINESS | ENGINEERING
BoC Merchant Tower,
#28, St. Michael's Road, Colombo 03.
Tel: (011) 230 1904 URL: www.sliit.lk E-mail: info@sliit.lk

**மேலதிக விவரங்களுக்கு: (011) 230 1904**


## பொதுநோக்கு மண்டபம் இல்லை

கிளிநொச்சி, மே 8
கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாவடியம்மன் கிராமத்துக்கு பொதுநோக்கு மண்டபமொன்றோ, முன்பள்ளியொன்றோ இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.
இந்தக் கிராமத்துக்கு பொதுநோக்கு மண்டபமொன்றை அமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டபோதிலும் இதுவரை பயனேதும் கிட்டவில்லை என்று மக்கள் கூறியுள்ளனர்.
எனவே இந்தப் பகுதிக்கு பொதுநோக்கு மண்டபம் ஒன்றை அமைத்துத் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# போரில் அவயவங்களை இழந்தோருக்கு அமதிக் கரங்கள் பேருதவி அளிக்கும்

### *திறப்பு விழாவில் மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, மே 8
போரில் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கைக்கால் பொருத்தும் நிலையம் பேருதவியாக அமையும் என அமதிக்கரங்கள் திறப்பு விழாவில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:
கடந்த 30 வருட காலப் போரினால் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் எமது மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உளவளத்துணைமற்றும்செயற்கை அவயவங்கள் பொருத்துவதற்காக இந்தச் சேவை நிலையம் வன்னிப் பகுதியில் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டுதலுக்குரியது.
முடிந்துபோன கொடிய போர் எம்மவர்களை அனைத்து வழிகளிலும் பாதித்துள்ளது. உயிரை மாய்த்தவர்களைவிட கொடிய வடுக்களைச் சுமந்து இன்றும் வேதனையை அனுபவித்து வருகிறார்கள். மன உளைச்சலுக்குள்ளானதுடன் பலர் தமது அவயவங்களையும் இழந்து தவிக்கிறார்கள். அவர்களைக் கைதூக்கி விட வேண்டியகடப்பாடுஎம்அனைவருக்கும் உள்ளது-என்றார்.
மாங்குளம் பிரதேசத்தில் லெபெறா நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட அமதிக் கரங்கள் நல்வாழ்வு நிறுவன கட்டடத்தை நேற்று மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் திறந்து வைத்தார்.



*மாகாண சுகாதார அமைச்சர் கட்டடத்தை திறக்கிறார்*

இந்த நிறுவனமானது பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடல் நல சிகிச்சை, உளவள சிகிச்சை, பொருளாதார உதவிகள், கல்வி சார் உதவிகள் மற்றும் ஆன்மிக ரீதியிலான உதவிகளைச் செய்யவுள்ளது.
இந்த நிகழ்வில் அமலமரித் தியாகிகள் சபையின் வட மாகாண முதல்வர், அருட்தந்தைகள் மற்றும் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-101)

## ஜெயபுரம் கிராமத்துக்கு கிடைத்தது மின்சாரம்

கிளிநொச்சி, மே 8
கிளிநொச்சி, பூநகரி, ஜெயபுரம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.
1983 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்தக் கிராமம் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் தற்போதும் காணப்படுகின்றது.
இந்தக் கிராமத்தில் தற்போது 700 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன.
இந்த மின்சார வசதி வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்துகொண்டு மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.
ஜெயபுரம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ். இராசரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பூநகரி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் எஸ்.குணசீலன், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர்களான எஸ்.இராசலிங்கம், எஸ்.குகேந்திரன், எஸ்.காசிம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-18)

# உவர்நீர்த் தடுப்பு அணை இன்னும் புனரமைப்பில்லை

### கிராமங்களுக்குள் புகுந்தது கடல் தண்ணீர்

கிளிநொச்சி, மே 8
கிளிநொச்சி, கிராஞ்சி, நாகமுனை உவர் நீர்த் தடுப்பு அணை இதுவரை புனரமைக்கப்படாமையால் பொன்னாவெளி, வலைப்பாடு ஆகிய கிராமங்களுக்குள் கடல் நீர் புகுந்து நிலம் உவரடைந்து வருகிறதுஎன்று மக்கள்கவலை தெரிவித்தனர்.
கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பொன்னாவெளி, வலைப்பாடு ஆகிய பகுதிகளுக்குள் கடல் நீர் உட்புகாதவாறு அமைக்கப்பட்டிருந்த நாகமுனை உவர் நீர்த்தடுப்பு அணை கடந்த கால போரால் சேதமடைந்துள்ளது.
இந்த உவர் நீர்த் தடுப்பு அணை இன்றுவரை புனரமைக்கப்படவில்லை. அதனால் பொன்னாவெளி, வலைப்பாடு ஆகிய கிராமங்களுக்குள் கடல் பெருக்கெடுக்கும் போது உவர் நீர் புகுந்து வருகின்றது மக்கள் கூறுகின்றனர். இந்தப் பகுதி நிலங்களும் உவரடைந்து வருவதால் பயிர்ச் செய்கை எதனையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குடிதண்ணீர் கிணறுகள் உவர் தண்ணீர் கிணறுகளாக மாறி வருகின்றன என்று கூறப்படுவதால் உவர் நீர்த் தடுப்பணையை அமைத்துத் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# மருத்துவமனைக்கு வைத்தியர் இல்லை

### கண்டாவளையில் நோயாளர் அவலம்

கண்டாவளை, மே 8
கிளிநொச்சி, கண்டாவளை மருத்துவமனையில் நிரந்தர வைத்தியர் இல்லாததால் அங்கு மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.
300 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள இந்தக் கிராமத்து மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் இல்லாததால் நோயாளர்கள் 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தருமபுரம் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர்.
எனவே கண்டாவளை மருத்துவமனைக்கு நிரந்தர வைத்தியர்ஒருவரைநியமிக்கவேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இதேவேளை வன்னேரிக்குளம், வட்டக்கச்சி ஆகிய வைத்தியசாலைகளிலும் நிரந்தர மருத்துவர் எவரும் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-18)


# இலஞ்சம் கொடுத்து வழக்கைத் தள்ளுபடி செய்யலாம் எனப் பணம் பெற்றவர் கைது

பொலிஸாருக்குப்பணம்கொடுத்தால் வழக்கைத் தள்ளுபடி செய்யலாம் என்றுகூறி தன்னை பொலிஸாரின் நண்பர் என்று அறிமுகப்படுத்தி வழக்கொன்றுடன் சம்பந்தப்பட்ட ஒருவரிடம்10 ஆயிரம்ரூபாவைப்பெற்ற நபரொருவரை ஒரு மாதத்தின் பின்னர் பொலிஸார் கைது செய்தனர்.
அவர் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
மன்னார் பனங்கட்டிக் கொட்டு மேற்கைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை இருதயநாதர் என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
மன்னார் பனங்கட்டிக்கொட்டுவில் தனியார் காணி ஒன்றில் இருந்து சிறுதொகைக் கஞ்சாவை மன்னார் பொலிஸார் கடந்த மாதம் கைப்பற்றினர். அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் அந்தக் காணிக்கு அருகில் வசிக்கும் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.
அவர் தொடர்பான வழக்கு மன்னார் நீதிமன்றில் இடம் பெற்று வந்தது. அதேவேளை தாம் பொலி ஸாருக்கு நன்கு அறிமுகமான வர் என்று கூறி அந்த நபரிடம் சென்ற இருதய நாதர், பொலிஸாருக்கு 25 ஆயிரம் ரூபா பணம் கொடுத்தால் வழக்கைத் தள்ளுபடி செய்ய முடியும் என்று கூறியுள்ளார்.
பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டவரிடம் பணம் இல்லாததனால் அவரது தாயார் தமது வீட்டிலிருந்த தொலைக் காட்சியை 10 ஆயிரம் ரூபாவுக்கு அடைவுவைத்து அந்தப்பணத்தை குறிப்பிட்ட நபரிடம் கொடுத்த தோடுமிகுதிப்பணத்தைப்பின்னர் பெற்றுத்தருவதாகக்கூறியுள்ளார்.
நீதிமன்றில்வழக்குவிசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதியென இனங்காணப்பட்டு நீதிமன்று அவரை விடுதலை செய்தது. சில நாள்களின் பின்னர் பொலிஸாரைக் கண்டதும் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டவர் வழக்கைத்தள்ளுபடிசெய்வதற்காகத் தாம் இருதயநாதரிடம் பணம் கொடுத்த விடயத்தை பொலிஸாரிடம்கூறவேஉண்மை நிலைமை தெரியவந்தது.
அதனையடுத்து நேற்று முன்தினம் இருதய நாதர் கைது செய்யப்பட்டார். அவர் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும்20ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதி மன்று உத்தரவிட்டது. (த-4-103)

# அடிப்படை வசதிகள் இல்லாது முள்ளிக்குளம் கிராம மக்கள்

### வட மாகாண அமைச்சர்கள் நேரில் சென்று அவதானிப்பு

மன்னார், மே 8
முள்ளிக்குளம் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயவென வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வட மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் முள்ளிக்குளத்துக்குச் சென்றுள்ளனர்.
முள்ளிக்குளம் மக்களை அவர்களது சொந்தக் கிராமத்தில் குடியேறவிடாமல் மலக்காடு பகுதியிலேயே அவர்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.
அவர்களது விவசாய காணிகள் உட்பட விவசாயத்துக்குத் தேவையான குளம் அனைத்தையும் கடற்படையினர் அபகரித்து வைத்துள்ளனர்.
மலக்காடு பகுதியில் மீள்குடியேற்றப்பட்டதால் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக அக் கிராம மக்கள் தெரிவித்து வந்தனர்.



*முள்ளிக்குளம் பகுதியை பார்வையிட்ட அமைச்சர்கள்*

இது குறித்து தமக்கு உரிய தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருமாறு பலதரப்பட்டவர்களிடம் முறையிட்டும் தீர்வுகள் எதுவும் கிடைக்கவில்லை என்று மக்கள் கூறினர்.
இந்த நிலையில் குறித்த மக்களின் நீண்டநாள்கோரிக்கைக்கு அமைவாக அமைச்சர்களின் பயணம் அமைந்துள்ளது.
முள்ளிக்குளம் சென்ற அமைச்சர்கள் குறித்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்துள்ளனர்.
கடற்படையினர் கட்டுப்பாட்டுக்குள் உள்ள விவசாய நிலங்களை மீட்டுத்தருமாறு மக்கள் அமைச்சர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அங்குள்ள குளங்களை புனரமைத்து பயன்பாட்டுக்கு பெற்றுத்தருமாறும், தமது கால்நடைகளை பராமரிக்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கிராம மக்கள் அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்த அமைச்சர்கள் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வட மாகாண முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டுசென்றுபிரச்சினைக்கு உரிய தீர்வு பெற்றுத்தருவதாகத் தெரிவித்தனர். (ச-56)

# அடிப்படை வசதிகளின்றி வாழுகின்றனர் தமிழர்

## வடக்கு, கிழக்கில் அவலம் என்கிறது கூட்டமைப்பு


கோவிந்தம் கருணாகரம்

மட்டக்களப்பு,மே 8
போருக்கு பின் இடம்பெயர்ந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை மீளக் குடியேற்றி விட்டோம் என்று சொல்லும் இந்த அரசு, அங்கு மக்களை எந்தவித அடிப் படைவசதிகளுமின்றி கொட்டில் களிலே தங்கவைத்துள்ளது.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் குற்றஞ்சாட்டியுள் ளார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்றுபிரதேசத்தின் செட்டிப்பாளை யம் நியூட்டன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த கலாசார விளையாட்டுவிழா செட்டிப்பாளை யம் மகாவித்தியாலய மைதா னத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:-
திருகோணமலை, சம்பூரில் முகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
மட்டக்களப்பில் படையினர் இன்றும் மக்களின் வீடுகளில் முகாம்களை வைத்திருக்கின் றார்கள். அம்பாறையிலும் அதே மாதிரி முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன.
வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தங்களது சொந்த பிரதேசத் திலே அகதிகளாக இருக்கும் போது வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத் தைச் சேர்ந்த மக்களுக்கு சகல வசதிகளையும் அரசு ஏற்படுத் திக் கொடுத்துள்ளது. லட்சக் கணக்கான ஏக்கர் நிலத்தையும் அவர்களுக்கு பகிர்ந்தளித்து எமது இனப் பரம்பலை வடக்கு, கிழக்கில் திட்டமிட்டு அரசு குறைத்துக் கொண்டிருக்கிறது- என்றார். (ச)

## தமிழர் நிலத்தை பாதுகாக்க போராடுகிறது கூட்டமைப்பு

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே 8
எங்களுடைய இனம், நிலம், மொழி, கலாசாரங்களைப் பாதுகாப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின் றது.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமக்குச் சுய்நிர்ணய உரிமை கிடைக்க வேண்டும் என்பதே தமிழர்களின் விருப்பாகும். அதற்காகத்தான் இத்தனை வருட காலப் போராட்டம் இடம் பெற்றது.
தந்தை செல்வா தமிழ் மக்க ளுக்காக அஹிம்சைப் போராட் டத்தை தொடங்கி பின்னர் அது ஆயுதப் போராட்டமாக மாற்ற மடைந்து பின்னர் இன்று தந்தை செல்வாவின் வழியி லேயே நாம் அஹிம்சை வழியில் இராஜதந்திர ரீதியில் போராடிக் கொண்டிருக்கின் றோம்.
எங்களுடைய இனம், நிலம், மொழி, கலாசாரங்களைப் பாதுகாப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போரா டிக் கொண்டிருக்கின்றது. தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பு எப் போதும் யாருக்கும் சோரம் போகமாட்டாது-என்றார். (ச)

## தொழில் முயற்சியாளருடன் அட்டாளைச்சேனையில் சந்திப்பு

அட்டாளைச்சேனை,மே 8
சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களு டனான சந்திப்பு அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.
இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண அலுவலகத் தால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர் பான தகவல்கள் சேகரிக்கப் படுவதுடன், இந்தத் தொழில் முயற்சியாளர்களுக்கான கருத் தரங்குகளும் கிழக்கு மாகா ணத்தின் சகல பிரதேச செயல கங்களினூடாகவும் நடத்தப் பட்டு வருகின்றன.
சிறந்த முறையில் தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணுதல், அவர் கள் எதிர்நோக்கும் பிரச்சினை களைக் கண்டறிதல், தொழில் களை விருத்தி செய்வதற்கு எவ்வகையான உதவிகளை எதிர்பார்க்கின்றார்கள் என் பதை அறிந்துகொள்ளுதல் என் பவை குறித்து தகவல்களைச் சேகரிப்பதற்காகவே இத்தகைய சந்திப்புக்கள் நடத்தப்பட்டு வரு கின்றன. (ச)

**எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிதல், தொழில் களை விருத்தி செய் வதற்கு எவ்வகையான உதவிகளை எதிர்பார்க் கின்றார்கள்.**

## சுகாதார தொழிலாளருக்கு மருத்துவப் பரிசோதனை


பரிசோதனையில் ஈடுபட்ட தொழிலாளர்கள்

மட்டக்களப்பு,மே 8
மட்டக்களப்பு மாநகரசபையில் சேவையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பரிசோதிக் கும் மருத்துவ முகாம் மட் டக்களப்பு நகர மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடை பெற்றது.
மட்டக்களப்பு போதனா வைத் தியசாலையின் அனுசரணை யுடன் மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் மா.உதய குமார் தலைமையில், சுமார் 100 சுகாதாரத் தொழிலாளர் களுக்கு மருத்துவப் பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டன.
மட்டக்களப்பு போதனா வைத் தியசாலையின் வைத்திய நிபு ணர்களான வைத்தியக்கலாநிதி ஆரணி, கௌரிபாலன், ஏ.எம். பூகீம் ஆகியோர் அவர்களுக் கான மருத்துவப் பரிசோதனை களை மேற்கொண்டனர். (ச)

## உணவகங்களில் திடீர் சோதனை

அம்பாறை,மே 8
சாய்ந்தமருது நகரிலுள்ள ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் பலசரக்கு கடைகளில் நேற்று புதன்கிழமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர்ச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் குறித்த வர்த்தகர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர். கல்முனை மாநகர சபையின் பிரதம சுகாதாரப் பணிப்பாளர் எம்.சி.எம்.மாஹிர் மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி சஹீலா இஸ்ஸதீன் ஆகியோரின் மேற்பார்வையில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
இந்த நடவடிக்கையில் சாய்ந்தமருது பொதுச் சந்தை, மரக்கறி மற்றும் பழக்கடைகள், ஹோட்டல்கள், உணவகங்கள், பலசரக்கு கடைகள் போன்றவை சோதனைக்குட்படுத்தப்பட்டன. பல இடங்களில் காலாவதியான மற்றும் மனித நுகர்வுக்கு பொருத் தமற்ற உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன. (ச)

## திருமலையிலும் பெய்தது மழை

திருகோணமலை,மே 8
நீண்ட கால இடைவெளியின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் மழை பெய்துள்ளது. வறட்சியால் கைவிடப்படும் நிலையில் காணப்பட்ட வயல் நிலங்கள் தற்போது பெய்த மழையால் உயிர் பெற் றுள்ளன.
கடந்த காலத்தில் மழை வேண்டி சர்வமத பிரார்த்தனைகள் இடம் பெற்றபோதும், குறிப் பிட்ட காலத்தில் மழை பெய்யாமையால் விவ சாயிகள் பிரச்சினை களை எதிர்நோக்கி யிருந்தனர். வறட்சி யால் நிலக்கீழ் நீர் மட் டம் குறைவடைந்த தன் காரணமாக குடி தண்ணீர் பிரச்சினை பல பிரதேசங்களிலும் நிலவியமை குறிப்பிடத் தக்கது. (ச)

## கொழும்புக்கு மாற்றப்பட்டார் நெடுஞ்செழியன்

மட்டக்களப்பு மாவட்ட கச்சேரியின் திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ் செழியன் நேற்றுமுன் தினம்செவ்வாய்க்கிழமை விமானப்படை வானூர் தியில் அதிதீவிர சிகிச் சைக்காக கொழும்புக்கு இடமாற்றப்பட்டுள்ளார். மின்சாரம்தாக்கி படுகாய மடைந்த அவர் மட்டக் களப்பு போதனா வைத் தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)


27 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி ஸ்தோத்திர ஆராதனையும்
"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"
வெளிப்படுத்தின விசேஷம் 14:13
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி
ஸ்ரெல்லா சரஸ்வதி (பவானி) குணபாலன்
மண்ணில் 17★08★1942
விண்ணில் 12★04★2014

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
இனிய வாழ்வு தந்த தெய்வமே! மாதம் ஒன்று சென்றதம்மா
உங்கள் மதிமுகம் மாறவில்லை எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக
அமைந்த உங்கள் சிரித்தமுகம் காண்பதற்கு ஏங்கித்தவிக்கின்றோம்
எம்முடன் சேர்ந்து வாழ்ந்த ஒவ்வொரு கணமும் எமக்குள் சொர்க்கமாய் இனிக்குதம்மா
உங்களை என்றும் எங்கள் இதயத்தில் வைத்து ஆராதிப்போம் அம்மா
எங்கள் அன்புத்தாயாரின் மறைவுச்செய்தியறிந்து நேரிலும் தொலைபேசிமூலமும் ஆறுதல் கூறிய அனைத்துள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (08.05.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியள வில் எமது இல்லத்தில் இடம்பெறும் நன்றி ஆராதனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இல.175, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [47685][3.6.4]
பிள்ளைகள்.



ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி
திருமதி
ஆதிபுவனேஸ்வரி செல்வராசா
(முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியை)
பிறப்பு 08.11.1938
இறப்பு 08.05.2009

ஆண்டுகள் ஐந்து கழிந்துவிட்டன
ஆனாலும் அழியவில்லை உங்கள் உருவம்
உங்களைக் கண்டதும் ஆனந்தமடைந்தோம் நிலைக்கவில்லை
விடியத்தான் தெரியும் நாம் கண்டது கனவு என்று
இன்றைய நாளில் மலர் தூவி கண்ணீர் சிந்தி அஞ்சலிக்கின்றோம்.
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (47648)(4.5.6.3)
- குடும்பத்தினர்.



ஈரவிழிகளில்
இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சின்னத்தம்பி கந்தசாமி
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
திதி : 08.05.2014 சித்திரை நவமி
அன்னை மடியில் 21.12.1937
ஆண்டவன் அடியில் 30.04.2012
ஈராண்டு காலம் ஆகிவிட்ட தப்பா
நீங்கள் இறைவனடி சேர்ந்து
நாம் சேர்ந்திருந்த காலங்களின் செழுமையான நாள்களை
நினைத்தே காலத்தைக் கழிக்கின்றோம்
வாழ்நாளில் நாம் வசந்தமாய் வாழ்ந்திட
வழி அமைத்து வைத்தீரே...
உமைப்பிரிந்து உருகுகின்றோம்
ஆண்டுகள் இரண்டாக...
முருகமூர்த்தி வீதி,
சங்கானை கிழக்கு,
சங்கானை.
உங்கள் ஆத்மசாந்தியடைய பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.
(47674)(7.6)

# மீண்டும் இரு ரயில்கள் அளுத்கமவில் மோதல்

## ஆறு பேர் பணியிலிருந்து இடைநிறுத்தம்



அளுக்கமையில் மோதிய ரயில்

கொழும்பு,மே 8

களுத்துறை, அளுத்கம ரயில் நிலையத்தில் நேற்று புதன் கிழமை அதிகாலை இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

அளுத்கம ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எரிபொருள் ரயிலுடன் சிலாபம் நோக்கி புறப்பட்ட ரயிலே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று புதன் கிழமை அதிகாலை 3.50 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் ரயில் சாரதிக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. ரயில் பெட்டிகள் சில தடம் புரண்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தவிபத்துக்காரணமாக தென் கரையோர ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது.

அளுத்கம ரயில் நிலையத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தையடுத்து காலியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த எரிபொருள் ரயிலின் சாரதி,சாரதி உதவியாளர், பிரதான காப்பாளர், உதவிக் காப்பாளர் மற்றும் அளுத்கம ரயில் நிலையத்தின் இரு பொறுப்பாளர்கள் ஆகியோர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்:

இதேவேளை- பொத்துஹரவில் அண்மையில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 90 வீதமான மக்கள் வறுமையால் பாதிப்பு

## சுஜீவ சேனசிங்க எம்.பி.குற்றச்சாட்டு



சுஜீவ சேனசிங்க

கொழும்பு,மே 8

இலங்கையில் 90 வீதமானவர்கள் வறுமையில் வாடுகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரம் குறித்து திருப்தியடைய முடியாது.

இலங்கையை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுடன் ஒப்பீடு செய்ய முடியாது.

கட்டுநாயக்கா - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்தேன். அதிவேக நெடுஞ்சாலை உருவானமை மகிழ்ச்சியளிக்கின்றது.

எனினும் அதிவேக நெடுஞ்சாலை அமைப்பது தொடர்பில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும்.

அரசு சில திட்டங்களை விலை மனுக்கோரல் அடிப்படையில் ஆரம்பிக்கவில்லை. அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும்போது சர்வதேச ரீதியில் எற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்-என்றார். (ச)

# தகவலைப் பெற்றுக்கொள்ள புதிய தொலைபேசி இலக்கம்

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிமுகம்

கொழும்பு,மே 8

இலங்கையின் குடிவரவு குடியகல்வு பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள விசேட தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தால் இந்த விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

1962 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்வதன் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் துணைக் கட்டுப்பாட்டாளர் ஜயவீர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. வார நாள்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.45 மணி வரை தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கும் நோக்கில் இவ்வாறு தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)






சர்வதேச இளைஞர் மாநாடு அம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது மாநாட்டுக்கு வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் கலாநிதி ஜோன் டபிள்யூ ஆஷிப் வரவேற்கிறார். அருகில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும உட்பட முக்கியஸ்தர்கள் காணப்படுகின்றனர். (ச)

# பாதுகாப்பான பயணத்தில் இலங்கை முன்னிலையில்

## விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,மே 8

இலங்கையின் விமான போக்குவரத்து கட்டுப்பாடு பாதுகாப்பான முறையில் உள்ளது. இந்த விடயத்தில் ஆசிய நாடுகளின் மத்தியில் இலங்கை முன்னிலையில் இருக்கிறது என்று விமான நிலைய மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் தலைவர் பிரசன்ன விக்ரமசூரிய தெரிவித்தார்.

சிவில் வான்வழிச்சேவைகள் அமைப்பான கன்சோ அமைப்பின் ஆசிய பசுபிக் மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு துறையாக வான்போக்குவரத்து காணப்படுகிறது. இலங்கையிலும் வான் போக்குவரத்து அதிகரித்துள்ளது. இலங்கையின் வான்போக்குவரத்து கட்டுப்பாடு பாதுகாப்பான முறையில் பேணப்படுகிறது. இதனால் தான் இதுவரை எந்த விதமான இடர்களும் ஏற்படவில்லை. அதிகரித்துவரும் வான் போக்குவரத்துப் பாவனைக்கு ஏற்ப இலங்கையை கேந்திர நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளது.

2030ஆம் ஆண்டு விமானப் போக்குவரத்துப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது உள்ளதைவிட மூன்று மடங்காக அதிகரிக்கும். அதற்கேற்ற வகையில் இலங்கையின் விமானப் போக்குவரத்துத் துறையை அபிவிருத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது- என்றார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எல்லோர் கைகளாலும் கொல்ல முடியும் கைகளை வெட்டுவதல்ல அதற்குத் தீர்வு

ஐக்கிய நாடுகள் சபையையும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளையும் மதிப்பதில்லை என்பதில் இலங்கை அரசு மிகத் திட்டவட்டமாக இருக்கிறது என்பதை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்தியுள்ளது.

வடக்கில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைக்கும்படியும் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீட்டைக் குறைக்கும்படியும், மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. உள்ளூர் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா என்று இதனை வலியுறுத்துவோர் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

இவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கே என்று மீண்டும் நிரூபித்திருக்கிறது இலங்கை அரசு. இறுதிப் போரில் உயிரிழந்தவர்களுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் எவையும் நிகழ்த்தப்படக்கூடாது என்று இராணுவம் உத்தரவிட அனுமதித்ததன் மூலம் சர்வதேச அழுத்தத்தை புறக்கணித்துள்ளது இலங்கை அரசு.

அதுவும், புதிதாகத் தூதுவர்களாகப் பதவியேற்று வெளிநாடுகளுக்குச் செல்ல உள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போதே இலங்கை இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி இந்த உத்தரவை துணைவேந்தருக்கும், பீடாதிபதிகளுக்கும், மாணவர்களுக்கும் விடுத்திருக்கிறார். இராணுவ முகாமுக்கு இவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு, தான் இருக்கும் வரையில் இத்தகைய பொது நிகழ்வுகளுக்கு அனுமதிக்க முடியாது என்று மேஜர் ஜெனரல் உதய பெரேரா கடிந்துகொண்டிருக்கிறார்.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் அவர்கள் இறந்த தினத்தில் நினைவேந்தல் நிகழ்வைச் செய்யலாம், ஏன் பொது இடத்தில் அப்படிப்பட்ட நிகழ்வை நடத்தவேண்டும்? அதற்கு ஒரு போதும் தான் அனுமதிக்க மாட்டார் என்பதே அவரது திட்டவட்டமான முடிவு.

இதன் மூலம் அவர் இரு தவறுகளை இழைக்கிறார் என்பதை அவர் அறிந்திருக்கிறாரா என்பது தெரியவில்லை. முதலாவது 1978 அரமைப்புச் சட்டம் ஒன்றுகூடுவதற்காக ஒவ்வொருவருக்கும் வழங்கியிருக்கும் சுதந்திரத்தை அவர் மறுதலிக்கிறார். அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு இராணுவத்திடம் அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை.

இந்த நிகழ்வுகள் வன்முறைக்குத் தூண்டுதலாக அமையும் என்று அரசு கருதுமானால், அதனைத் தடுக்க பொலிஸாரைக் கொண்டு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம். அரசமைப்பை மீறி மக்களின் உரிமையைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் இராணுவத்துக்குக்கூட இல்லை. அப்படிச் செய்வது, அரசமைப்பு உறுதிப்படுத்தும் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயல். இது ஒரு மனித உரிமை மீறலும்கூட. ஆனாலும் இவ்வளவு சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியிலும், பகிரங்கமாக மக்களின் அடிப்படை உரிமையை மீறுகிறது இராணுவம். இதற்கான துணிச்சல் எங்கிருந்து வந்தது? இலங்கையின் அரசமைப்பைவிட இராணுவம் எப்போது அதிகாரம் மிகுந்ததாகியது?

மேஜர் ஜெனரல் இழைத்திருக்கும் இரண்டாவது தவறு, பொலிஸாரே தலையிடுவதற்கு முன்னனுமதி பெறவேண்டும் என்ற பாரம்பரியம் கடைப்பிடிக்கப்படுகையில் பல்கலைக்கழக விவகாரத்திற்குள் தலையிட்டமை. இதன் மூலம் வடக்கில் சிவில் நிர் வாகத்தில் இராணுவத்தின் மேலாதிக்கத்தை - போர் முடிந்த பின்னரும்கூட - அவர் நிலைநாட்டியிருக்கிறார். அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டுவிட்ட நிலையில் சிவில் நிர்வாகத்தில் மூக்கை நுழைப்பதற்கு இராணுவத்துக்கு எந்த அதிகாரமும் இல்லை.

ஆனால், வடக்கில் மட்டும் - தமிழர்களின் தாயகபூமி என்பதால் - இவை எல்லாம் அனுமதிக்கப்படுகின்றன. கொழும்பில் ஆட்சியில் உள்ளவர்கள் இவற்றை அனுமதிக்கிறார்கள். புதிய தூதர்களாகப் பணியாற்றப் போகிறவர்கள், இங்கு சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு எத்தனை வலுமிக்கது என்பதையும் பார்த்துச் செல்வது நல்லதுதான்.

அதேநேரத்தில், இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கை இராணுவம் எடுக்கும் முன் நடவடிக்கைகளை யாரும் குறைகூறப்போவதில்லை. அதற்கான முழு உரிமையும் கடமையும் இராணுவத்திற்கு உள்ளது. அதற்காக மக்களின் உரிமைகளை மீறும் அதிகாரம் அதற்குக் கிடையாது. அவர்களின் உரிமைகளையும் சேர்த்துப் பாதுகாக்கவேண்டியதே இராணுவத்தின் கடமை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

எல்லோருடைய கைகளாலும் கொலைகளைச் செய்ய முடியும். அதற்காக அனைவரின் கைகளையும் வெட்டிவிடுவதுதான் தீர்வு என்றால், அது மிலேச்சத்தனம்; காட்டுமிராண்டித்தனம். அதைச் செய்யாதீர்கள்.

# தமிழர்கள் இனியும் ஏமாறலாமா?

சேரலாதன்

இலங்கை அரசினால் அண்மையில் வெளியிடப்பட்ட புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புக்கள் மீதான தடைப்பட்டியலை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அதனை நடைமுறைப்படுத்தவும் ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனீவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற் றச் செய்வதில் புலம்பெயர் அமைப்புக்கள் முனைப்புடன் செயற்பட்டதன் காரணமாகவே இலங்கை அரசினால் இந்தத் தடைப் பட்டியல் வெளியிடப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், நாட்டில் மீண்டும் புலிகளின் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்குப் புலம்பெயர்ந்தவர்கள் உதவுவதாக இலங்கை அரசின் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இதனை மறுப்பார் இல்லாமல் இல்லை. கடந்த 2009 ஆம் ஆண்டு புலிகள் முற்று முழுதாகத் தோற்கடிக்கப்பட்ட பின்னர் பயங்கரவாதச் செயல்கள் எதுவும் இந்த நாட்டில் இடம்பெறவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. இலங்கை அரசு கூட பயங்கரவாதத்தைத் தோற்கடித்து சாதனை புரிந்த நாடு இலங்கைதான் என மார்தட்டிக் கூறியது. வேறு நாடுகள் விரும்பினால் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பது தொடர்பாகத் தம்மிடம் பாடம் கற்றுக் கொள்ளலாம் எனவும் அது கூறிக் கொண்டது. இது தொடர்பான சில மாநாடுகளும் வெளிநாடுகளின் பங்களிப்புடன் இங்கு இடம்பெற்றன. ஆக பயங்கரவாதத்தின் நிழல் கூட இல்லாத நாடு இலங்கையென தற்போது பிரகடனப்படுத்தப்பட்டது. போரினால் பல்வேறு இன்னல்களை அனுபவித்த இந்த நாட்டு மக்கள் தமது வேறு பிரச்சினைகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து வைத்துவிட்டு அமைதியை அனுபவிக்க ஆரம்பித்தனர்.

ஆனால் ஜெனீவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இலங்கை அரசு தனது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கிக் கொண்டது. மீண்டும் புலிக்கதைகள் உலவத் தொடங்கின. இதையொட்டிக் கைதுகளும், விசாரணைகளும் இடம்பெற்றதால் தமிழ் மக்கள் மீண்டும் பீதிக்குள் தள்ளப்பட்டனர். அவர்களின் வாழ்க்கையில் மீண்டும் இருள் சூழ்ந்து கொண்டது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போது இந்தியா நழுவிக் கொண்டமை தமிழ் மக்களுக்கு ஆறாத வேதனையை அப்போது கொடுத்தது. இந்தியாவின் நயவஞ்சகமான செயற்பாடுகளை அறிந்து கொண்டவர்கள் இது குறித்து பெரியஅளவில் அலட்டிக் கொள்ளவில்லை. ஆயினும் இந்தியாவின் அச்செயலால் தமிழ் மக்களுக்கு வேதனை ஏற்பட்டமை என்னமோ உண்மை தான். என்னதான் இராஜதந்திரம், பிராந்திய நலன் என்று இந்தியா தரப்பில் பிதற்றப்பட்டாலும் இந்தியாவின் சிறுபிள்ளைத் தனத்தை அவற்றினால் மறைக்க முடியவில்லை. முன்னர் விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டிக் காட்டியே தமிழர்களுக்கு எதிரான காய்களை நகர்த்திக் கொண்டிருந்த இந்தியா, போர் ஓய்ந்து விடுதலைப் புலிகளும் முற்றாக அழிக்கப்பட்ட பின்னரும் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாதது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல. இந்தியாவின் கௌரவத்துக்கும் அழகானதல்ல. இந்த நிலையில் இலங்கையின் புலம்பெயர்ந்த தமிழர் மீதான தடையை உடனடியாகவே சிக்கெனப் பிடித்துக் கொண்ட இந்தியா இனியும் பொருத்தமில்லாத காரணங்களைக் கூறித் தப்பித்துவிட முடியாது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் விரைவில் வெளிவரவுள்ள நிலையில் புதிய அரசு பதவியேற்கும் வரை பொறுத்திருக்காது, இந்திய அரசு இலங்கையின் தடையை நடைமுறைப்படுத்தக் கிளம்பியுள்ளமை இலங்கை மீதான இந்தியாவின் அச்சத்தை வெளிச்சம் போட்டுக் காண்பிக்கின்றது. இலங்கையொரு சிறிய நாடாக இருந்த போதிலும் ஆசியாவின் வல்லரசு நாடெனத் தன்னைக் கூறிக்கொள்ளும் இந்தியாவின் கண்களில் விரல் விட்டு ஆட்டி வைப்பதில் பெரிய 'கில்லாடி'யாகவே காணப்படுகின்றது. சீனா என்ற வல்லமை படைத்த நாட்டின் ஆசீர்வாதம் இருக்கும் வரை இந்தியா இலங்கையை நெருங்கவே முடியாது. ஆனால் தன்னால் வஞ்சிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை அந்த நாடு மீண்டும், மீண்டும் புறக்கணித்து நெருக்கடிக்குள் தள்ளிவிடுவது எந்த வகையில் நியாயம் என்பதுதான் புரியவில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட இந்தியத் துணைத் தூதருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் கலந்துகொண்ட பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் உரையாற்றும்போது; ஆயுதக் குழுக்களை வளர்த்துவிட்டுப் பிராந்தியத்தில் அழிவுகளை ஏற்படுத்திய இந்தியா போர், முடிந்த பின்னர் கூட ஈழத் தமிழர்களுக்குக் காத்திரமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவில்லை



சி.க.சிற்றம்பலம்

எனக் காட்டமாகத் தெரிவித்தார். மேலும் இந்தியாவின் செயற்பாடுகள் ஈழத்தமிழர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்திருப்பதாகவும் அவர் வேதனையுடன் குறிப்பிட்டார். இந்தியா நினைத்திருந்தால் இறுதிப்போரின் போது தமிழ் மக்களைக் காப்பாற்றி இருக்க முடியுமெனவும் தமது ஆதங்கத்தை அங்கு அவர் கொட்டித் தீர்த்தார். ஆனால் அங்கு துணைத் தூதர் மகா லிங்கம் உரையாற்றும்போது;

வடமாகாணத்தை இங்குள்ள மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஆளுகின்றார்கள் என்றால் அதற்கு இந்தியாதான் காரணம் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியா அமைதிப்படை தனது நோக்கத்தை நிறைவேற்றாமல் திரும்பிச் சென்றமைக்கு இந்திய அமைதிப்படையோ இந்திய அரசோ காரணமல்ல. ஒரு நாட்டுக்கு வெளியில் இருந்து கொண்டு தாக்கம் கொடுப்பது இந்திய வெளியுறவுக் கொள்கையல்ல. இதன் காரணமாகவே இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா புறக்கணித்தது.

இவ்வாறு புறக்கணித்ததன் காரணமாகவே இந்தியா இலங்கை அரசுடன் பேச முடிகின்றது. அத்துடன் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கக்கூடிய சந்தர்ப்பத்தையும் பெற்றுள்ளது என்று தமது நாட்டுக்கு ஆதரவாக கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அவர் ஓர் இந்திய அரசின் விசுவாசமான அதிகாரி என்ற வகையில் இவ்வாறுதான் கூற முடியும். ஆனால் அவரும் ஒரு தமிழர் என்ற வகையில் அவரது உண்மையான எண்ணவோட்டம் என்ன என்பதை இப்போதைக்கு அறிந்து கொள்ள முடியாது.

என்னதான் கூறப்பட்டாலும் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் மறைவுக்குப் பின்னர் ஈழத்தமிழர்கள் மீது இந்தியா எந்த வகையிலும் அனுதாபத்துடன் நடந்துகொள்ளவில்லை என்பதுதான் உண்மையாகும். அதன் நடவடிக்கை கள் யாவும் இலங்கை அரசைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே அமைந் துள்ளன. தனது நாட்டின் ஒரு பகுதியில் தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்பதையும், ஈழத் தமிழர்களுக்கு ஏற்படும் வலி அவர்களையும் துடிக்க வைக்கும் என்ப தையும் இந்திய மத்திய அரசு எண்ணிக்கூடப் பார்க்கவில்லை.

இந்த நிலையில் இலங்கையின் தடைப் பட்டியலை இந்தியா அச்சொட்டாக நிறைவேற்றுவதற்குக் கிளம்பியுள்ளமை இனியும் ஈழத் தமிழர்கள் அந்த நாட்டின் மீது நம்பிக்கை வைப்பதில் பயனில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

ஈழத் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய தீர்வுகளையெல்லாம் மலைபோன்று குறுக்கே நின்று தடுக்கும் இந்தியா என்றுதான் திருந்தப் போகின்றது என்பதே தமிழர்களின் கேள்வியாக எழுந்து நிற்கிறது.



மகாலிங்கம்

# மகத்தான பணிகளை ஆற்றும் செஞ்சிலுவைச் சங்கம்



ஃ கு.பாலகிருஸ்ணன்
தலைவர், செஞ்சிலுவைச் சங்கம்

1828 ஆம் ஆண்டு மே 8 ஆம் திகதி சுவிஸ் நாட்டில் பிறந்த ஹென்றி டுனாண்ட், வர்த்தக நோக்கமாக 1859 ஆம் ஆண்டு இத்தாலிக்குச் சென்றபோது பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையில் சொல்பரினா என்ற இடத்தில் நடைபெற்ற போரில் பெரும்பாலான படை வீரர்கள் உயிரிழந்தும், காயப்பட்டும், காணப்பட்டார்கள். இதைக் கண்ணுற்ற ஹென்றி டுனாற்ட் அவர்களைக் காப்பாற்றுவதற்காகவும், உயிரற்ற உடல்களை அப்புறப்படுத்துவதற்காகவும் தொண்டர் அமைப்பொன்றினை உடனடியாக உருவாக்கி முதலுதவியையும், மருத்துவ உதவிகளையும் வழங்கிப் பலரைக் காப்பாற்றினார். இந்தப் போரில், தான் கண்ட காட்சியை வைத்து 1862 ஆம் ஆண்டு சொல்பரினா நினைவுகள் (Memory of solfcrina) என்ற புத்தகத்தை அவர் வெளியிட்டார். இந்தப் புத்தகம் சர்வதேச ரீதியில் செஞ்சிலுவைச் சங்கத்தை உருவாக்குவதற்கு அங்கீகாரத்தை வழங்க வழிவகுத்தது. 1863 ஆம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உருவாக்கப்பட்டது. போர்க் காலங்களில் காயப்பட்டவர்களைக் கவனிப்பதற்கு தொண்டர்கள் இணைக்கப்பட வேண்டும். இந்தத் தொண்டர்களையும், பாதிக்கப்பட்ட மக்களையும், பாதுகாக்க சர்வதேச சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு, சர்வதேசம் அவற்றை அங்கீகரிக்க வேண்டும் ஆகிய இரண்டு விடயங்களை அவர் தமது புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார்.



இன்று செஞ்சிலுவை தினம்

இந்த அமைப்பு 1919 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 192 நாடுகளினால் ஜெனிவாவில் ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடப்பட்டு உருவாக்கப்பட்ட சங்கமாகும். இது இன. மத. வர்க்க. சமூக வேறுபாடின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கும். அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

அவருடைய 'பிறந்த தினமே செஞ்சிலுவைச் தினமாக உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகின்றது. முதலில் 16 நாடுகளை ஒன்றாக இணைத்து செஞ்சிலுவைச் சங்கம் உருவாக்கப்பட்டது. இன்று ஜெனிவாவை மையமாகக் கொண்டு உலகின் 192 நாடுகளில் செஞ்சிலுவைச் சங்கம் செயற்படுகின்றது. செஞ்சிலுவை வெள்ளைப் பின்னணியில் சிவப்பு சிலுவையாக உருவாக்கப்பட்டதாகும். இது ஜெனிவா நாட்டின் தேசியக் கொடியாகிய வெள்ளைச் சிலுவையுடன் சிவப்பு பின்னணியை மாற்றி அமைந்ததாகும். இதுதான் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு வேறாக செஞ்சிலுவைப் பிறையும், வெவ்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது. இது பெரும்பாலும் முஸ்லிம் மக்கள் வாழுகின்ற நாடுகளில் புழக்கத்தில் உள்ளது. இது இரண்டையும் இணைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது சின்னமாகப் பயன்படுத்துகின்றது.

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு (International Committee of Red Cross)**

1863 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு ஆயுத மோதல்களினாலும், உள்நாட்டு கலகங்களினாலும், பாதிக்கப்படும் மக்களுக்கு உதவவென சர்வதேச நாடுகளினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நடுநிலைமையான மனித நேய அமைப்பாகும். இது பல்வேறுபட்ட அமைப்புக்களால் வழங்கப்படும் நிவாரணங்களைப் பகிர்ந்தளிக்கும் ஒரு நிறுவனமாகும். அத்தோடு துன்பப்படும் மக்களுக்கு சர்வதேச உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு மனிதநேய அமைப்புமாகும். இவ் அமைப்பு போரினால் பாதிக்கப்படும் மக்களுக்கு பக்கச் சார்பின்றி ஆறுதல் அளிக்கும் ஒரு நிறுவனமாகத் திகழ்கிறது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதுடன் போர்க் காலங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நியமங்களைப் பற்றி வலியுறுத்தும் அமைப்பாகவும் செயற்படுகிறது. ஆயுத மோதல்கள் இந்த அமைப்பின் செயற்பாடுகளில் பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது. இருந்தும் தன்னுடைய சேவையை இது செவ்வனவே மேற்கொண்டு வருகின்றது.

**தேசிய சங்கங்கள்**

உலகளாவிய ரீதியில் 192 நாடுகளில் தேசிய சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவை அந்தந்த நாடுகளில் சுகாதார சேவை, சமூக சேவை, அனர்த்த நிவாரணம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி, மருத்துவ சேவைகள் என பல்வேறுபட்ட மனிதாபிமான சேவைகளை அந்தந்த நாடுகளின் அரசுக்கு உதவும் விதத்தில் செயற்பட்டு வருகின்றது.

அத்துடன் தனது கொள்கைகளை அந்தந்த நாடுகளிலே விரிவுபடுத்தி வலைப் பின்னல் அமைப்பைக் கொண்டுள்ள ஒரு மனிதாபிமான நிறுவனமாகவும் செயற்பட்டு வருகிறது.

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் (International Federation of Red Cross and Red Crescent Societies)**

இந்த அமைப்பு 1919 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 192 நாடுகளினால் ஜெனிவாவில் ஒப்பந்தமொன்றில் கையொப்ப மிடப்பட்டு உருவாக்கப்பட்ட சங்கமாகும். இது இன மத வர்க்க சமூக வேறுபாடின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கும், அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (Sri Lanka Red Cross Society)**

1936ஆம் ஆண்டு மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கையில் பிரித்தானிய அரசினால் உருவாக்கப்பட்டது. 1948 இல் இலங்கை சுதந்திரத்துக்குப் பின்னர் சிலோன் செஞ்சிலுவை எனப் பெயரிடப்பட்டது. 1972 ஆம் ஆண்டு சிலோன் செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் எனப் பெயரிடப்பட்டு செயற்படத் தொடங்கியது. இந்தச் சங்கம் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதுடன், இடர் ஏற்படும் போது அதை எதிர்கொள்வதற்கு, இடர் முகாமைத்துவப் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி, அடிப்படை சுகாதார சேவை, இயற்கையால் மனிதனுக்கு ஏற்படும் இடர் நிவாரணங்கள், இரத்ததானம், நடமாடும் மருத்துவ சிகிச்சை, நோய்களுக்கு விழிப்புணர்வு (எயிட்ஸ், டெங்கு போன்றன)மக்கள் மத்தியில் செஞ்சிலுவைச் சங்க பரப்புரை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள், வைத்திய சாலை புனரமைப்புப் போன்ற சேவைகளை மேற்கொண்டு வருகின்றது.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை (Sri Lanka Red Cross Society Jaffna Branch)**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையாக இது இயங்கி வருகின்றது. போர்க் காலங்களில் பல்வேறுபட்ட பணிகளை மேற்கொண்ட இந்தச் சங்கம் ஊரடங்கு நேரங்களில் 24 மணித்தியாலங்கள் அம்புலன்ஸ் சேவையை மக்களுடன் இணைந்து சிறப்பாக மேற்கொண்டு வந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள், மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன. வைத்தியசாலைகளைப் புனரமைத்தும் வழங்கியது. போரின் பின்னர் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வீடுகளை அமைத்து வழங்கியும் வருகின்றது.
உதாரணம்:(இந்திய வீட்டுத்திட்டம்)

இயற்கை மற்றும் மனிதரால் மேற்கொள்ளப்படும் செயற்கை அழிவுகளால் பாதிப்புறுவோர்களின் நலன்களை மனிதாபிமான அடிப்படையில் சாதி, சமய வர்க்க, பால், இன, மொழிப் பாகுபாடின்றி, மனிதநேயம், பாரபட்சமின்மை, நடுநிலை, சுயாதீனம், ஒருமைப்பாடு, சர்வதே சமயம், தொண்டர் சேவை என்ற 7 கொள்கைகளுக்கு அமைவாக செயற்படுவதே செஞ்சிலுவைச் சங்கங்களின் குறிக்கோளாகும். செஞ்சிலுவைச் சங்கங்களின் பலம் அதன் மிகப் பரந்த தொண்டர் சக்தியாகும்.

இதுவரை இந்தச் சங்கம் ICRC, வெளிநாட்டு தேசிய சங்கங்கள், IFRCபோன்றவற்றின் உதவியுடன் செயற்பட்டு வந்தது. ஆனால் IFRC தவிர்ந்த ஏனைய சங்கங்களின் உதவிகள் தற்போது கிடைப்பதில்லை. எனவே 2013-2015 காலகட்டத்துக்கான மீள் கட்டமைப்பு (BEYOND REENGINEERING) என்ற கொள்கையை வகுத்து ஒவ்வொரு மாவட்டக் கிளைக்கும் தானாகவே கிடைக்கக்கூடிய பொருளாதார பலத்தையும், ஏனைய தொழில்நுட்ப வளத்தையும், மனித வளத்தையும் கொண்டதாக உருவாக்கச் சொந்தமான ஒரு வருமானத்தை ஈட்டுவதற்கான வழிமுறை உருவாக்கப்படல் வேண்டும் என்ற புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்த அடிப்படையில் தான் யாழ்.கிளையும், வருமானம் ஈட்டக்கூடிய ஒரு தொழிற்பாட்டினைச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. (WAY FORWARD TOWARDS SELF SUSTAI NED WELL-FUNCTI ONING BRANCHES) 2014-2015 இருந்த போதிலும் இந்தச் செயற்பாட்டை தொடர முடியாத சிரம நிலை தற்போது நிலவி வருகிறது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வெளி வட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். உறவினர், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். முக்கிய கோப்புகளை கவனமாகக் கையாளுங்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.



**இடபம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்திலுள்ளவர்களிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். சகோதர, சகோதரிகளால் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**மிதுனம்**: தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதிகளைப் பெறுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**கடகம்**: மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மனநிம்மதி கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரசு காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.



**சிங்கம்**: பழைய கசப்பான சம்பவங்களை பேசிக்கொண்டிருக்க வேண்டாம். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. சிறுசிறு ஏமாற்றங்கள் வந்து செல்லும். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.



**கன்னி**: சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.



**துலாம்**: நட்பு வட்டாரம் விரியும். உறவினர்களின் வருகையுண்டு. பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.



**விருச்சிகம்**: சில தினங்களாக தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.



**தனுசு**: வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். முன்கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**மகரம்**: திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.



**கும்பம்**: எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் பழைய மிகுதிகள் கிடைக்கும். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.



**மீனம்**: எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையேஎன்று ஆதங்கப்படுவீர்கள். உறவினர், நண்பர்களை பகைத் துக்கொள்ளாதீர்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

## நாளை

**சித்திரை-26 வியாழக்கிழமை | 09.05.2014**

திதி: தசமி பி.இ.12.38 வரை
நட்சத்திரம்: பூரம்
பி.இ.03.53 வரை

சுபநேரம்:05.54-07.24 வரை
இராகுகாலம்: 10.24-11.54 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து... வேற்றுமையில் ஒற்றுமை




"புலன்களை வெளிநோக்கு உள்ளவையாகவே இறைவன் படைத்துள்ளார். அதனால் மனிதர்கள் தங்களுக்கு உள்ளே பார்க்காமல் வெளித் தோற்றங்களையே பார்க்கிறார்கள். அவருள் யாரோ ஒரு தீரன் சாகா நிலையை விரும்பிப் புலன்களை உள்முகமாகத் திருப்பி, ஆன்ம ஞானம் பெறுகிறான்." நான் முதலிலேயே சொன்னது போல், வேதங்களின் முதல் ஆராய்ச்சி, வெளிப் பொருள்களைப் பற்றியதாகவே இருந்தது. பிறகு, வெளி உலகில் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது என்ற கருத்துத் தோன்றியது. வெளியில் பார்ப்பதால், ஆன்மா ஞானம் பெற முடியாது. மனக் கண்ணை உள்முகமாகத் திருப்புவதால் மட்டுமே இது முடியும்.

ஆன்மாவைக் குறிக்கும் வார்த்தை, மிகவும் பொருள் செறிந்தது. ஆன்மா என்பது நமக்குள்ளே இருப்பது; எமது உள்ளத்தின் ஆழத்தில் இருக்கும் உண்மை. இதற்கெல்லாம் மேலாக, எமது இதயத்தின் மையமே அதுதான். எல்லாம் எங்கிருந்து வெளி வருகின்றனவோ, அந்த மையப் பகுதி அதுதான். அந்த மையச் சூரியனிலிருந்துதான் மனம், உடல், புலன்கள் மற்றும் நாம் பெற்றிருக்கும் கரணங்கள் எல்லாமே சூரிய கிரகணங்களைப் போல் வெளிநோக்கிப் போகின்றன. "அறிவில் சிறியோரும் அஞ்ஞானிகளும் வெளி இன்பங்களைத் தேடி ஓடுகிறார்கள். அவர்கள் விரிந்து கிடக்கும் மரண வலையில் விழுகின்றனர். ஆனால், அறிவாளிகள் மரணத்தை வெல்லும் நிலையைப் புரிந்து கொண்டு, எல்லைக்குட்பட்ட பொருள்களில் நிலையான இன்பத்தைத் தேடுவதில்லை." முதலில் சொன்ன கருத்தே இங்கே தெளிவாக்கப்படுகிறது.

எல்லைக்குட்பட்ட பொருள்கள் நிறைந்த இந்த வெளியுலகில், எல்லையற்ற பரம்பொருளை உணர்வது முடியாத காரியம். எல்லையற்றதை, எல்லையற்றதால் மட்டுமே உணர முடியும். நமக்குள் எல்லையற்றதாக இருக்கும் ஒரே பொருள், எம்முடைய ஆன்மாதான். எம்முடைய உடல், மனம், சிந்தனைகள், எம்மைச் சுற்றி நாம் காணும் உலகம் எதுவுமே எல்லையற்றது அல்ல. மனிதனுக்கு உள்ளே எப்போதும் விழித்திருக்கும், எல்லாவற்றுக்கும் சாட்சியாக இருக்கும் ஆன்மாவுக்குத்தான் இவையெல்லாம் சொந்தம். அந்த ஆன்மா மட்டுமே எல்லையற்றது. பிரபஞ்சத்தின் தோற்றத்துக்குக் காரணம், எல்லையற்ற பரம்பொருளே. அதை நாம் ஆன்மாவின் மூலமாகத் தான் தேட முடியும். எல்லையற்ற ஆன்மாவிலேயே அதை நாம் காண முடியும். "இங்கே இருப்பதுதான் அங்கேயும் இருக்கிறது; அங்கே இருப்பதுதான் இங்கேயும் இருக்கிறது. பல நாமரூபங்களைப் பார்ப்பவன் மரணத்திலிருந்து மரணத்துக்குப் போய்க் கொண்டேதான் இருக்கிறான்." முதலில் எவ்வாறு சொர்க்கத்துக்குப் போகும் ஆசை இருந்தது என்பதைப் பார்த்தோம்.

## சூரியனுக்கு அருகில் குளிர்மையான நட்சத்திரம்; விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



சூரியனுக்கு அருகில், மிகவும் குளிர்மையான நட்சத்திரத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவின், பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வானியல் ஆய்வாளர்கள் அந்த நாட்டு விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் உதவியுடன், இந்த புதிய நட்சத்திரத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

புதிய நட்சத்திரத்துக்கு, ஜே 085510.83-071442.5 என்று பெயரிடப்பட்டுள்ளது. பூமியின் வட துருவத்தை விட குளிர்ச்சியான, இந்த நட்சத்திரத் தின் வெப்பநிலை, -48ல் இருந்து, -13 டிகிரி செல்சியஸ் வரை உள்ளது.

வியாழன்கிரகத்தைவிடமூன்று முதல் 10 மடங்கு வரை இந்த நட்சத்திரம் பெரிதாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 2 | | 3 | 6 | | |
| | 1 | 5 | | | 9 | 3 | | |
| | 9 | | | | | | | 7 |
| | 3 | 4 | 7 | | | | | 5 |
| 6 | | 1 | | | | 2 | | 3 |
| 5 | | | | | 4 | 7 | 6 | |
| 1 | | | | | | | 9 | |
| | | 2 | 3 | | | 4 | 7 | |
| | | 7 | 8 | | 2 | | | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 4 | 1 | 6 | 5 | 7 | 3 | 8 |
| 5 | 1 | 3 | 7 | 9 | 8 | 4 | 6 | 2 |
| 8 | 7 | 6 | 3 | 2 | 4 | 1 | 9 | 5 |
| 7 | 3 | 5 | 8 | 1 | 2 | 6 | 4 | 9 |
| 9 | 4 | 1 | 5 | 3 | 6 | 2 | 8 | 7 |
| 6 | 2 | 8 | 4 | 7 | 9 | 3 | 5 | 1 |
| 3 | 8 | 9 | 2 | 4 | 1 | 5 | 7 | 6 |
| 1 | 6 | 7 | 9 | 5 | 3 | 8 | 2 | 4 |
| 4 | 5 | 2 | 6 | 8 | 7 | 9 | 1 | 3 |



# இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம் நாளைய கனவுகள்

மனிதன் தனது வாழ்க்கையிலே பல பருவங்களைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. இவற்றுள் பள்ளிப் பருவம், இளமைப் பருவம் என்பன முக்கியமானவை. ஒருவருடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பது இளமைப் பருவமே ஆகும். இந்த இளமைப் பருவத்தில் நாங்கள் சரியான ஒரே முடிவை எடுத்து கொண்டு செயற்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். மனிதனானவன் பல கனவுகளைக் காண்கிறான். அதிலே எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளே அதிகம்.

இதுவொரு வாழ்க்கைப் போராட்டத்தின் நடுப்பகுதி. தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டிய பொழுது இளமைப் பருவம். நாம் எமக்குள் போடுகின்ற திட்டமிடலே கனவாக வெளிப்படுகிறது. சிலர் இதனை "நினைப்பு" என்பார்கள். உண்மையாக அது ஒரு பிழையான விடயமாகக் கருதப்படும். இதனால் நான் கூறுவது என்னவெனில் வெற்றிக்கு அவசியம் நாளைய கனவுகள்தான் என்பது மட்டுமே. ஏனெனில் நம் கனவு நனவாகிற பொழுது ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு நிகரெதுவுமில்லை. எமது கனவை நனவாக்க எம் கடினமான முயற்சியின் பிரதிபயனே வெற்றி என்பதை தெளிவாகக் கூறமுடிகிறது.

*கவரிமான், முள்ளியவளை.*

விமர்சனம்

# வாழ்க்கை என்பது போராட்டம்

(சென்றவாரத் தொடர்ச்சி)



நீங்கள் தற்கொலை பண்ணி உயிரை மாய்த்துக் கொண்டால் உங்கள் பிரச்சினை எல்லாம் முடிந்து விடுமா? இல்லை. நல்ல தீர்வுதான் கிடைத்திடுமா? பெற்ற தாயினது நிலையை கொஞ்சமாவது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பரீட்சையிலே தோல்வி என்றால் என்ன? கற்பதற்கு வயதெல்லை கிடையாது. ஒரு தடவை தோல்வி என்றால் அடுத்த தடவை அதிக முயற்சி எடுத்துப் படியுங்கள். சோர்ந்து போய் விடாதீர்கள். சகல பிரச்சினைகளுக்கும் தற்கொலை தான் தீர்வு என்றால் இவ்வுலகத்தில் யாரும் வாழத் தகுதியில்லை என்றே சொல்ல முடியும். இளைஞர், யுவதிகளோ காதலுக்காகவோ, பரீட்சைக்காகவோ, குடும்பப் பிரச்சினைக்காகவோ, வேலை இல்லை என்ற மன ஆதங்கத்தாலோ தற்கொலை என்னும் முடிவை எடுக்க வேண்டாம்.

நல்லதை நினையுங்கள், நல்லதைச் செய்யுங்கள், நல்ல முடிவை எடுங்கள், மனதைத் தளர விடாதீர்கள், கவலைப்படாதீர்கள். யாரையும் முற்று முழுதாக நம்பி விடாதீர்கள், உங்களைத் தேவையில்லை என்று விட்டுவிட்டு சென்றவர்களைப் பற்றி நினைக்காதீர்கள். பெற்ற தாய் தந்தையரையும் உங்கள் மீது அக்கறை காட்டும் உறவுகளையும் நினையுங்கள்.

பொறுமையோடு சிந்தித்துச் செயற்படுங்கள். வாழ்க்கையில் எல்லாமே சகஜம் தான் என நினைத்து வாழப் பழங்குங்கள். போலியான உறவுகளுக்காக உங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள நினைக்காதீர்கள். நல்லதொரு வாழ்க்கை முறையை அமைத்து வெற்றி இலக்கை அடைய வேண்டும்.

*சி. அசோகமாலா, உடுப்பிட்டி*

நீங்களும் எழுதலாம்....

**இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம்**

**நேற்றைய நினைவுகளா? நாளைய கனவுகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.............................................


முகவரி :-.........................................

.......................... திகதி

.......................... கையொப்பம்.


**இளவல்கள் வட்டம்,**
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# இருக்கும் வரை



கவலைக்கு இடமில்லை
கஷ்டங்கள் எமை கட்டியணைக்கும் வரை....
துன்பத்துக்கு துளியும் இடமில்லை
துயரம் எம்மை வாட்டும் வரை....
கண்ணீருக்கு வேலையில்லை
காதல் எம்மை சூழும் வரை...
ஏமாற்றத்துக்கு இடமில்லை.
நாம் நினைப்பதெல்லாம் நடக்கும்வரை...
அன்புக்கு அர்த்தம் தெரியாது
அம்மா எம்முடன் இருக்கும் வரை...
நகைச்சுவையில் சுவையில்லை
நல்ல நண்பன் கூடவே இருக்கும் வரை...
வரைபடத்தால் பயனில்லை
வழிகாட்டியாய் நல்லாசான் இருக்கும்வரை....
இணையத்துக்கு வினையுண்டு -
நல் நூல்கள் எம்முடன் உள்ளவரை...
தோல்வியின் வலி புரியாது
வெற்றி எம்முடன் இருக்கும் வரை...

*தயாபரம் மோகனரூபன், சுழிபுரம் கிழக்கு.*



# உதயனுக்கு என் உள்ளப் பரிசு

உதயன் பத்திரிகை என்றாலே
உள்ளம்
உணர்வுகளை மறந்திடுதே!
உதயன் பத்திரிகை படிக்காத
நேரங்களில்
உதடுகளும் உஷ்ணமாகி
போகிறதே!
உயிர் உதயன் பத்திரிகையோடு
உறவு கொள்ளை கொள்கிறதே!
தன்னை எண்ணி கனவும் காண
செய்கிறதே! வாசகியாகி
கவியும் எழுத தூண்டுகிறதே!
பாரதிதாசன் அன்று எழுதிய
பத்திரிகை
எனும் ஓர் கவியை கற்கும் போது
உதயன் பத்திரிகையை
வருங்காலம்
காண வேண்டுமென்று
கற்பனை செய்திருப்பார் என்று
எண்ண தோன்றுகிறது!
தான் தாங்கி வரும்
கவிதைகளை எண்ணி கொள்ள
சொந்த கவலைகளை தீர்த்து
விடுமே!
விண்வெளியில் நிகழும்
விந்தைகளை தாங்கி வந்து
விஞ்ஞான உலகுக்குள் எம்மை
நுழைக்கிறதே!
மானிடர் எம்முள் ஆழ்ந்திருக்கும்
அறியாமை எனும் இருளை
கிழித்தெறியும் பேரொளியானதே
எம் உதயன் பத்திரிகை!
வானத்தில் நடக்கும்
ஜாலங்களையும்
விண்ணிலே நடக்கும்
கோலங்களையும்
ஒன்று விடாமல் திரட்டித் தரும்
அழகிய பீடமாக சுழல் பூமி மேல்
சுழன்று வரும்
உதயன் பத்திரிகையை எண்ணி
கவி வரைய உலகிலுள்ள
மொழிகள்
போதாதே!!!

*சுதர்சினி, திருநாவுக்கரசு,*
*யாழ். இந்து மகளிர் கல்லூரி.*

# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா சாம்பசிவம்



கொக்குவில் மேற்கு முதலி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கனகம்மா சாம்பசிவம் 05.05.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- பார்வதி தம்பதியரின் சிரேஷ்ட மருமகளும், காலஞ்சென்ற நா.சாம்பசிவத்தின் (முன்னாள் உரிமையாளர்- சாம்பசிவம் அன்கோ) அன்பு மனைவியும், Dr.சண்முகலிங்கம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கணேசலிங்கம் (முன்னாள் உரிமையாளர்- சாம்பசிவம் அன்கோ) மற்றும் நடேசன் (ஆஸ்திரேலியா , முன்னாள் உரிமையாளர்- சாம்பசிவம் அன்கோ), சிவகாமி, மகேஸ்வரி (லண்டன்), விக்கினேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (முன்னாள் கூட்டுறவுச் சபை செயலாளர்), முருகமூர்த்தி (ஆஸ்திரேலியா), நளாயினி (ஆஸ்திரேலியா, முன்னாள் ஆசிரியை யாழ்- சாவகச்சேரி இந்துக்கல்லூரி), தேவரோகினி (ஆஸ்திரேலியா), சுந்தரகாந்தி (ஆஸ்திரேலியா, முன்னாள் ஆசிரியை யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், Dr. அரவிந்தன் (ஆஸ்திரேலியா), Dr. அஞ்சயனி (ஆஸ்திரேலியா), சரவணன் (ஆஸ்திரேலியா - கணக்காளர்), சாந்தி (கனடா), சிவதர்சன் (பொறியியலாளர்-லண்டன்), Dr. சிவப்பிரியன் (லண்டன்), Dr.சிவசாம்பவன் (ஆஸ்திரேலியா), சிவசங்கர் (ஆஸ்திரேலியா), சிவதர்சனி (லண்டன், முன்னாள் ஆசிரியை யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), Dr. ஆரணன் (ஆஸ்திரேலியா), பிராமி (ஆஸ்திரேலியா), சிந்து(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலிகோயிலடி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

(47711) (45.6.3)

## மடிக்கணினி வழங்கல்



வலி. வடக்கு, மே 8

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் கடந்த ஞாயிற்றுக்கிழமை துணுக்காய், மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலத்தில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவன் வ.சாரங்கனுக்கு கல்வியை ஊக்குவிக்கும் முகமாக மடிக் கணினி வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தில் வைத்து வலி. மேற்கு சங்கானை பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஐங்கரன் நாகரஞ்சினி வழங்கினார். (ஒ-86)

## திருவடி நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள்

சுழிபுரம், மே 8

சுழிபுரம் திருவடி நிலை வாகை வைரவர் கோயில் கடற்கரையோரப் பிரதேசம் கடல்நீர் வராதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளி இடங்களில் இருந்து வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்ட கற்கள் அடுக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று ஆலய தெற்குப் பக்கமாக கடலில் நீராடுபவர்கள் உடுப்புக்களைப் பாதுகாப்பாக வைக்கவும். நீராடிய பின்னர் அவற்றை மாற்றவும் ஏற்ற வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

திருவடி நிலை வாகை வைரவர் பிரதேசத்தை பல்வகைச் சிறப்புக்கள் நிறைந்த இடமாக ஆக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சுழிபுரம், பொன்னாலை ஆலயங்களின் தீர்த்த உற்சவம் தொன்றுதொட்டு வருடாவருடம் இங்கு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-28)

## தேசிய ரீதியில் தெரிவாகிய மாணவன்



பி.ஆகாஷ் வரசர்மா

காரைநகர், மே 8

அகில இலங்கை சிறுவர் சித்திரப்போட்டியில் தேசிய மட்டத்தில் தெரிவாகிப் பரிசு பெற்றுள்ளார் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை மாணவன் பி.ஆகாஷ் வரசர்மா.

தரம் 2 இல் கல்வி பயிலும் குறித்த மாணவன் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் கடந்த வருட சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட அகில இலங்கை சிறுவர் சித்திரப்போட்டியிலேயே தேசிய மட்டத்துக்கு தெரிவாகி பரிசு பெற்றுள்ளார்.

மாணவர்களின் சித்திரக் கண்காட்சியும் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை கொழும்பு ஆனந்தா வித்தியாலய குலரத்ன மண்டபத்தில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் யமுன பெரேரா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாணவன் பி.ஆகாஷ்வரசர்மா பரிசில்களையும் சான்றிதழையும் பெற்றுக்கொண்டார்.

தேசியமட்டத்தில் பரிசு பெற்ற மாணவன் பி.ஆகாஷ் வரசர்மாவை பாடசாலை சமூகம் பாராட்டிக் கௌரவித்துள்ளது. (வ-250)

## பழுதடைந்து வரும் ஓலைகள்

சுழிபுரம் பண்ணாகம் ஆகிய கிராமங்களிலுள்ள பனை, தென்னை ஆகிய மரங்களின் ஓலைகளை எவரும் வாங்க முன்வராத்தால் அவை பழு தடைந்து வருகின்றன. பனையின் போகம் தப்பிய ஓலைகள் யாவும் காவோலைகளாக மாறியுள்ளன. தென்னை மரத்தில் இருந்து விழுந்த தென்னோலைகள் கறையானுக்கு இரையாகி வருகின்றன. பனை, தென்னை ஓலைகளைப் பயன்படுத்தியவர்கள் தகரங்களைப் பயன்படுத்தி வருவதும் கூலிக்கு ஓலை வெட்டவும், கிடுகு பின்னவும் ஆள்கள் கிடைக்காமையும் இதற்கான காரணங்களாகக் கூறப்படுகின்றன. (க-28)

# நீங்காத நினைவில்

## 7ஆம் ஆண்டு

## திருமதி உமாதேவி நடராசா

(ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி)

திதி: 08.05.2014



தோற்றம் :
29.10.1951

மறைவு :
25.04.2007

காலையும் வெந்தது மாலையும் வெந்தது
ஆறாப் புண்ணில் மாறாக் காயமாய்
எரிந்தது தீயாய் நின் நினைவு
கண்ணியம் காக்கும் தாயே!
புண்ணியம் போற்றப் பிறந்தவளே!
ஏழாண்டு காலம் ஓடிப்போனாலும்
உம் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது
நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்து விட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாத - நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
T.P.- 077 617 6861, 021 2240316
024 324 8087

கணவர்:- சி.நடராசா (ஓய்வு பெற்ற அதிபர்),
திருமதி Dr. அனுஷா யோகநாதன் (பெறாமகள்- (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை)
ஆருசன், அக்சயா (பேரப்பிள்ளைகள்),
புஸ்பம் சந்திரகுமார், சுசிலா-சுப்பிரமணியம், சு. பிறேம்குமார் (கேரளா) } சகோதரர்கள்
மற்றும் அண்ணிமார், அண்ணன்மார்,
பெறாமக்கள்:- ஜெயம் (பவா-லண்டன்), சிவம் (பவி-கனடா), அனுஷியா, சிவரதன், தயரதன், திகழொளி.
மருமக்கள்:- ருஷாந்தினி (லண்டன்), மிலோஜன், கோபிதா, விதிர்தன், திவ்வியன்.

(47502)(7.6)

# இலங்கையின் இனப்படுகொலையை இனியும் வேடிக்கை பார்க்கக் கூடாது

## ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை,மே 8

இலங்கையில் தொடர்ந்து நடக்கும் இனப் படுகொலையை இந்தியா, இனியும் வேடிக்கை பார்க்கக் கூடாது என்று பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் இராணுவத்தினரின் கொடுமைகளை தாங்கிக் கொள்ள முடியாமல், அகதிகளாக தப்பி வந்த 10 ஈழத் தமிழர்களை தமிழகப் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். தஞ்சம் தேடி வந்தவர்களை காவல் துறை இரக்கமின்றி கைது செய்து சிறை வைத்திருப்பது ஒருபுறம் வருத்தமளிக்கும் நிலையில், இன்னொரு புறம் அவர்கள் தெரிவித்துள்ள தகவல்கள் மிகுந்த வேதனை தருகின்றன.

இலங்கையில் மீண்டும் விடுதலைப் போர் வெடித்துவிடுமோ என்ற அச்சத்தில் அப்பாவி தமிழ் இளைஞர்களை ராணுவத்தினர் கடத்திச் சென்று சுட்டுக் கொல்வதாக அங்கிருந்து தப்பி வந்த அகதிகள் கூறியிருப்பது இதயத்தில் ஈட்டி பாய்வதைப் போல உள்ளது. மேலும், தமிழ் பெண்களுக்குப் பாலியல் கொடுமை உட்பட பல்வேறு கொடுமைகள் இழைக்கப்படுவதாகவும், பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளை வெளிப்படையாக கூற இயலாது என்றும் இலங்கையிலிருந்து வந்த பெண்கள் கூறியிருப்பதைக் கேட்கும் போது ஈழத்தமிழர்களின் துயரம் இப்போதைக்கு தீராதா? என்ற ஏக்கமும், வேதனையும் தான் ஏற்படுகின்றன.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு நடந்த போரில் ஒன்றரை லட்சம் அப்பாவி தமிழர்களை சிங்களப் படையினர் கொடூரமான முறையில் படுகொலை செய்தனர். இது தொடர்பாக சர்வதேச போர்க் குற்ற மற்றும் இனப்படுகொலை விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இதைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமை ஆணையர் தலைமையிலான குழுவின் விசாரணைக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆனால், இதற்கு ஒத்துழைக்க மறுக்கும் இலங்கை அரசு மீண்டும் தமிழ் இளைஞர்களை தேடிப் பிடித்து சுட்டுக் கொல்லத் தொடங்கியிருக்கிறது.

இவ்வளவுக்கு பிறகும் இலங்கையிடம் மென்மையான அணுகுமுறையை கடைபிடிப்பது எவ்வகையிலும் பயனளிக்காது. என்று வலியுறுத்தியுள்ளார். (த)

# நோர்வூட் கிராமத்தில் மக்கள் போராட்டம்

## மலசலகூடங்கள் புனரமைக்கப்படாததை கண்டித்து

கொழும்பு,மே 8

அம்பகமுவ பிரதேசசபைக்கு உட்பட்ட நோர்வூட் நகரில் அமைந்துள்ள பொது மலசலகூடங்கள் சுமார் 15 வருட காலமாக திருத்தப்படாதிருப்பதைக் கண்டித்து மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நோர்வூட் நகருக்கு வரும் பொது மக்கள் மட்டுமன்றி பலாங்கொடை- நோர்வூட் வழியாக சிவனொளி பாத மலை செல்லும் யாத்திரிகர்களும் நகரில் பொதுமலசல கூடம் இல்லாமையால் பல் வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் நோர்வூட் நகரத்தில் அம்பகமுவ பிரதேச சபை உப அலுவலகத்துக்கு முன்பு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக அம்பகமுவ பிரதேச சபை தலைவர் வெள்ளையன் தினேஷிடம் கேட்டபோது,

"கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மூலமாக 66 லட்சம் ரூபா நிதி புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 28 லட்சம் நோர்வூட் நகரின் மலசலகூடத் திருத்தத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தின் இறுதியில் நோர்வூட் நகர மலசலகூடத்தின் திருத்தப் பணிகள் பூர்த்தியாகும்" - என்றார். (ச)

# மக்களின் பணத்தை அபகரிக்கும் சங்கப் பிரதிநிதிகள் மீது நடவடிக்கை

## வடக்கு மாகாண வாணிப அமைச்சர் தெரிவிப்பு

மன்னார், மே.8

பொது மக்களின் பொதுத் தேவைக்குரிய பொதுப் பணத்தை தனி நபர்கள் பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் அவ்வாறான வர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை கிராம அபிவிருத்திச் சங்கம் நீண்டகாலமாக பொதுக் கூட்டங்கள், புதிய நிர்வாகத் தெரிவுகள் எதுவுமின்றியும் கணக்குகளை சமர்ப்பிக்காதும் இயங்காத நிலையில் இருந்து வந்துள்ளது. இதுகுறித்து இலுப்பைக் கடவை மக்கள் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் வடமாகாண கிராமஅபிவிருத்திஅமைச்சருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து நேற்று முன்தினம் அந்தக் கிராமத்துக்கு பயணம் செய்த அமைச்சர் அந்தக் கிராமமக்களுடன் கலந்துரையாடி பல்வேறு விடயங்கள் குறித்துஅறிந்து கொண்டார்.

அத்தோடு புதிய நிர் வாகத்தெரிவும் இதுவரை இடம்பெற வில்லை எனவும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

இதை அறிந்து அக் கிராம அலுவலரும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் பல தடைவைகள் முயற்சி செய்தும் பொதுக்கூட்டத்தை நடத்த முடியாமல் போயுள்ளது. பின்னர் இவ்விடயம் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதனை அடுத்து அவர் அங்கு நேரில் சென்று மக்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளை ஆராய்ந்தார். அத்துடன் எதிர் வரும் 25ஆம் திகதி பொதுக் கூட்டத்தைக் கூட்டி புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரை பணித்ததுடன், அதற்கு முன்னர் பழைய நிர்வாகத்தின் கணக்குகளை சீர் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.(வ-56)


## நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



அமரர்
செல்லம்மா செல்லையா
தோற்றம் 15★09★1934
மறைவு 08★04★2014

கடந்த 08.04.2014 காலமான எமது குடும்ப விளக்கு செல்லம்மா செல்லையா அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச்செய்தி தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிசெய்து ஒத்துழைப்பு வழங்கி இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (08.05.2014) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"அகலகம்",
கட்டைப்புளியடி, கொற்றாவத்தை.
குடும்பத்தினர்.
(47720)(3.6.4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி ஜெ. ஸ்ரீஸ்கந்தராசா
அவர்களின் பாசமிகு சகோதரி
செல்வி துஷ்யந்தி விக்கினேஸ்வரன்
அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.
(47718) (45.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நாகம்மா கிட்டிணன்
தோற்றம் 21 04 1930
மறைவு 19 05 2013
திதி:08.05.2014

ஆண்டொன்று சென்றிடினும் மறைந்திடுமா உங்கள் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம் உங்கள் புன் சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

கைதடிச்சந்தி,
கைதடி.
(47719)(3.6.4)
குடும்பத்தினர்.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி Dr. லோஷனி லக்ஷ்மன்



விழியிரண்டும் மடைதிறந்து
ஓராண்டாகுதம்மா
மொழியிழந்து புலம்பித் திரிந்த
வலி மறந்து போகுமா?
பத்துத்திங்கள் நீ சுமந்திட்ட
முத்துக்கள் இரண்டில் -உன்
முகம் பேசுதம்மா
அந்த மந்திரப் புன்னகையும்
மாசற்ற மனமும்.......

375, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(47717)(3.6.6)
குடும்பத்தினர்.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11.11.1982
மறைவு 08.05.2007
அமரர்
கந்தையா பிறேம்நாத்

கண்ணிமைக்கும் கணப்பொழுதினைவிட கடுகதியாய்
கரைந்ததுவோ ஏழு வருடங்கள்
மலரும் நினைவுகள் தேக்கி வைத்து எவரும் காணாத
உலகம் சென்றுவிட்டாய் எம் அன்புச் செல்வமே
தவிக்கின்றோம் உம் நினைவால்
உம் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

தந்தை - கந்தையா
தாய் - ஞானேஸ்வரி
தம்பி - சுரேஸ்குமார் (லண்டன்)
மற்றும் உறவினர்கள்.

வரணி இயற்றாலை,
வரணி.



வலி.மேற்கு பிரதேச சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 100 பஜனைப் பாடசாலைத் திட்டத்தில் வட்டு.வடக்கு சித்தன்கேணியிலுள்ள கொத்தன் வளவு ஞான வைரவர் ஆலயத்திலும் , சங்கானையிலுள்ள உருத்திரன் வைரவர் ஆலயத்திலும் பஜனைப் பாடசாலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளையும், சுவாமி விவேகானந்தரின் நூல்களையும் வழங்கிய வேளையில்... (ஓ-14)

## சுயதொழில் கடன் ஊக்குவிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 8
இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் செயற்றிட்டத்தின் கீழ் யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் மையத்தினால் சுயதொழில் கடன் ஊக்குவிப்பு திட்டம் ஒன்று செயற்படுத்தப் படவுள்ளது.
அந்த வகையில் மேற்படி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மற்றும் இளைஞர் சேவைகள் மன்றம் போன்றவற்றில் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்கள் இக்கடன் திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்.
இதில் இணைந்து கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் தங்கள் பெயர் விவரங்களை தொழில்நுட்பவியல் கல்லூரி தொழில் வழிகாட்டல் மையத்துக்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (க)

## ஜெயந்தி தினம்

பூஜ்ய குரு தேவர் சுவாமி சின்மயானந்தரின் ஜெயந்தி தினமான இன்று வியாழக்கிழமை, இல.9 செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் சின்மயஞானவேல் ஆச்சிரமத்தில் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா சுவாமிகள் வழிகாட்டலில் மாலை 5 மணிக்கு குரு பாதுஹா பூசை, பஜன், சத்சங்கம் என்பன நடைபெறவுள்ளன. (க)

## செயலமர்வு

வறட்சிக்கு ஏற்ற வகையில் தகுந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியைத் தக்க வைத்தல் தொடர்பான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை வட்டக்கச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீட பீடாதிபதி திருமதி எஸ்.சிவச்சந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (க)

## ஆங்கில பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே 8
அமெரிக்கத் தகவல் கூடத்தின் ஏற்பாட்டில் உயர் கல்வி கற்க விரும்பும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில செறிவூட்டல் பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது.
நான்கு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறி இந்த மாதம் 22ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரை வாரத்தின் திங்கள் மற்றும் செவ்வாய் தினங்களில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.
இன்றைய தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க தகவல் கூடத்தில் இடம்பெறவுள்ள தேர்வுப் பரீட்சை மூலமாகவே அனுமதிகள் வழங்கப்படும். (க)

## தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களை சந்திக்கிறார் கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், மே 8
யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வலய கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் கல்வி அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் ஆராயப்படும். தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் அவர்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-7)

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு மேலும் ஒரு மருத்துவர்

தென்மராட்சி, மே 8
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் ஒரு மருத்துவர் நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
முழங்காவில் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய மருத்துவர் தியாகராஜா குமணன் சொந்தப் பிரதேச மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் இடமாற்றம் பெற்று வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
தற்போது இங்கு கடமையாற்றும் மருத்துவர்களில் மருத்துவமனை பொறுப்பதிகாரி உட்பட ஐந்துக்கு மேற்பட்ட மருத்துவர்கள் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## வாக்காளர் இடாப்பு மீளாய்வு குறித்த பயிற்சி வகுப்புகள்

வலி.வடக்கு, மே 8
யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு 2014ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகளைத் திருத்துதல் குறித்த பயிற்சி வகுப்புகள் பிரதேச செயலர்கள் பிரிவு ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
அடுத்த மாதம் முதல் 2014 ஆம் ஆண்டுக்காக வாக்காளர் இடாப்புகளை மீளாய்வு செய்து 18 வயதைப் பூர்த்தி செய்த புதியவர்களின் பெயர்களை வாக்காளர் இடாப்பில் இணைத்தல் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்குதல், மாற்றங்களைச் செய்தல் போன்ற பதிவுகளைச் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதன் முன்னோடியாக கிராம அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள், பயிற்சி வகுப்புகள் யாழ். மாவட்டத்தில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரினால் நடத்தப்பட்டு வருகின்றன. (வ-86)

## சமாதான நீதிவான்



யாழ்ப்பாணம், மே 8
சுதுமலை தெற்கு சாவற்கட்டைச் சேர்ந்த கந்தையா ஆனந்தவேல் அண்மையில் யாழ்.மாவட்ட நீதிபதி அ.அ. ஆனந்தராசா முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
யாழ். பல்கலைக்கழகத்தில் வணிகமாணி பட்டத்தையும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் முதுவணிக மாணிப் பட்டத்தையும் பூர்த்தி செய்துள்ள இவர் லயன்ஸ் கழகம், லியோ கழகம், றோட்டரிக் கழகம் என்பவற்றின் அங்கத்தவரும் ஆவார்.
இவர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தராக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வருகிறார். (ஓ-100)

## இரண்டாவது அரசாங்கம்

.....அவர்கள் இடையிடையே அரசாங்கத்தைக் கவிழ்க்கப்போவதாகவும் சவால் விடுவார்கள். ஆயினும் அமைச்சர்களோ ஜனாதிபதியோ அவர்களுக்கு எதிராக வாயே திறப்பதில்லை. 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த அனுராதபுரம் தர்க்காவை உடைத்து தரைமட்டமாக்கியதுடன் இவர்களின் ஆட்சியதிகாரம் ஆரம்பமானது. அதன் பின்பு 60 ஆண்டுகளாக இயங்கி வந்த தம்புள்ள பள்ளிவாசல் தகர்க்கப்பட்டது. மதவழிபாட்டுத் தலங்கள் பட்டப்பகலில் மக்கள் முன்னிலையில் உடைக்கப்பட்டாலும் கூட உடைத்தவர்கள் மேல் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு வழிபாட்டு மையத்தையோ குடியிருப்பையோ இடிக்க ......

- ❑ செல்போனில் பகல்கொள்ளை
- ❑ உலகின் அதிவேக சாதனைக்காக...




## செலான் வங்கியின் மாணவர் சந்தை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு சுயதொழில் மூலம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் மாணவர் சந்தையை செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையினர் இன்று ஆரம்பிக்கவுள்ளனர். இன்று மு.ப.10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடைநிலை மாணவர்களின் சந்தை இடம்பெறும்.
மாணவர் சந்தையில் தரம் 6,7,8 ஆகிய வகுப்பு மாணவர்கள் தமது வீடுகளில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களை சந்தையில் விற்பனை செய்யவுள்ளனர்.
மாணவர் சந்தையில் மாணவரால் சந்தைப்படுத்தப்படும் பொருள்களின் விற்பனையில் கிடைக்கும் நிதி வங்கியில் வைப்புச் செய்யப்படும் என்றும் விற்பனை மூலம் அதிக பணம்பெறும் மாணவனொருவருக்கும், உண்மையான வியாபாரிபோல் வேடமணிந்து காணப்படும் மாணவர்களில் ஒருவருக்கும் பரிசில்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## குடும்பஸ்தரை தீண்டியது விஷப் பாம்பு

பளை, மே 8
மழை பெய்து நனைந்திருந்த குப்பையை அள்ளிய குடும்பஸ்தர், குப்பைக்குள் இருந்த விஷப் பாம்பால் கடியுண்டார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் இயக்கச்சி கோவில் வயல் பகுதியில் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த முருகையா பரமநாதன் (வயது-56) என்பவரே பாம்பால் கடியுண்ட நிலையில் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

**வீடு விற்பனைக்கு**
சுன்னாகம், மாணிக்கதியாகராஜ வீதி செல்லவள்ளில் 2 பரப்பு 7.90 குழி கொண்ட காணியுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434 (47713) (3.6.4)

**வீடு வாடகைக்குத் தேவை**
தளபாடங்களுடன் கூடிய AC பொருத்தப்பட்ட இரண்டு படுக்கை அறைகளுடன் இணைந்த குளியல் அறையும் நவீன சமையலறை வசதியும் உள்ள வீடு அல்லது மேல்மாடி 1½ வருட வாடகைக்கு தேவை. நல்லூர்/அரியாலை/கொக்குவில் ஆகிய இடங்கள் விரும்பத்தக்கது.
(47716) (3.6.4) தொடர்பு: 077 321 3283, 021 753 8870

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவியும்,
பகுதித்தலைவராகக் கடமையாற்றியவருமான
திருமதி புஸ்பகாந்தி சோதிலிங்கம்
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுவதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம் (சி.14194) (45.6.3)
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி

# பொலிஸார் முன்னிலையில் நடைபெற்ற மோ.சைக்கிள் சாகசம்



யாழ்ப்பாணம். போக்குவரத்து பொலிஸாருக்கே வீதியின் நடுவில் வேடிக்கை காட்டிய மோட்டார் சைக்கிள் சாகச வீரர். மோட்டார் சைக்கிள் விளம்பரத்துக்காக யாழ்.பிரதான வீதி சின்னக்கடைக்கு அருகில் பொலிஸார் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நேற்று இந்த வேடிக்கை நிகழ்வு இடம்பெற்றுள்ளது. அதேநேரம் யாழ்ப்பாணம் பிரதான வீதி- இரண்டாம் குறுக்குத் தெரு சந்தியில் நேற்று தனியார் போக்குவரத்து பஸ் மோதித் தள்ளியதில் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் அனைத்தும் முடிவடைந்த பின்னர் பொலிஸார் அவ்விடத்துக்கு விரைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-20)

## முதன் முறையாக கணக்காளர் சேவை தர கணக்காளர் நகர சபைக்கு

தென்மராட்சி. மே 8

சாவகச்சேரி நகர சபைக்கு முதன் முறையாக இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த கணக்காளரொருவர் வடமாகாண பிரதம செயலாளரால் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இலங்கை கணக்காளர் சேவை தரம் III ஐச் சேர்ந்த திருமதி எஸ்.மீரா. சாவகச்சேரி நகர சபைக்கு நியமிக்கப்பட்டு கடந்த 2 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

நகர சபைகளில் இதுவரை காலமும் கணக்குப் பதிவாளர் சேவையைச் சேர்ந்தவர்களும் அதன் பின்னர் முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்தவர்களும் சபையின் நிதி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## இந்து மயானத்துக்கு சுற்றுமதில்

வடமராட்சி. மே 8

வல்லை இந்து மயானம் எல்லைப்படுத்தப்பட்டு சுற்றுமதில் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த மயானத்தைப் பராமரிப்பதற்கென அமைக்கப்பட்டுள்ள வல்லை இந்து மயான அபிவிருத்திச் சபை மதில் அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

அந்தச் சபையால் மழை காலங்களில் தகனக்கிரியைகள் மேற்கொள்ள வசதியாக மயானத்தில் மிக உயரமாக தகரக் கொட்டகை ஒன்று ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனால் பாதுகாப்பான முறையில் தகனக் கிரியைகளை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது.

குறித்த மயானத்தை துப்புரவு செய்து அழகாக வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளிலும் அபிவிருத்திச் சபை ஈடுபட்டுள்ளது. (வ-173)

## மின்சாரத்தை வழங்குமாறு ஒட்டுசுட்டானில் கோரிக்கை

முல்லைத்தீவு. மே 8

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இதுவரை மின் வசதி வழங்கப்படாத பகுதிகளுக்கு அதனை விரைவாக வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மின்சார சபையினரின் வேண்டுகோளுக்கு அமைவாக மின் இணைப்புகள் வழங்குவதற்குத் தடையாகக் காணப்பட்ட மரக் கொப்புகளையும், மரங்களையும் மக்கள் அகற்றியுள்ளனர். எனவே இனியும் தாமதமின்றித் தமக்கு மின்சாரத்தை வழங்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மண்ணெண்ணெய் கூடச் சில வேளைகளில் இங்கு கிடைப்பதில்லையெனத் தெரிவித்த அவர்கள் மின்சாரம் கிடைக்காததால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர். (க-500)

## அதிகளவானோர் பயனடைந்த இலவச மருத்துவ முகாம்

சாவகச்சேரி. மே 8

மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பொதுமக்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் அதிகமானோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். குறித்த பிரதேச மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சந்திரபுரம் கிராம உத்தியோகத்தர் க.வாமதேவனின் கோரிக்கையின் பேரில் இந்த மருத்துவ முகாம் ஒழுங்கு செய்யப்பட்டது.

மருத்துவ முகாம் சந்திரபுரம் செல்லப் பிள்ளையார் ஆலய வீதியில் உள்ள பொது மண்டபத்தில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெற்றது.

இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவ பரிசோதனை, பொதுமக்களுக்கான கண் பரிசோதனை, குருதிப் பரிசோதனை அதனுடன் கண்ணாடி வழங்கல் என்பனவும் சாவகச்சேரி பொலிஸாரின் நடமாடும் சேவையுமென மூன்று பிரிவுகளாக பொதுமக்கள் நலன்சார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

> " மருத்துவ முகாம் சந்திரபுரம் செல்லப் பிள்ளையார் ஆலய வீதியில் உள்ள பொது மண்டபத்தில் காலை 8 மணி தொடக்கம் பிற் பகல் 2 மணி வரை நடைபெற்றது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை அபிவிருத்திச் சபை, ஐக்கிய இராச்சிய தென்மராட்சி அபிவிருத்திக் கழகம், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ள நீரிழிவுச் சிகிச்சை நிலையம் என்பவற்றின் அனுசரணையுடன் இந்த இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இலவச மருத்துவ முகாமில் வைத்திய நிபுணர் ஶ்ரீதரன், மருத்துவ கலாநிதி சு.சி.அருளானந்தம் ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவ முகாமில் கலந்து கொண்டவர்களை பார்வையிட்டு மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர். அத்துடன் மருத்துவ நிபுணர் ஶ்ரீதரன் மக்கள் மத்தியில் மக்களைப் பீடித்துள்ள நீரிழிவு நோய், இதய நோய் மற்றும் ஏனைய பல நோய்கள் தொடர்பாகவும் அந்த நோய்களிலிருந்து எவ்வாறு விடுபடலாம் என்றும் கருத்துரை வழங்கினார். 175 பேர் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். அவர்களில் 22 பேர் நீரிழிவு நோய்க்குட்பட்டிருந்தமை இனங்காணப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரின் நடமாடும் மக்கள் சேவையும் இடம்பெற்றது. நடமாடும் சேவையில் பொதுமக்கள் பலர் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏனைய வகை உதவிகள், ஆலோசனைகளைப் பொலிஸாரிடம் பெற்றுக்கொண்டனர். (வ-131)

## பொலிஸாருடன் இணைந்து பணியாற்றுமாறு கோரிக்கை

### சிவில் பாதுகாப்புக் குழுவினரை

முல்லைத்தீவு. மே 8

சிவில் பாதுகாப்புக் குழுவினர் பொலிஸார் மற்றும் கிராம அலுவலர்களுடன் இணைந்து செயற்பட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும். இவ்வாறு அண்மையில் கற்சிலைமடு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியான பி.உடுக்கும்புர தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

கற்சிலை மடுவிலே 300 க்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குப் பொலிஸாரோ அல்லது கிராம அலுவலரோ முழுமையான தீர்வைப் பெற்றுத் தரமுடியாது. எனவே சிவில் பாதுகாப்புக் குழுவினர் எம்முடன் இணைந்து சேவையாற்றுவதன் மூலமாக உரிய தீர்வைப் பெற்றுத் தரமுடியும் என்றார். (க-500)

## வடமராட்சியில் 6 வீதிகள் புனரமைப்பு

வடமராட்சி. மே 8

வடமராட்சிப் பிரதேசத்தின் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட 6 வீதிகள் யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மாலிசந்தி-வியாபாரிமூலை வீதி, மாலிசந்தி-நவிண்டில்-கரணவாய் வீதி, நெல்லியடி-மத்தொனி-கரணவாய் வீதி, மந்திகை-ஆனைவிழுந்தான் வீதி, அல்வாய் கிழக்கு மடத்தடி-தம்பசிட்டி-அல்வாய் வடக்கு வீதி, வடமராட்சி கிழக்கில் உள்ள மாமுனை கட்டைக் காடு வீதி ஆகிய ஆறு வீதிகளுமே இவ்விதம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாலிசந்தி-வியாபாரிமூலை வீதியில் உடைந்த நிலையில் இருந்த மதகு 8 மில்லியன் ரூபா செலவில் 9 மாதங்களுக்குப் பின் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (வ-173)

## தென்மராட்சி வலய தமிழ்த் தினப் போட்டியின் குழுநிலைப் போட்டியின் வெற்றி விவரம்

தென்மராட்சி. மே 8

தென்மராட்சி கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட வலய மட்ட தமிழ்த் தினப் போட்டிகளின் குழு நிலைப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை சாவகச் சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றன. போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

நாட்டார் பாடல் : சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, உசன் இராமநாதன் ம.வி.

மேடை நாடகம் : சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அல்லாரை அ.த.க.பாடசாலை, கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை.

வடமோடி : கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை

தென்மோடி : நாவற்குழி ம.வி.

சிந்துநடை : உசன் இராமநாதன் ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

விசேட கூத்து : மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, கைதடி விக்னேஸ்வரா ம.வி., மீசாலை விக்னேஸ்வரா ம.வி.

இசை நாடகம் : கைதடி விக்னேஸ்வரா வித்தி. (வ-9)

# அணு ஒத்துழைப்பு குறித்து இலங்கை - இந்தியா பேச்சு

## தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு,மே 8

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சிவில் அணு சக்தி ஒத்துழைப்பு தொடர்பான பேச்சு கடந்த 5ஆம், 6ஆம்திகதி களில்கொழும்பில் இடம்பெற்றதாக நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச் சின் கூட்டுச் செயலாளர் ஸ்ரீ அமாந்தீப் சிவ் ஜில் தலைமையில் இந்தியப் பிரதிநிதிகள் குழு இதில் கலந்துகொண்டது. இந்தக் குழுவில் இந்திய அணு சக்தித் திணைக்களப் பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

இலங்கை தொழில்நுட்ப, ஆய்வு அமைச்சின் செயலர் திருமதி டாரா விஜய திலக்க தலைமை யில் இலங்கைப் பிரதிநிதிகள் குழு இதில் பங்கு பற்றியது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு, அணுசக்தி அதிகாரசபை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

"இருதரப்பு சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு மீதான ஒருங் கிணைந்த உடன்படிக்கை வரைவு மீது சிநேகபூர்வ மாகவும், இதயபூர்வமாகவும் இந்த இரு குழுக்களுக்கிடை யேயும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன" என்று இந்திய தூதரகம் குறிப்பிட்டுள்ளது.


**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

**GUNAA BEST PC** 52,Hospital Road,Jaffna.


# பொதுபல சேனாவுக்கு எதிராக ரிஷாத்வழக்கு

பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலர் கலபொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் நேற்றுமுன்தினம் வழக் கொன்றைத் தாக்கல் செய்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் ஊடாகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார். நஷ்ட ஈடாக 50 கோடி ரூபாவை இதன்மூலம் அவர் கோரியுள்ளார்.

வில்பத்து காட்டுப் பிரதேசத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் முஸ்லிம்களை மீள்குடியேற்று வதாகவும், அங்கு அரபுக் கொலனியொன்றை நிறுவு வதாகவும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் அண்மையில் குற்றஞ் சுமத்தியிருந்தார்.

இதனை வன்மையாகக் கண்டித்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன், இதற்காக ஞானசார தேரர் மன்னிப்புக் கோரவேண்டும் எனத் தெரிவித்து காலஅவகாசமும்வழங்கியிருந்தார்.

இந்தக் கால அவகாசத்துக்குள் அவர் மன்னிப்புக் கோராத பட்சத்தில் 50 கோடி ரூபா நஷ்ட ஈடாகக் கோரப்படும்எனக் குறிப்பிட்டு தனது சட்டத்தரணி ஊடாக ஞானசார தேருக்கு கோரிக்கை கடிதமும் அனுப்பி யிருந்தார்.

எனினும், ஞானசார தேரர் குறித்த கால அவகாசத்துக்குள் பகிரங்க மன்னிப்புக்கோராததை அடுத்தேஅமைச்சர் ரிஷாத் நேற்று முன்தினம் குறித்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். (ச)

## மரண அறிவித்தல்

### கனகசிங்கம் துஷியந்தன்



ஒட்டுவெளி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் துஷியந்தன் நேற்று (07.05.2014) புதன் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கனகசிங்கம்-யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு புதல்வனும், நளினி, கயநந்தன், யசோதரன் (கட்டார்), அபிபர்மன், நிதர்சன் ஆகியோரின் அன்பு சகோதரனும், அபிஷனா, அனுஷ்கா ஆகியோரின் அன்பு மாமனும், அனிஸ்தாவின் பெரிய தந்தையும், பாஸ்கரன், பாமினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2014) வியாழக் கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமியன் இந்து மயானத்துக்கு (எழுதுமட்டு வாழ்) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஒட் டுவெளி, மிருசுவில்.** (47730)(10) தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### பொன்னையா வேலாயுதம்



(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் சந்தைப்படுத்தும் திணைக்களம்)

கோயிற்கடவை, துன்னாலை மத்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வேலாயுதம் 06.05.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-தங்கம்மாதம்பதியரின் அன்பு மகனும், தங்கமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரத்தினம், செல்லமுத்து, மயில் வாகனம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), சிவசுப்பிரமணியம் (தம்பிப்பிள்ளை- ஓய்வுபெற்ற ஊழியர், கரவெட்டி, பிரதேச செயல கம்) ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற ஐயாத்துரை (Inspector of Police), சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2014) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேரோண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோயிற்கடவை,**
**துன்னாலை மத்தி, கரவெட்டி.** (C/4240)(10) தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கனகேஸ்வரி இரத்தினம்



இருபாலை குழுக்கண்டி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகேஸ்வரி இரத்தினம் நேற்று (06.05.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், மணிவாசகன் (ஆஸ்திரேலியா), சந்திராதேவி (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), மாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாதேவி (ஆஸ்திரேலியா), சுபாஸ்சந்திரன் (நோர்வே), பார்த்தீபன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், Dr.நிர்நீதா (ஆஸ்திரேலியா), Dr.ஹிருத்திகா (ஆஸ்திரேலியா), Dr.துஷ்யந்தன், ஹர்சனன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிருந்தாவனம், குழுக்கண்டி ஒழுங்கை,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (47728) (10) *தகவல்:* **குடும்பத்தினர் 0771040964**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சக ஆசிரியர்

### சி. ஞானசேகரம்

அவர்கள்
யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில்
வர்த்தகபாட சேவைக்கால ஆசிரிய
ஆலோசகராகப் பதவியுயர்வு
பெற்றமையையிட்டு இன்றைய
பிரிவுபசார நாளில் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**ஆசிரியர் கழகம்**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில்
புவியியல் பாட ஆசிரியராகவும், உயர்தரப்
பிரிவுப் பகுதித் தலைவராகவும்
சிறப்புறப் பணியாற்றிய

### திருமதி லதீஸ் கிறேஸ் விக்டர் ஜெயக்குமார்

அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தின்
சமூகவிஞ்ஞானப் பாட உதவிக் கல்விப்
பணிப்பாளராக 09.04.2014
முதல் பதவியுயர்வு பெற்றுச்
சென்றமையை பாராட்டி
வாழ்த்துவதுடன், அவர் மேலும்
பல பதவியுயர்வுகளைப்
பெற்றுச் சிறப்புடன் வாழ
வாழ்த்துகிறோம்.

Congratulation

பாடசாலைச்சமூகம்,
யா/அராலி சரஸ்வதி
மகா வித்தியாலயம், அராலி.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

பிறப்பு: 19 . 07 . 1946



இறப்பு: 08 . 04 . 2014

### அமரர் சிதம்பரம் தங்கவேலாயுதம்

(ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்)

கடந்த 08.04.2014 சிவபதமடைந்த எமது குலவிளக்கு சிதம்பரம் தங்கவேலாயுதம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 08.05.2014 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு திருநாவலூர் தெணியம்மன் ஆலய அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். அன்றைய தினம் முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண நிகழ்வும் நடைபெற்று, மதிய போசன நிகழ்வு நடைபெறும். இந் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் எமது அன்புத் தெய்வம் காலமான செய்தி அறிந்து உடனே வந்து உதவியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்கள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித் துக் கொள்கின்றோம். முக்கிய குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/4239) (10) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை வீஷ்மன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 132, 2 ஆம் குறுக்குத்தெருவை வதிவிடமாகவும் கொண்ட செல் லத்துரை வீஷ்மன் (07.04.2014) புதன்கிழமையன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை, நாகரத் தினம் தம்பதியரின் மூத்த மகனும், இராசையா - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ஜானகியின் அன்புக் கணவரும், வாசுகி (கனடா), ஜனகன் (ஆஸ்ரேலியா), காலஞ்சென்றவர்களான ராஜ்குமார், சுசிகலா ஆகியோரின் தகப்பனாரும், சந்திரராஜா (கனடா), சந்திரிகா (ஆஸ்திரேலியா), பூரணச்சந்திரா ஆகியோரின் மாமனாரும், காயத்திரி (கனடா), கௌதமன் (ஆஸ்திரேலியா), சித்தாரா (ஆஸ்திரேலியா), பவித்திரா ஆகியோரின் பேரனும், இந்திரா, பேபிகிருஷ்ணா, வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன், மகேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலச்சந்திரன், ஜெயராசா, தேவகி, ரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.05.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி.ப. 3 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*132, 2ம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* தகவல்: **ரா.பூரணச்சந்திரா (மருமகன்)**

# இலங்கையின் தூதுவர்கள் யாழ்ப்பாணம் பார்த்தனர்

யாழ்ப்பாணம், மே 8
வெளிநாடுகளுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் நேற்றையதினம் யாழ். மாவட்டத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டதுடன், இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வெளிநாடுகளுக்குத் தூதுவர்களாக நியமிக்கப்பட்ட 12 பேர் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்திருந்தனர். சவூதி அரேபியாவுக்கான தூதுவர் மொஹமட் ஹூஸைன் மொஹமட், ஆப்கனுக்கான தூதுவர் மரிக்கார் பாவா, பிலிப்பைன்ஸுக்கான தூதுவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க, இந்தியாவுக்கான தூதுவர் பேராசிரியர் சுதர்சன செனவிரத்தன, சிலிக்கான தூதுவர் ராஜித பியதாஸ, மாலைதீவுக்கான தூதுவர் டயஸ், ஜேர்மனிக்கான தூதுவர் கருணாதிலக்க அமுனுகம, சிட்னிக்கான துணைத் தூதுவர் யஷோஜ் அபேநாயக்கா, காரோவுக்கான துணைத் தூதுவர் விஜயரட்ண, துபாய்க்கான மூன்றாம் நிலைச் செயலாளர் டிலுஷன் ஜெயசிங்கி, ஓமானுக்கான மூன்றாம் நிலைச் செயலாளர் பிரதீப் ஆகியோரும், வெளிவிவகார அமைச்சின் தூதரக கற்கை நெறிகளுக்குப் பொறுப்பானவர்களுமே வருகை தந்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் சென்ற இந்தக் குழு அங்கு இராணுவத் தளபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் அவருடனான விருந்திலும் பங்கெடுத்திருந்தது. அதன் பின்னர் யாழ்.மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு வருகை தந்த தூதுவர்கள், நேற்றுக் காலை பல்வேறு இடங்களையும் பார்வையிட்டனர்.

நல்லூர் கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்திய பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையைப் பார்வையிட்டனர். தொடர்ந்து பொது நூலகம், கோட்டை ஆகியவற்றைச் சென்று பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து அரியாலை நாவலடியில் அமைக்கப்பட்டுள்ள இந்திய வீட்டுத் திட்டத்தையும் அவர்கள் பார்வையிட்டனர். யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியையும் சந்தித்துக் கலந்துரையாடல்கள் நடத்திய பின்னர் நேற்று மாலை இங்கிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு புறப்பட்டுச் சென்றனர். (ற-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரு சிறுவரை

இராணுவத்தினரால் உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்று தெரிவித்து முல்லைத்தீவைச் சேர்ந்த பத்துப் பேர் தமிழகத்தின் தனுஷ்கோடிக்கு படகு மூலம் கடந்த திங்கட்கிழமை அகதிகளாகச் சென்றிருந்தனர். அவர்களை கடவுச்சீட்டு இன்றி நாட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டில் புழல் சிறையில் அடைக்குமாறு இராம்நாதபுரம் நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

ஆயினும், புழல் சிறையில் அடைக்கப்பட்டவர்களில் இருவர் சிறுவர்கள் என்பதால், அவர்கள் இருவரும் மீளவும் இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அத்துடன் சிறுவர்களின் தயாரையும் பிணையில் எடுப்பதற்கு பொலிஸாரே விண்ணப்பித்துள்ளனர் என்று தெரியவருகின்றது. (ற-5-10)

### வடக்கு

வழிகள் தொடர்பில் உரிய கவனத்தைச் செலுத்தாதுள்ளது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண சபைக்கு மாதாந்தம் சேர வேண்டிய முத்திரை வரியான சுமார் நான்கு கோடி ரூபா தற்போது மத்திய அரசின் திறைசேரிக்குச் சென்று கொண்டுள்ளது.

பிரபலமான சட்டத்தரணிகள் மற்றும் நீதிபதி ஆகியோரைக் கொண்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கைகளில் வடக்கு மாகாண சபை இருந்தும் கூட, இதுகுறித்து அவர்கள் கவனம் செலுத்தாதுள்ளனர். சட்ட ஆலோசனை, அறிவுரை என்று கூறி காலம் கடத்துகின்றனர். மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை என்று கூறப்படுகின்ற நிலையில்; சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானங்கள் தொடர்பில் வடக்கு மாகாண சபை அக்கறையற்று இருப்பது சரியானதல்ல என்றும் அவர்கள் மேலும் விமர்சித்துள்ளனர். (ற-86)

### மீளவும்

படுகின்றன என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சண். குறிஞ்சிதரன்.

வடக்கின் பொருளாதார நிலைமைகள் குறித்து அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கில் கடந்த ஆண்டு பொருளாதார ரீதியில் தாக்கம் ஏற்பட்டது. அதன் காரணமாகப் பல வர்த்தகர்கள் நட்டங்களை எதிர்நோக்கியிருந்தனர். அத்துடன் வங்கிகளில் பெறப்பட்ட கடன்கள் பெருமளவு செலுத்தப்படாத மாகாணமாகவும் வடக்கு மாகாணம் மாறியிருந்தது. வர்த்தகத்துறையில் ஏற்பட்ட கடுமையான பாதிப்புக் காரணமாக பலர் தலைமறைவாகியிருந்ததுடன், தற்கொலையும் செய்திருந்தனர். பொருளாதார ரீதியில் தளம்பல் நிலையும் காணப்பட்டது. 2013ஆம் ஆண்டின் இறுதியில் கிடைக்கப்பெற்ற தரவுகள் வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தின் வீழ்ச்சியைத் தெளிவாக எடுத்தியம்பின.

இந்த ஆண்டின் முதலாவது காலாண்டில், வடக்கின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சரிவு நிலை மீள எழத் தொடங்கியுள்ளது.

வர்த்தகர்கள் தலைமறைவாகும், தற்கொலை செய்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. வர்த்தகர்களும் தமது நிலையைத் தக்க வைத்துக் கொண்டு மேலெழும்பத் தொடங்கியுள்ளனர்.

வங்கிகளின் கடன்களும் மீளச் செலுத்தப்படத் தொடங்கியுள்ளன. வர்த்தக ரீதியிலான கடன்களும் வங்கிகளில் பெறப்படுகின்றன.

இந்தச் சூழல் வடக்கின் பொருளாதாரம் மீளவும் மேலெழும்புவதற்குரிய அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றது.

இது தொடர்பான தரவுகள் திரட்டப்பட்டு வருகின்றன. விரைவில் புள்ளி விவரங்களுடன் இது தொடர்பான தகவல்கள் வெளியிடப்படும்"- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-5)

### நட்டஈடுகள்

பாதுகாப்பு வலயத்துக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அரசு தரப்பால் முன்வைக்கப்பட்ட யோசனையை ஏற்றுக்கொண்டுள்ள உயர் நீதிமன்றம், அதனைப் பெற்றுக் கொள்பவர்கள் தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், சம்பூர் பிரதேசத்தைச் சேர்ந்தவருமான கு.நாகேஸ்வரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நட்டஈடு, மாற்றுக் காணி தொடர்பான அரசின் திட்டத்துடன் எங்களுக்கு உடன்பாடில்லை. எங்களது காணியின் அளவுக்கு நிகரான அதே வளத்துக்கு நிகரான காணி இவர்களால் ஒரு போதும் தர முடியாது. நட்டஈட்டை எடுத்துக் கொண்டால், உயர் பாதுகாப்பு வலயம் என்று சொல்லப்பட்ட முழுப் பிரதேசத்திற்கும் உரியவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமா அல்லது பொருளாதார அபிவிருத்திக்கு என்று சொல்லி சுவீகரிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரம் நட்டஈடு வழங்கப்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

மேலும் நட்டஈட்டுக்கான தொகை மதிப்பு எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பது யாருக்கும் தெரியாது. இவ்வாறானதொரு நிலையில் இதனை எவ்வாறு பெற்றுக் கொள்வது. இது தொடர்பில் எமது மக்கள் சிந்திக்கவேயில்லை. எம்மைப் பொறுத்த வரையில் மாற்றுக் காணியோ, நட்டஈடோ தேவையில்லை. எமக்குத் தேவையானது எல்லாம் எமது நிலமே" - என்று தெரிவித்தார். (ற-5)

### காற்றோடு

குறித்த நிலத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்களால் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு உயர் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வந்திருந்த அரச சட்டத்தரணி, சம்பூரில் உயர் பாதுகாப்பு வலயத்துக்காக மேற்கொள்ளப்பட்ட சுவீகரிப்பு முயற்சியில் நிலமிழந்த மக்களுக்கு, இழப்பீடு வழங்குவதற்காக 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இலங்கை அரசின் இந்தத் திட்டத்தின்படி, சம்பூரிலிருந்து இடம் பெயர்ந்தோர், தமது கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கு பதிலாக மாற்று நிலங்களைப் பெற முடியும். அதை விரும்பாதோருக்கு நட்டஈட்டுத் தொகை வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆயினும், இவ்வாறு காணிகளை கையகப்படுத்துவது சட்டத்திற்கு மாறான ஒரு செயல் என்று மனித உரிமைகள் சம்பந்தமான வழக்குகளில் முன்னிலையாகும் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்தார்.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் காணி சட்ட விதிமுறைகளின்படி, தனிப்பட்ட நிலத்தை சுவீகரிப்பதற்கு முன்பு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். ஆயினும் இங்கு அவ்வாறான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை. எனவே எதிர் காலத்தில் காணிகளை கையகப்படுத்த வேண்டுமானால் பொதுவாக நடைமுறைப்படுத்தப்படும் சட்ட விதிமுறைகளுக்கு அமைய அதனை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

எனினும் அரச சட்டத்தரணியின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், மாற்று காணிகள் மற்றும் நட்ட ஈடுகள் பெற்றுக்கொள்ள விரும்பும் இடம் பெயர்ந்தோர் சம்பந்தமான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அரச தரப்புக்கு உத்தரவிட்டதுடன், வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூன் 9 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

அன்றைய தினம் இந்த தீர்வு திட்டம் சம்பந்தமாக மனுதாரர்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

### புலம்பெயர்

இலங்கைத் தூதுவர்கள் 12 பேர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு வகையான வளங்கள் காணப்படுகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு குறித்த பிரதேசங்களில் எவ்வாறு முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்து தூதுவர்களுக்கு விளக்கமளித்தோம்.

அவர்கள் வெளிநாடுகளில் உள்ள, யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் இதுகுறித்து விளக்கமளித்து இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்று இந்தக் கலந்துரையாடலில் கோரினேன்.

புலம்பெயர் தமிழர்கள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதன் ஊடாகவே இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள முடியும். இங்கு வந்து முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்குக் கோரிக்கை விடுக்கின்றோம். அதற்கான உதவிகளைச் செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

நான் இந்த மாவட்டத்துக்கு அரச அதிபராகக் கடமையேற்று இரு ஆண்டுகள் கடந்துள்ளன. இங்கு வரும் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் இதே கோரிக்கையை முன்வைத்து வந்தோம். ஆனாலும் இதுவரை புலம் பெயர் தமிழர்களால் பெரியளவிலான எந்தவொரு முதலீடும் மேற்கொள்ளப்படவில்லை. அவர்கள் முதலீடுகளைச் செய்வதற்கு முன்வந்தால் காணிகளை வழங்குவதுடன், உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தயராகவே இருக்கின்றோம்.

இங்குள்ள இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்புகளுக்காக கைத்தொழில்துறை விருத்தி செய்யப்படவேண்டியது அவசியம்.

அதற்கு புலம் பெயர் தமிழர்களின் முதலீடுகள் அவசியம்"- என்று தெரிவித்தார். (ற-5)

### வெருகலில்

தேடுதல் நடவடிக்கையை முடுக்கி விட்டிருந்தனர். வெருகல் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட 4 கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் தேடுதல் நடத்தப்பட்டிருந்த நிலையில், நேற்றைய தினம் வெருகல் பிரதேச செயலர் பிரிவின் 11 கிராமங்களை உள்ளடக்கி பெரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

அந்தப் பகுதிகளில் வழமைக்கு மாறாக இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டதுடன், வீதிகளில் சந்திக்குச் சந்தி இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டன என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். (ற-5)

### 'திடீர்'

தச்சர் எனப் பல்வேறு வகையான பணிகளுக்கு ஆயிரத்து 300 பேர் தேவை என்று பட்டியலிடப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வுக்குச் செல்வோரிடம், அவர்களது தகைமைச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் பெறப்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் யாரால் மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறித்த் விவரங்கள் எதுவும் கூறப்படுவதில்லை. இந்த நடவடிக்கை யாழ்.மாவட்டத்தில் பரவலாக இடம்பெற்று வருகின்றது.

இதுகுறித்து நேற்று யாழ்.அரச அதிபரிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"இந்த விடயம் தொடர்பில் எனக்குத் தெரியாது. இவ்வாறான அரச வேலை வாய்ப்புகள் எவையும் யாழ்.மாவட்ட செயலகத்தால் வழங்கப்படவில்லை. இதுகுறித்த என்னிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### ஜனாதிபதி

மிக்கலாம் என்று பிரபல அரசியல் ஆய்வாளரும், ஊடகவியலாளருமான குசல் பெரேரா கூறியுள்ளார்.

உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்த ஒருவரை, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குப் பெற்ற ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நியமிப்பது சிறந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விக்னேஸ்வரனை அவ்வாறு பொது வேட்பாளராக ஏன் நியமிக்கக் கூடாது? இதுதொடர்பாக பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவை தமது நிலைப்பாட்டை பகிரங்கமாகக் கூற வேண்டும். இதனை அவர்கள் நிராகரிக்கின்றனர் என்றால், தமிழர் என்ற காரணத்தாலா? அல்லது என்ன காரணத்துக்காக நிராகரிக்கின்றனர் என்பதையும் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### பொது

அமைத்து நடத்தப்படும் 'தல்சவென' உல்லாச விடுதியில் சுமார் 3 மணித்தியாலங்கள் சந்திப்பு இடம்பெற்றது. கலந்து கொண்டவர்களுக்கு சிறப்பான மதியபோசனமும் வழங்கப்பட்டது.

#### தளபதியின் உறுதி

"இறுதிப் போரில் கொல்லப்பட்ட வர்களை நினைவுகூரும் வகையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நாளான மே 18ஆம் நாளை பொதுவாகக் கொண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தைக் கடைப்பிடிக்கின்றனர். அதற்கு அனுமதிக்க முடியாது. நீங்கள் உயிரிழந்த பொது மக்களுக்கு அஞ்சலி என்று கூறி பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்துவீர்கள். அதனை ஏற்க முடியாது" என்று கட்டளைத் தளபதி காட்டமாகத் தெரிவித்தார். "நான் பதவியில் இருக்கும் வரையில் பல்கலைக் கழகம் போன்ற பொது இடத்தில் இத்தகைய நிகழ்வுகளை நடத்த இடமளிக்க மாட்டேன்" என்றார் அவர்.

"முள்ளிவாய்க்கால் நாளை ஏன் பல்கலைக்கழகத்தில் கொண்டாடுகிறீர்கள்? உங்கள் உறவுகள் போரில் உயிரிழந்திருந்தால் உங்கள் வீடுகளில் அதனைக் கொண்டாடுங்கள். அல்லது கோயில்களுக்குச் சென்று உரிய முறைப்படி கொண்டாடுங்கள். பொது இடமான பல்கலைக்கழகத்தில் கொண்டாட முடியாது" என்றார் அவர்.

போரில் கொல்லப்பட்ட மாணவர்களின் நினைவாகவே தாம் பல்கலைக்கழகத்தில் நினைவு தினத்தைக் கடைப் பிடிக்கிறார்கள் என்று மாணவர் பிரதிநிதிகள் கூறினர். ஆனால் அதனை கட்டளைத் தளபதி ஏற்றுக்கொள்ளவில்லை. ஏளனத் தொனியுடன் கேட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

பேராசிரியர்களுக்கும் மாணவ ஒன்றியத் தலைவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு பல்கலைக் கழகத்துக்குள் துண்டுப் பிரசுரம் விநியோகித்த சம்பவம் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்றும் மேஜர் ஜெனரல் தெரிவித்துள்ளார். (உ-4)



முல்லைத்தீவு தேராவில் தமிழ் வித்தியாலயத்தின் 15 வயதுப் பிரிவு ஆண்கள் அணி உதைப்பந்தாட்டப் போட்டியில் கோட்டம், வலயம், மாவட்ட மட்டங்களில் முதலிடம் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (த)

# யமாலியா - அன்ரனிஸ் இறுதியாட்டத்துக்கு



கோப்புப்படம்

யாழ்ப்பாணம், மே 8

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட 11 பேர் பங்குபற்றிய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் அண்மையில் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் யமாலியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யமாலியா விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றிமா விளையாட் டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இறுதியாட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (த-23)

## சம்பியனானது நவஜீவன்

யாழ்ப்பாணம், மே 8

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 6.2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)

# ஹொக்கிப் பயிற்றுநர் பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் நான்கு பேர் சித்தி

யாழ்ப்பாணம்,மே 8

யாழ் மாவட்டத்தில் இருந்து நால்வர் இலங்கை ஹொக்கிப் பயிற்றுநர்களுக்கான பரீட்சையில் சித்தி அடைந்துள்ளார்கள்.

இலங்கை ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆசிய ஹொக்கிச் சங்கமும் மலேசியா ஹொக்கிச் சங்கமும் இணைந்து முதல் தடவையாக இலங்கையில் ஹொக்கிப் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாமை நடத்தியுள்ளன.

ஹொக்கிப் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் முதல் தடவையாகத் தற்போது இலங்கையில் நடைபெற்றுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம் ஹொக்கிச் சங்கத்தின் சார்பில் எஸ்.றஜீவன் (உடற் கல்வி டிப்ளோமா பயிற்றுநர்), சி.ஏ.அரவிந்தன் (யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி) மற்றும் யாழ்ப்பாணம் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் சார்பில் எஸ். ஜனப்பிரியன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), ப.தர்மகுமாரன் (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியவர்கள் இப்பயிற்சி முகாமில் கலந்துகொண்டதுடன் எழுத்து மற்றும் செயல் முறைப் பரீட்சைகளிலும் சித்தி அடைந்ததைத் தொடர்ந்து ஹொக்கி மட்டம் ஒன்றின் பயிற்றுநர்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்கள்.

> ஆசிய ஹொக்கிச் சங்கமும் மலேசியா ஹொக்கிச் சங்கமும் இணைந்து முதல் தடவையாக இலங்கையில் ஹொக்கிப் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாமை நடத்தியுள்ளன.

கொழும்பு ரொறிங்டன் பிளேஸில் ஒரு வார வதிவிட முழு நேர பயிற்சி முகாமாக இடம் பெற்ற இப்பயிற்சி முகாமில் இலங்கையில் இருந்து 34 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் சுமிர் எதிரிசிங்கா தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் ஆசிய ஹொக்கிச் சங்கச் செயலாளர் எஸ்.அழகேந்திரா கலந்து கொண்டு பயிற்றுநர் மட்டம் ஒன்றில் சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்துள்ளார். (த-86)

## மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி மன்னாரில்

யாழ்ப்பாணம், மே 8

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டம், கிரிக்கெட், கூடைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டப் போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன. (த-23)

## வென்றது டயமன்ஸ்



வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர்

யாழ்ப்பாணம், மே 8

இலங்கை உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கம் அகில இலங்கை ரீதியில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வவுனியா சீனியர்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## முல்லைத்தீவு முதலிடம்

யாழ்ப்பாணம், மே 8

வடமாகாண ரீதியிலான ஆண், பெண் இருபாலாருக்குமான ரைக் கொண்டோ போட்டிகள் கடந்த வாரம் வவுனியா நகர சபை உள்ளக விளையாட்டு அரங்கில் இடம் பெற்றன.

இதில் ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணி முதலாம் இடத்தையும், யாழ். மாவட்ட அணி இரண்டாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட அணி முதலாமிடத்தையும், முல்லைத்தீவு மாவட்ட அணி 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.

(த-23)

# மருதனார்மடம் இராமநாதன் அணி கூடைப்பந்தாட்டத்தில் சம்பியன்



இராமநாதன் கல்லூரி அணியினர்

வலி வடக்கு மே 8

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப்போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணி வலய சம்பியனாகியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்ட போதிலும் இராமநாதன் கல்லூரி அணியின் கைகளே ஓங்கியிருந்தன.

முதல் பாதி ஆட்டத்தில் இராமநாதன் கல்லூரி அணி 22:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன் னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் களமிறங்கின. எனினும் இராமநாதன் கல்லூரி அணி மீண்டும். முன்னிலை பெற்று 15:06 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி அணி 37:16 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று வலய சம்பியனாகியது. (த-86)

# சிவானந்தா - ஆதிசக்தி இறுதியாட்டத்தில் மோதல்

> ஆதி சக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணிமோதிக் கொண்டது.

யாழ்ப்பாணம், மே 8

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை காலை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

முதலாவது அரை இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் கொற்றவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற மற்றொரு அரையிறுதியாட்டத்தில் ஆதி சக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணிமோதிக் கொண்டது.

இதில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இதிறுயாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (த-23)




கொல்கத்தா அணிக்கெதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர் பிரவீன் தம்பே ஹட்ரிக் சாதனை படைத்தார்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் அபார மான பந்து வீச்சாளராக கலக்கி வரும் தம்பே கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக் கெதிரான போட்டியின்போது அடுத்தடுத்து 2 பந்துகளில் 3 பேரின் இலக்குகளைச் சாய்த்து சாதனைச் சரித்திரத்தில் இடம்பெற்றார்.

இது போன்ற ஒரு சாதனை ஒரு முறைதான் நிகழ்ந்துள்ளது. அதன் பிறகு தம்பே இந்தச் சாகசத்தை 2ஆவது முறையாக நிகழ்த் தியுள்ளார். ஐ.பி.எல். வரலாற்றில் இத்தோடு 12 ஹட்ரிக் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இதில் தம்பே ஹட்ரிக் சாதனை புரிந்த 9ஆவது வீரர் ஆவார். அமித்மிஸ்ரா அதிக பட்சமாக 2008, 2011, 2013 ஆகிய போட்டிகளில் 3 முறை ஹட்ரிக் சாதனை புரிந்துள்ளார்.

யுவராஜ்சிங் அறிமுக ஐ.பி.எல். போட்டியில் 2 முறையும், எல்.பாலாஜி, நிற்னி (2008), ரோஹித் சர்மா (2009), பிரவீன் குமார் (2010), அஜித் சண்டிலா (2012), சுனில் நரைன் (2013), தம்பே (2014) ஆகியோர் தலா ஒரு முறை ஹட்ரிக் சாதனை புரிந்துள்ளனர். (கு)

# டுபாய் கோல்ப் கழகத்தில் டெண்டுல்கருக்கு அந்தஸ்து


சச்சின் டெண்டுல்கர்

டுபாய் கோல்ப் கழகத்தில் கிரிக்கெட் வீரர் சச்சினுக்கு நிரந்தர உறுப்பி னர் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

டுபாயில் உள்ள புகழ்பெற்ற கோல்ப் அமைப்பான எல்ஸ் சச்சினுக்கு தனது அமைப்பின் நிரந்த உறுப்பினர் அந்தஸ்து வழங்குவதாக அறிவித்துள்ளது.

இது பற்றி பேசிய அவ்வமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரான அப் துல் ரகுமான் பல்க்கானாஸ் கூறு கையில்;

விளையாட்டு உலகத்துக்கு சச்சின் செய்த பங்களிப்பு மகத்தானது. அவரது சாதனைகளைப் பாராட்டி இந்தக் கௌரவம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

இந்தச் சிறப்பு உறுப்பினர் அந்தஸ்து பட்டியலில் சச்சினுடன் முன்னாள் முன்னணி கோல்ப் வீரர் ரோரி மெக்லராய், ஹாலிவுட் நடிகர் வில் ஸ்மித் மற்றும் மன்செஸ்ரர் அணியின் முன் னாள் கோல் காப்பாளர் பீற்றர் ஷெமிசெல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (கு)

# மன்செஸ்ரர் சிற்றி- லிவர்பூல் அணிகளிடையே கடும் போட்டி




இங்கிலாந்து பிரீமியர் லீக் உதை பந்தாட்ட தொடரின் 2014ஆம் ஆண்டுக்கான வெற்றி வாய்ப்பு களை மன்செஸ்ரர் சிற்றி அணி திங்கட்கிழமை வெற்றியின் மூலமா கப் பெற்றுக்கொண்டுள்ளது. மன் செஸ்ரர் சிற்றி, செல்சி, லிவர்பூல் ஆகிய அணிகளுக்கிடையில் கடும் போட்டி நிலவி வந்தது. இந்தப் பருவகாலம் நிறைவடைய செல்சி அணிக்கு ஒரு போட்டியும், லிவர் பூல், மன்செஸ்ரர் சிற்றி அணிக ளுக்கு இரண்டு போட்டிகளும் மீதமுள்ள நிலையில் செல்சி அணி 78 புள்ளிகளையும், மன்செஸ்ரர் சிற்றி, லிவர்பூல் அணிகள் தலா 80 புள்ளிகளையும் பெற்றுள்ளன. கோல் வித்தியாசத்தின் அடிப்படையில் மன்செஸ்ரர் சிற்றி அணி முதலிடத் தைப் பெற்றுள்ளது.

சனிக்கிழமை நடைபெற்ற போட்டி யில் மன்செஸ்ரர் சிற்றி அணி 3:2 என்ற கோல் கணக்கில் எவேர்ட்டன் அணியை வெற்றி பெற்று முத லிடத்தைக் கைப்பற்றியது. செல்சி அணி தனது சொந்த மைதானத்தில் நோர்விச் சிற்றி அணியுடன் கோல் கள் அற்ற சமநிலை முடிவைப் பெற்ற தன் மூலம் முதலிட வாய்ப்புகளை இழந்துள்ளது. இருப்பினும் அடுத்து வரும் போட்டிகளில் மன்செஸ்ரர் சிற்றி, லிவர்பூல் அணிகள் தோல் வியைச் சந்தித்து செல்சி அணி மீதமுள்ள போட்டியை வெற்றி பெற் றால் வாய்ப்புக்கள் உள்ளன. இந்த நிலையில் புள்ளிகளில் சமநிலையில் உள்ள மன்செஸ்ரர் சிற்றி ,லிவர்பூல் அணிகள் வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள போராடும் நிலை உள்ளது. லிவர்பூல் அணி இரண்டு போட்டி களில் வெற்றி பெற்றாலும் 9 இற்கும் அதிகமான கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றாலே முதலிடத்தைப் பிடிக்க முடியும். (கு)

# தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தது இலங்கை




அயர்லாந்து அணிக்கு 220 ஒட் டங்களை வெற்றி இலக்காக நிர் ணயித்த ஆசிய நடப்புச் சம்பியன் இலங்கை அணி, 79 ஓட்டங் களால் முதலாவது ஒருநாள் போட் டியை வெற்றி கொண்டது.

5 ஓட்டங்களைப் பெறுவதற்குள் அடுத்தடுத்து இரு இலக்குகளைப் பறிகொடுத்து ஆரம்பத்திலேயே தடுமாறிய அயர்லாந்து அணி தன் சொந்த மண்ணில் முதல் போட் டியை பறிகொடுத்தது.

அயர்லாந்துக்கு கிரிக்கெட் சுற் றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் அயர் லாந்து அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி டுபி ளினில் நேற்று முன் தினம் நடை பெற்றது.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை அணி எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் அவ்வணியுட னான ஒரேயொரு 20/20, 5 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டி கள் கொண்ட தொடரில் மோத வுள்ள நிலையில் அதற்கு முன்ன தான அயர்லாந்துடனான இத் தொடர் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற தொடரின் முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து களத் தடுப்பைத் தேர்வு செய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 219 ஓட்டங்களைப்பெற்றது.


உப்புல் தரங்கவுடன் அணியின் தொடக்க வீரராகக் களமிறங்கிய குஷல் ஜனித் பெரேரா ஓட்டமெத னையும்பெறாது ஆட்டமிழந்துஅதிர்ச் சியளிக்க, அடுத்து வந்த அணியின் உபதலைவர் திரிமான்னே 8 ஓட் டங்களுடன் அரங்கு திரும்பினார். இவ்வாறு ஆரம்பமே அடுத்தடுத்து இரு இலக்குகளைப் பறிகொடுத்து ஆட்டம் கண்ட இவ்வணிக்கு நிதா னமான ஆட்டத்தை வெளிப்படுத் திய உப்புல் தரங்க (24), சந்திமால் (39), அணித்தலைவர் மத்தியூஸ் (30), அஷ்கான் பிரிஜன்யன் (31), ஆகியோர் நம்பிக்கை அளிக்க ஆட்டமிழப்பின்றி 42 ஓட்டங் களைப்பெற்ற நுவான் குலசேகர மற்றும் அஜந்த் மெண்டிஸ் (18) ஆகியோர் அணியின் ஓட்ட எண் ணிக்கையை ஸ்திரப்படுத்தினர்.

> ஆசிய நடப்புச் சம்பியன் இலங்கை அணி, 79 ஓட்டங்களால் முதலாவது ஒருநாள் போட் டியை வெற்றி கொண்டது.

இதனையடுத்து 220 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய அயர்லாந்து 39.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 140 ஓட்டங்களைப் பெற்று தோல் வியைத் தழுவியது.

5 ஓட்டங்களைப்பெறுவதற்குள் 2 இலக்குகளைப் பறிகொடுத்த இவ் வணிக்கு அணித்தலைவர் வில் லியம் போர்ட்டர்பீல்ட் (37), நீயல் ஓ பிரைன் (33), ஜோர்ஜ் டொக் ரெல் (18), மெக்ஸ் சொரன்சன் (17) ஆகியோர் நம்பிக்கை அளித்த போதிலும் ஏனைய வீரர்கள் 10 ஓட்டங்களைக்கூட தாண்டாது ஏமாற்றமளித்தனர். (கு)

# மக்ஸ்வெல்,மில்லர் முழக்கம் வென்றது கிங்ஸ் லெவன் பஞ்சாப்



மக்ஸ்வெல்

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வீரர்கள் கட்டாக்கில் ஓட்ட மழை பொழிய மக்ஸ்வெல் வாண வேடிக்கை காட்ட நொந்து நூலாகினர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பந்து வீச்சாளர்கள்.

சென்னை சுப்பர் கிங்ஸ்- கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகளுக்கிடை யேயான ஐ.பி.எல். இன் 29 ஆவது ஆட்டம் நேற்றுகட்டாக்கில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணித் தலைவர் பஞ்சாப்பின் பலத்தை சரியாக மதிப்பிடாது களத்தடுப் பைத் தேர்வு செய்தார். இத் தெரிவின் வலியைப் பின்னர் டோனி உணர்ந்திருப்பார்.

பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சேவாக் -மந்தீப் சிங் ஜோடி களம்புகுந்தது. சேவாக் பவுண்டரியுடன் தனது கணக்கை ஆரம்பித்து வைத்தார். மன்தீப் சிங் 3 ஓட்டங்களுடன் வெளியேற சற்று நேரத்தில் சேவாக்கும் 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார்.

இதனை தொடர்ந்து மக்ஸ்வெல் - மில்லர் இணைந்தனர் ஆரம்பத்தில் ஒன்று, இரண்டு என ஓட்டங்களைச் சேர்த்த மக்ஸ்வெல் 11 ஆவது பந்துப் பரிமாற்றத்துடன் தனது உருத்திர தாண்டவத்தை ஆரம்பித்தார்.

இருவரும் சென்னைப் பந்து வீச்சாளர்கள் எவரையும் விட்டு வைக்கவில்லை. மாறிமாறி பந்து எல்லைக் கோடுகளைத் தாண்டிய வண்ணம் இருந்தன. டோனி யும் களத் தடுப்பு வியூகங்களையும், பந்து வீச்சாளர்களை யும் மாற்றிப் பார்த்தும் அவர்களின் அதிரடியைக் கட்டுப் படுத்த முடியவில்லை. இருவரது துடுப்பு மட்டை களில் பட்ட பந்துகள் அவர்களையும் கேட்காமலேயே எல்லைக் கோட்டுக்கு மேலாகவும், கீழாகவும் தாண்டிய வண்ணம் இருந்தன. இவர்களது அதிரடியால் 12 ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே 100 ஓட்டங்கள் தொட்டது பஞ்சாப். ஜடேஜா வீசிய 15 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் மில்லர் ஒரு ஆறு.ஒரு நான்கு என விளாசினார். அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் மக்ஸ்வெல் 3 ஆறு ஓட்டங்கள் வெளுத் தார். இந்தப் பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப் பந்தில் மில்லர் ஆட்டமிழந்தார். 32 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 47 ஓட்டங்கள் பெற்றார். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 135 ஓட்டங்களைப் பெற்றனர்.

அடுத்து மக்ஸ்வெல்லுடன் பெய்லி இணைந்தார். இச் சூழ்நிலையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடி வாணவேடிக்கை காட்டிய மக்ஸ்வெல் 38 பந்துகளில் 8 ஆறு ஓட்டங்கள்,6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 90 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட மிழந்தார். தொடர்ந்து 5 ஆவது இலக்குக்காக களமிறங்கிய ஜோன்சன் - பெய்லியுடன் இணைந்து இறுதிக் கட்ட அதிரடியில் இறங்கினார். இவர்கள் இருவரும் இணைந்து 16 பந்துகளில் 49 ஓட்டங்களைப் பெற்றனர். பெய்லி 13 பந்துகளில் 6 நான்கு ஓட்டங் கள்.2ஆறு ஓட்டங்களுடன் 40 ஓட்டங்களுடனும், ஜோன்சன் 11 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர். இறுதியில் 20 பந்துப் பரி மாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 231 என்ற ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை எட்டியது.

பந்து வீச்சில் ஹீல் பெனாஸ், சிமித் ஆகியோர் தலா ஓர் இலக்கையும், மோகித் சர்மா 2 இலக்கையும் கைப்பற்றினர்.

அடுத்து 232 என்ற இமாலய இலக்கைத் துரத்தத் தொடங்கிய சென்னை அணிக்கு சிமித் (6) ஏமாற்றமளிக்க அடுத்து மக்கல முடன் ஜோடி சேர்ந்த சுரேஸ் ரெய்னா ஓரளவு நம்பிக்கை தரும் வகையில் துடுப்பெடுத்தாடினாலும்,ஓட்டங்களை விரைவாக பெறவேண்டி இருந்ததால் அவசரப்பட்டு சென்னை அணியின் இலக்குகள் விரைவாக இழக்கப்பட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களை பெற்றது. இதனால் பஞ்சாப் அணி 44 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. டி.பிளர்சஸ் 52 ஓட்டங்களையும் டோனி 23 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் சன்டீப் சிங்,மக்ஸ்வெல்,ரிசி தவான் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் ஜோன்சன் இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மக்ஸ் வெல் தெரிவு செய்யப்பட்டார்.

(400)

# இனி ஐ.பி.எல். ஆடமாட்டேன்

பெங்களூர் அணிக்காக விளையாடும் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், இந்த ஐ.பி.எல். தொடர், தான் விளையாடும் கடைசி தொடராக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் சுழல் வித்தைக்காரர் என அழைக்கப்படும் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கடந்த 50 பந்துப்பரிமாற்ற உலகக் கிண்ணத்தில் கடைசியாக விளையாடினார். அதன் பிறகு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் பெங்களூர் றோயல் சலஞ்சாஸ் அணிக்காக விளையாடி வரும் முத்தையா. 7ஆவது ஐ.பி.எல் தொடரின் ஒரு போட்டியில் விளையாடி யுள்ளார்.

ஐ.பி.எல் தொடரின் மூத்த வீரர்களில் ஒருவரான முத்தையா இந்த ஐ.பி.எல் 7ஆவது தொடர் எனக்கு கடைசி தொடராக இருக்கலாம் என்று கூறியுள்ளார். மேலும் அவர் கூறுகையில், ஓய்வு பெற்ற பிறகு சாதிக்க ஒன்றும் இல்லை. இந்திய அணியில் திறமை மிக்க சுழல் பந்து வீச்சாளர்கள் உள்ளனர். ஹாபஜன் சிங் மீண்டும் அணியில் விளையாடுவதன் மூலம் அவரது வழக்கமான விளையாட்டு தொடர வேண்டும்.

மேலும் 11 பேர் கொண்ட அணியில் ஒரே நேரத்தில் இரு சுழல் பந்து வீச்சாளர்கள் இருப்பது சாத்தியமில்லை. ஆனால் அஸ்வின், ஜடேஜா என இருவரும் கடந்த இரண்டு வருடமாக அசத்தலாக விளையாடி வருகின்றனர் என்று கூறியுள்ளார்.

(த)

# கம்பீர் - உத்தப்பா அதிரடி டெல்லியை வென்றது கொல்கத்தா

கௌதம் கம்பீர் - ரொபின் உத்தப்பா அதிரடி ஆட்டத்தால் டெல்லி டேர்டெ வில்ஸ் அணியை 8 இலக்குகளால் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது கொல் கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

ஏழாவது ஐ.பி.எல். தொடரின் இரண்டாம் கட்டப் போட்டி கள் இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று டெல்லியில் இடம்பெற்ற 28 ஆவது ஆட்டத்தில் பீற்றர்சன் தலைமையிலான டெல்லி டேர்டெவில்ஸ் அணியும், கம்பீர் தலைமையிலான கொல்கத்தா அணி யும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. இதனடிப்படை யில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி முரளி விஜய், தினேஷ் கார்த்திக், டுமினி மற்றும் யாதவ் ஆகியோரின் உதவியுடன் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக முரளி விஜய் 24 ஓட்டங்களையும் தினேஷ் கார்த்திக் 36 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்ததுடன் டுமினி, யாதவ் ஆகியோர் ஆட்ட மிழக்காது முறையே 40, 26 ஓட்டங்க ளைப் பெற்ற னர். கொல்கத்தாவின் பந்து வீச்சில் ஜக்கலிஸ் ,யாதவ், சொகைப் அலி ஹசன் மற் றும் சுனில் நரைன் ஆகியோர் தலா ஒரு இலக்கை யும் கைப்பற்றினர்.



கம்பீர்

இதனையடுத்து துரத்திப் பிடிக்கக் கூடிய வெற்றி இலக் காகிய 160 ஓட்டங்களைப் பெறுவதற்கு ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களாக களமிறங்கிய ரொபின் உத்தப்பா, கௌதம் கம்பீர் ஆகியோர் நல்லதொரு அடித் தளத்தை இட்டு கொல்கத்தா அணியின் வெற் றியை இலகுவாக்கினர். இருவரும் இணைந்து அதிரடியாகத் துடுப்பெடுத் தாடிய வேளை 12 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் அணி 106 ஓட்டங் களைப் பெற்றிருந்த போது 47 ஓட்டங்களுடன் ரொபின் உத்தப்பா ஆட்டமிழந்து 3 ஓட்டங் களால் அரைச் சதம் அடிக்கும் வாய்ப்பை கைநழுவ விட்டார்.

இவரைத் தொடர்ந்து பான்டே கம்பீருடன் இணைந்து துடுப்பெடுத்தாடிய வேளை 56 பந்து களில் 5 நான்கு ஓட்டங்கள்.2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 69 ஓட்டங்களுடன் கம்பீர் வெளி யேற்றப்பட்டார்.

தொடர்ந்து பான்டேயும், கலீஸ்"ம் இணைந்து மேலதிக இலக்குகள் இழப்பின்றி 18.2 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இவ் வெற்றியின் மூலம் 3 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது கொல்கத்தா அணி. டில்லியின் பந்து வீச்சு சார்பாக பர்னல் இரு இலக்குகளைக் கைப் பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக கௌதம் கம்பீர் தெரிவு செய்யப்பட்டார்.

(400)

ANANDA HOMES AND CONSTRUCTIONS
சாவகச்சேரி


உங்கள் இல்லத்தைத் தரமாக அமைத்துத்தர

1. சாதாரண வீடு 16 இலட்சத்திலிருந்து
( 3 அறை, ஹோல், குசினி உட்பட)
2 . மாடி வீடு 35 இலட்சத்திலிருந்து
( 4 அறை, ஹோல், குசினி உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை
2 லட்சத்திலிருந்து
4.'சுற்றுமதில் அமைத்தல்
5. கடை கட்டடத்தொகுதி அமைத்தல்

குறிப்பு: 1. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்
2. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

021 2057705, 078 6155929





அடிப்படை
ஆங்கிலம்

அடிப்படை ஆங்கில அறிவில்லாதவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் எழுத,வாசிக்க எளிமையாக உரையாட விரும்புவோர் வயதுவேறுபாடின்றி இணையமுடியும்.

பயிற்சிநெறி ஆரம்பம் - 12.05.2014 திங்கள்

பிரிவு 1 : காலை 08.00-09.00 | பிரிவு 2 : மு.ப 11.00-12.00
பிரிவு 3 : பி.ப 03.00-04.00 | பிரிவு 4 : மாலை 04.00-05.00

வாரத்தில் 3 நாட்கள் பயிற்சி இடம்பெறும்.

Note:- ஒரு பிரிவில் 16 பேர் மட்டும். பயிற்சியில் இணையும் அனைவருக்கும் புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்.

SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

ஐரோப்பிய செங்கன் நாடுகளுக்குரிய விசா வெறும் 10 இலட்சம் ரூபாவே எம்மால் மட்டுமே இது சாத்தியமாகும்

1. இத்தாலி, ஜேர்மனி, சுவிஸ்,பிரான்ஸ்.... போன்ற 21 நாடுகளுக்கான விசா, வெறும் 10 இலட்சம் ரூபாயுடன் விரைந்து வாருங்கள்.
2. சைப்பிரஸில் ஆண்,பெண் இருபாலாரும் படித்து உழைக்க வெறும் 5 இலட்சம் போதும்.
3. U.K இல் படிக்க உழைக்க IELTS தேவையில்லை. (யாவும் நிபந்தனைக்குட் பட்டது.)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 0215689090



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.